

# கைத்தறி விற்பனையில் சாதனை

கண்ணைக் கவரும் வண்ணத் துணிகள் நிறைந்த கைத்தறிக் கண்காட்சியின் நிறைவு விழா மே-8ந் தேதி நடந்தது.

சென்னை பாந்தியன் ரோட்டில் 29-வது கைத்தறிக் கண்காட்சி கடந்த ஒரு மாதமாக நடைபெற்றது. அதில் தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு கைத்தறி நிறுவனங்கள் பங்கு கொண்டன.

கைத்தறி ஆலோசனைக் குழுத் தலைவர் திரு அனகாபுத்தூர் இராமலிங்கம் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

விழாவுக்கு மாண்புமிகு கல்வி மற்றும் கைத்தறித் துறைஅமைச்சர் திரு செ.அரங்கநாயகம் அவர்கள் தலைமை தாங்கினார். அப்போது அவர் பேசுகையில்,

''இந்த ஆண்டு கடும் வறட்சியால் கைத்தறிக் கண்காட்சி, சென்னையில் மட்டும் நடந்துள்ளது. வறட்சியால் விவசாயிகள், நெசவாளிகள், வியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளனர். இந்த நிலையிலும் கூட்டுறவு நிறுவனங்களும், கைத்தறிச் சங்கங்களும் பெருமைப்படுவதற்கு ஏற்ற வகையில் கண்காட்சியில் துணிகள் விற்பனையாகி உள்ளன.

''கடந்த ஆண்டு தமிழ்நாடு முழுவதும் விற்பனைஆனதைவிட இந்த ஆண்டு அதிக அளவில் விற்பனையாகி உள்ளது. அதற்குக் காரணம் ரூ. 10 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளை புரட்சித் தலைவர் அரசு எடுத்து நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்கியது தான்''

விழாவில் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் பேசியதாவது;

''விவசாயத்திற்கு அடுத்தபடியாக மக்கள் அதிக அளவில் ஈடுபடுவது நெசவுத் தொழில் ஆகும். மத்திய அரசு இந்தியா முழுவதிலும் தொழில் துறையில் பின்தங்கி உள்ள மாவட்டங்களை ஏ.பி.சி என்று பிரித்து, 118 மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்துள்ளனர். அதில் தமிழ்நாட்டிலுள்ள ஒரு மாவட்டம் கூட இடம் பெறவில்லை.

''தமிழக அரசு திண்டுக்கல், புதுக்கோட்டை ஆகிய நகரங்களில் தொழிற்பேட்டை அமைப்பதற்கு மத்திய அரசின் அனுமதியைக் கேட்டுள்ளது''.

விழாவில் மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு எஸ்.எல்.குரானா கூறியதாவது:

''கைத்தறித் துணிகளில் புதிய டிசைன்களைப் போடவேண்டும். நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டும்.

தமிழ்நாட்டில் பெரியதொழிற்சாலைகள் ஏற்படுத்த வேண்டும் என்று மத்திய அரசிடம் கேட்டுக் கொள்வேன். இதுபற்றி டெல்லியில் நடந்த ஆளுநர்கள் மாநாட்டில்கூட முன்பு ஒரு தடவை பேசியிருக்கிறேன்''

விழாவில் சிறப்பாகப் பணியாற்றிய 15 கைத்தறிச் சங்கங்களுக்கு ஆளுநரின் துணைவியார் திருமதி இந்திரா பரிசுகள் வழங்கினார்.

இறுதியில் கைத்தறித் துணை தனி அலுவலர் திரு மா. ... ராஜ் அவர்கள் நன்றி கூ...

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2014
ருத்ரோத்காரி — வைகாசி 2
மலர்: 13 16-5-1983 இதழ்: 22

அட்டையில்....

27-4-83 அன்று ஆந்திர
உள்ள பிரம்மகாரி மடம் ...
நடைபெற்ற " தெலுங்கு
தொடக்க விழாக் கா...



# சென்னைக்குக் கிருஷ்ணா நதி நீர் உடன்படிக்கை

## — மாண்புமிகு முதல்வர்

**கிருஷ்ணா நதியிலிருந்து சென்னை நகருக்கு குடிநீர் கொண்டு வருவது சம்பந்தமாக ஆந்திர மாநில அரசுடன் ஏற்பட்ட உடன்படிக்கை பற்றி தமிழ்நாடு சட்டமன்ற விதி 106 (i)ன் கீழ் அளித்த விவர அறிக்கை.**

கிருஷ்ணா நதியிலிருந்து 15 டி. எம். சி. தண்ணீரை சென்னைக்கு குடிநீர் வசதிக்காகக் கொண்டுவருவதில் ஆந்திர அரசுக்கும், தமிழக அரசுக்கும் இடையே ஓர் இறுதி ஒப்பந்தம் 18—4—1983 அன்று ஏற்பட்டுள்ள தென்பதை முன்பே இந்த அவையில் அறிவித்தேன். இந்த அவையிலுள்ளவர்களும், சென்னை நகர மக்களும், தமிழக மக்களனைவரும் மகிழ்வடையும். இந்த ஒப்பந்தம் ஒரு வரலாற்றைப் பின்னணியாக கொண்டதும், வரலாற்றுச் சிறப்புடையதுமாகும். நானும், ஆந்திர முதலமைச்சரும் கையொப்பமிட்ட இந்த ஒப்பந்தம் ஒரு நூறாண்டு கால முயற்சியின் முத்தாய்ப்பாகும். யார் யார் எப்படியெல்லாம் இந்த நல்ல திட்டத்திற்கு முயற்சி செய்தார்கள், உதவினார்கள் என்பதையெல்லாம் மீண்டும் நன்றியோடு நினைவு கூறும் வகையில் அந்த நிகழ்ச்சிகளைச் சுருக்கமாக உங்கள் முன்பு எடுத்துக்கூற விரும்புகிறேன்.

2. சென்னை நகருக்குக் குடிநீர்த் தேவைகளைப்
த்தி செய்ய கிருஷ்ணா நதியிலிருந்து நீர் வழங்கும்
ம் பற்றி முதன்முதலாகக் கருத்தை வெளியிட்ட
ற கர்னல் எல்லிஸ் என்ற ஆங்கிலேயரைச்
881ஆம் ஆண்டில் அவரால் இந்தத் திட்டம்
வகுக்கப்பட்டது. கிருஷ்ணா நதியை
ன் இணைத்து வழிநெடுகிலும் நீர்ப்
டுத்துவதையும், சென்னை நகருக்கு
யும் இத்திட்டம் முக்கிய அம்சங்
. இத்திட்டம் நிறைவேற்றப்
ல்பட்டு, தென்னாற்காடு
னவசதி பெற்றிருக்கும்.
ம் அப்போது இதைப்
பற்றி நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. பிறகு, 1947-ல் சென்னை மாகாண அரசு ஒரு முழுமையான திட்டத்தை தயார் செய்து மத்திய அரசுக்கு சமர்ப்பித்தது. இதுதான் கிருஷ்ணா—பெண்ணாறு திட்டம் என்பதாகும். இத்திட்டம் செயல்படுத்தப்பட்டிருந்தால் தற்போதைய ஆந்திர மாநிலத்தில் பிற்பட்ட பகுதிகளாகிய இராயலசீமா, மேற்கு கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர், நெல்லூர் ஆகிய மாவட்டங்களிலும், தமிழ் நாட்டில் செங்கல்பட்டு மாவட்டத்திலும் மொத்தமாக 36 இலட்சம் ஏக்கர் நிலங்கள் பயனடைந்திருக்கும். இது தவிர, இத்திட்டத்தின் மூலம் சென்னை நகருக்கும் தேவையான குடிநீர் கிடைத்திருக்கும். ஆனால் அதுவும் நிறைவேறவில்லை.

3. கர்நாடகம், மகாராஷ்டிரம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கிடையே கிருஷ்ணா நதிநீர்ப் பங்கீடு குறித்து பிரச்சினைகள் ஏற்பட்டன. 1951-ல் கிருஷ்ணா நதிநீர்ப் பங்கீடு பற்றி மத்திய திட்டக்குழு ஒரு முடிவை அறிவித்தது. அதில், தமிழ் நாட்டின் பாசனத் தேவைகளும், சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையும் இடம்பெற்றிருந்தன. இருப்பினும் இந்த முடிவை மற்ற மாநிலங்கள் ஏற்றுக்கொள்ள வில்லை. பின்னர், மத்திய அரசால் 1953-ல் கிருஷ்ணா, கோதாவரி ஆகிய ஆறுகளைப் பயன் படுத்தும் திட்டங்களைப் பரிசீலிப்பதற்காக நியமிக்கப் பட்ட 'கோஸ்லா கமிட்டி' கொடுத்த அறிக்கையில், சென்னை நகரக் குடிநீர்த் திட்டமும் அடங்கியிருந்தது. 1956-க்குப் பிறகு மத்திய அரசு, கிருஷ்ணா, கோதாவரி நதிகளில் கிடைக்கும் நீரைப் பற்றி ஆராய குல்ஹாத்தி கமிஷனை நியமித்தது. தமிழ்நாடு அரசு, இக்கமிஷன் முன்னால் தனது பாசனம் மற்றும் குடிநீர்த் தேவை களைப் பற்றி விளக்கியுள்ளது. இக்கமிஷனின் அறிக்கையில் கிருஷ்ணா ஆற்றில் கட்டப்பட்டுவரும் நாகார்ஜுன சாகர் நீர்த்தேக்கத்திலிருந்து சென்னைக்

ஒரு கால்வாய் அமைத்து 15 டி. எம். சி. நீர் சென்னைக் குடிநீர்த் தேவைக்காகக் கொடுக்கவேண்டு மென்று பரிந்துரைத்தது.

4. 1963ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 23ஆம் தேதியன்று மத்திய அரசின் பாசன அமைச்சர் திரு ஹபீஸ் முகம்மது இப்ராஹிம் அவர்கள் மகாராஷ்டிரம், கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களும் சென்னை நகரின் குடிநீருக்காக ஆண்டொன்றுக்கு தலா 5 டி. எம். சி. தண்ணீர் தரச் சம்மதித்துள்ளதாக நாடாளுமன்றத்தில் அறிவித்தார். இந்த அறிவிப்பின் தொடர்ச்சியாக 1965ஆம் வருடம் 'பெண்ணாற்றில் சோமசீலா நீர்த்தேக்கம் கட்டுவது பற்றித் திட்டமிடும் போது சோமசீலா திட்டத்திலிருந்து சென்னைக்கு முதலில் 5 டி. எம். சி. தண்ணீரைக் கொடுக்கவேண்டும் என்றும், பிறகு கிருஷ்ணா ஆற்றிலிருந்து பெண்ணாற்றுக்கு இணைப்பு ஏற்படும்போது மீதமுள்ள 10டி.எம்.சி. தண்ணீரைக் கொடுக்க வேண்டும் என்றும் தமிழக அரசு கேட்டுக்கொண்டதை அன்றைய ஆந்திர அரசு ஏற்றுக் கொண்டது. ஆந்திர மாநில பொதுப்பணித் துறை அமைச்சர் திரு ஏ.சி. சுப்பா ரெட்டி அவர்கள் அகில இந்திய காங்கிரஸ் தலைவராகயிருந்த பெருந்தலைவர் திரு காமராசர் அவர்களுக்கு 25 4-1965 நாளிட்ட கடிதம் மூலம் இதனைத் தெரிவித்திருந்தார். அதன்பின் இதுபற்றி அதிகாரிகள் மட்டத்தில் ஒரிரு முறை பேச்சுவார்த்தை நடந்தும் பலனேதுமில்லை. அப்போது ஆந்திராவைத் தவிர்த்து மற்ற மாநிலங்களுடன் சென்னை குடிநீர்த் தேவை பற்றி பேசப்பட்டதாகத் தெரியவில்லை. 15—11—1967 அன்று சென்னை நகருக்கு 15 டி.எம்.சி தண்ணீர் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைத் துரிதப் படுத்தும்படி மைய அரசின் பாசனத்துறை செயலாளருக்கு ஒரு கடிதம் தமிழக அரசிடமிருந்து அனுப்பப் பட்டது.

5. கிருஷ்ணா நதி பாயும் மாநிலங்களான மகராஷ்டிரம், கர்நாடகம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களிடையே அந்த நதியின் நீரைப் பங்கீடு செய்து கொள்வது சம்பந்தமான பிரச்சினை நடுவர் மன்றத்துக்கு விடப்பட்டிருப்பதாக 1968 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் செய்திகள் வந்தன. 10-4-1969 அன்று இந்தப் பிரச்சினை நடுவர் மன்றத்துக்கு விடப் பட்டதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. இந்த நடுவர் மன்றம் கிருஷ்ணா நதிநீரை அது பாயும் மாநிலங்களான மகாராஷ்டிரம், கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிடையே எந்தெந்த அளவுக்குப் பிரித்துக்கொள்ளவேண்டும் என்பதை முடிவு செய்வதற்காகவே நியமிக்கப்பட்டதால் கிருஷ்ணா நதி பாயாத மாநிலமான தமிழ்நாடு அந்தப் பிரச்சினையில் சம்பந்தப்படவில்லையென்றும், ஆகவே தமிழ்நாடு அதில் ஒரு வாதியாக (Party) கருதப்படமுடியாது என்றும், எனவே அந்த நடுவர் மன்றத்தின் முன் தமிழ் நாட்டின் சார்பாக தமிழக அரசு தன்னை சேர்த்துக் கொள்ளும்படி கேட்க வேண்டியதில்லையென்றும் அன்றைய முதல்வர் திரு கருணாநிதி அவர்களின் தலைமையில் இருந்த அரசு முடிவு செய்தது. சென்னை நகரத்திற்கு 15 டி.எம்.சி. தண்ணீர் தருவது பற்றிய கோரிக்கையை நடுவர் மன்றத்தின் முன் எழுப்ப வேண்டியஅவசியம் இல்லையென்றும், அதற்குப் பதிலாக ஏற்கெனவே (1963-ல்) ஆந்திரம், மகாராஷ்டிரம், கர்நாடகம் ஆகிய மூன்று மாநிலங்களும் 15 டி.எம்.சி. தண்ணீரை சென்னைக்குத் தருவது பற்றி ஒப்புக் கொண்டதை அப்படியே தொடர்ந்து நீடிக்க ஏற்பாடு செய்யும்படியும், அதற்கேற்ப சம்பந்தப்பட்ட மாநிலங்கள் சென்னைக்குத் தண்ணீர் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யும்படியும் மைய அரசுக்கு கடிதம் எழுதுவதே போதும் என்றும் 20—10—1969 இல் முடிவு செய்யப் பட்டது. இந்த முடிவுகளையொட்டி 5-12-1969 அன்று மைய அரசுக்குக் கடிதம் எழுதப்பட்டது. அதாவது

கிருஷ்ணா நதி தமிழ்நாட்டிற்குள் பாயாததாலும், சென்னை நகருக்கான குடிநீர்த்தேவையை கிருஷ்ணா நதிநீர்ப் பங்கீடு பிரச்சினையாக எழுப்புவதற்கு அடிப்படை இல்லையென்றும் எனவே தமிழ்நாடு அந்தப் பிரச்சினையில் தன்னை ஒரு வாதியாக சேர்க்க வேண்டியதில்லை என்றும் அப்போது முடிவு செய்யப்பட்டது.

6. 1951—ல் மத்திய திட்டக்குழு கிருஷ்ணா நதியிலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டுவருவதை கிருஷ்ணா நதிநீர்ப் பயன்படுத்தும் திட்டங்களில் ஒன்றாகக் குறிப்பிட்டது; 1953 இல் நியமிக்கப்பட்ட 'கோஸ்லா கமிட்டி' சென்னை நகரக் குடிநீர்த் திட்டத்தைப் பரிந்துரைத்தது; 1956 இல் நியமிக்கப் பட்ட குல்ஹாத்தி கமிஷன் கிருஷ்ணா நதியிலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டுவரும் திட்டத்தை வலியுறுத்தி, சென்னைக்குக் குடிநீர் கொண்டுவருவதற்கான பல திட்டங்களில், கிருஷ்ணா திட்டம்தான் மிகவும் சிறப்பானது எனக் குறிப்பிட்டது. இப்படியெல்லாம் நடந்திருந்தும் 1969 இல் கிருஷ்ணா நதிநீர்ப் பிரச்சனைக்கு நடுவர் மன்றம் நியமிக்கப்பட்ட போது மட்டும் ஏன் இந்தப் பிரச்சினையை அதன்முன் கொண்டுபோக வேண்டிய அவசியம் இல்லை என முடிவு செய்யப்பட்டது எனத் தெரியவில்லை. தவறான ஆலோசனையின்மீது எடுக்கப்பட்ட இந்த முடிவு கிருஷ்ணா நதி நீரைச் சென்னைக்குக் கொண்டு வருவதற்கான ஒப்பந்தம் ஏற்படுவதில் உண்டான கால தாமதத்திற்கு ஒரு முக்கியமான காரணம் எனக்கூறலாம்.

7. 1969 இல் இவ்வாறு முடிவு செய்யப்பட்ட பின் 1972 வரை சென்னைக்குக் கிருஷ்ணா நீர் கொண்டு வருவதுபற்றி அன்றைய தமிழக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.


8. அதன்பின், 11—3—1972 அன்றுதான் அப்போதைய முதலமைச்சர் திரு கருணாநிதி அவர்களால் மத்தியஅரசின் நீர்ப்பாசனத்துறை அமைச்சருக்கும் (டாக்டர் கே. எல். ராவ்) மத்திய அரசின் திட்ட அமைச்சருக்கும் (திரு சி. சுப்பிரமணியம்) நிலைமையை விளக்கி ஆந்திர, கர்நாடக, மகாராஷ்டிர மாநிலங்கள் ஏற்கெனவே ஒப்புக்கொண்டபடி கிருஷ்ணா நதியிலிருந்து 15 டி.எம்.சி. தண்ணீரைச் சென்னைக்குக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யும்படி அன்றைய தமிழக அரசால் கடிதம் எழுதப்பட்டது. இந்தக் கடிதத்தில் சென்னை நகரத்துக்கு அப்போது நாளொன்றுக்கு 37 மில்லியன் காலன் தண்ணீர்கிடைப்பதாகவும், 2001-வது ஆண்டில் 105 மில்லியன் காலன் தண்ணீர் தேவைப்படும் என்றும், வீராணம் திட்டத்தின் மூலம் 40 மில்லியன் காலன் தண்ணீர் கிடைக்குமென்றும், எனவே எதிர்காலத் தேவையை உத்தேசித்து விரைவில் கிருஷ்ணா நதியிலிருந்து 15 டி. எம். சி தண்ணீரைச் சென்னைக்குக் கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்யும்படியும் கூறப்பட்டிருந்தது. அப்போதைய மைய திட்ட அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களிடம் இருந்து வந்த 16—4—1972 நாளிட்ட கடிதத்தில் சோமசீலா நீர்த்தேக்கத்தில் இருந்து 5 டி. எம். சி. தண்ணீரைக் கொண்டு வருவது பற்றி ஆந்திர மாநில முதலமைச்சரோடு பேச்சு வார்த்தை நடத்தும்படியும், அதற்கு தன்னாலான உதவியைச் செய்வதாகவும், கிருஷ்ணா நதி நீர்ப் பிரச்சினை ஏற்கெனவே நடுவர் மன்றத்திடம் விடப்பட்டுள்ளதால் கிருஷ்ணா நதியிலிருந்து சென்னைக்குத் தண்ணீர் கொண்டுவருவது பற்றி தமிழக அரசை நடுவர் மன்றத்தோடு நேரடியாகவோ அல்லது ஆந்திர மாநிலத்தின் மூலமாகவோ அணுகும்படியும் தெரிவித்திருந்தார். அன்றைய மைய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ் அவர்கள் தனது 4—4—1972 நாளிட்ட கடிதத்தில் கிருஷ்ணா

தால், நடுவர் மன்றத் தீர்ப்பு கிடைத்த பின்னர் சென்னைக்கு குடிநீர் கொண்டுவருவது பற்றி மைய அரசு சம்பந்தப்பட்ட மாநில அரசுகளோடு தொடர்பு கொள்வதுதான் முறையாக இருக்குமென்று கருத்து தெரிவித்தார். திரு. சி. சுப்பிரமணியம் அவர்களின் பதிலிலிருந்து நடுவர் மன்றத்திடம் தொடக்கத்திலேயே அதாவது 1969-லேயே தமிழ்நாட்டை ஒரு வாதியாக்கிக் கொண்டு விவாதத்தில் கலந்து கொண்டிருப்பின் கிருஷ்ணா நதிநீரைச் சென்னைக்குக் கொண்டுவரும் பிரச்சினை நமக்குச் சாதமாக முடிவாக்கப்பட்டிருக்க லாம் என்று எண்ணவும் இடமளிக்கிறது. திரு. கே. எல். ராவ் அவர்களின் கடிதமும்கூட இந்தக் கருத்தை உறுதி படுத்துவதாகக் கொள்ளலாம்.

9. இந்தக் கடிதங்கள் கிடைத்தபின் கிருஷ்ணா நதி நீர்ப் பிரச்சினை சம்பந்தப்பட்ட நடுவர் மன்றத்தில் தமிழ்நாடு ஒரு வாதியாக ஆஜராக வேண்டிய அவசியம் இல்லையென்று ஏற்கெனவே எடுத்த முடிவை மறு பரிசீலனை செய்து பாதிக்கப்பட்ட மாநிலம் என்ற முறையில் தமிழ்நாட்டின் கோரிக்கையை நடுவர் மன்றத்திடம் விடும்படி மைய அரசுக்கு வேண்டுகோள் விடுத்து கடிதம் எழுதலாமென்று முடிவு செய்யப்பட்டு 21-8-1973 அன்று கடிதம் எழுதப்பட்டது. இந்த முடிவிலிருந்து, முன்பு (1969ல்) தன்னை நடுவர் மன்றத்தின் முன்பு ஒரு வாதியாக சேர்த்துக் கொள்ளு மாறு கேட்டுக் கொள்ளாததும், ஒதுங்கியிருந்ததும், ஒரு தவறான கொள்கை முடிவு என்பது தெளிவாகிறது. மேலே குறிப்பிட்ட தமிழக அரசின் கடிதத்துக்கு அப் போதைய மைய பாசனத்துறை அமைச்சர் திரு. கே. சி. பந்த் அவர்கள் எழுதிய 31-1-1974-ஆம் நாளிட்ட பதில் கடிதத்தில், கிருஷ்ணா நதிநீர்ப் பிரச்சினை பற்றி நியமிக்கப்பட்ட நடுவர் மன்றத்தின் முன் சென்னை நகரக் குடிநீர்ப் பிரச்சினையை விடுவ தற்கு நடைமுறை சாத்தியமில்லை. நடுவர் மன்றம் தனது பணியினை முடித்து தீர்ப்பளிக்கும் நிலையில் இருப்பதால் கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிரம் மாநில முதலமைச்சர்களைத் தங்கள் பங்கிலிருந்து மொத்தம் 15 டி. எம். சி. தண்ணீரை சென்னைக் குடிநீருக்குத் தரும்படி தான் கேட்டுள்ள தாகவும் குறிப்பிட்டிருந்தார்.

10. 1973-ல் எடுத்த முடிவை 1969லேயே எடுத்து செயல்படுத்தியிருந்தால் ஒருவேளை இந்நேரம் கிருஷ்ணா நதிநீர்த் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டிருக் கும் என்று கூடச் சொல்லலாம்: திட்டச் செலவும் குறைவாக இருந்திருக்கும்.

11. இதற்கிடையில் 1972 அக்டோபர் மாதம் சோமசீலா நீர்த்தேக்கத் திட்டத்துக்கு மைய அரசின் ஒப்புதல் பெறப்பட்டதாகத் தெரியவந்தது. ஆனால், ஏற்கெனவே ஒப்புக்கொண்ட 5 டி. எம். சி. தண்ணீரைப் பெறுவது சம்பந்தமாக தமிழக அரசு ஆந்திர அரசோடு உடனே தொடர்பு கொள்ளவில்லை. மாறாக 14-7-1974 அன்றுதான் அன்றைய தமிழக முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் ஆந்திர முதல்வர் அவர்களுக்கு 20 மாதங்களுக்குப் பிறகு ஆந்திரத்தின் பங்காக 5 டி. எம். சி. தண்ணீரை சோமசீலா நீர்த்தேக்கத்திலிருந்து சென்னை நகருக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அன்றைய ஆந்திர முதல்வர் திரு. வெங்கல்ராவ், அவர்கள் 7-8-1974 நாளிட்ட பதில் கடிதத்தில், கிருஷ்ணா நதிநீர் பற்றிய நடுவர் மன்றத் தீர்ப்பில் சில வரையறைகள் இருப்பதாலும், ஆந்திர மாநிலத் தேவைக்கே தண்ணீர் போதாதென்பதாலும், ஆந்திரத் திலிருந்து சென்னைக்கு தண்ணீர் கொடுக்க முடியா தென்று கூறியிருந்தார். இருப்பினும், மகாராஷ்டிரா, கர்நாடக மாநிலங்கள் அவர்களுடைய பங்கிலிருந்து சென்னை நகருக்கு தண்ணீர் கொடுத்தால் அந்தத் தண்ணீரை சென்னை நகருக்குக் கொண்டுபோக ஆந்திர மாநிலம் ஒத்துழைக்கும் என்று அவர் எழுதி




யிருந்தார். 20-11-1975 அன்று தமிழ் நாட்டின் அன்றைய முதல்வர் திரு. கருணாநிதி அவர்கள், மத்தியப் பாசன அமைச்சருக்கும் (திரு ஜெகஜீவன்ராம் அவர்கள்) மகாராஷ்டிர, கர்நாடக, ஆந்திர மாநில முதலமைச்சர்களுக்கும் கிருஷ்ணா நதியிலிருந்து சென்னை மாநகருக்கு 15 டி. எம். சி. தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று கடிதங்கள் அனுப்பினார். மத்தியப் பாசனத் துறை அமைச்சருக்கு எழுதிய கடிதத் தில், கிருஷ்ணா நதிநீர்ப் பிரச்சினைக்கான நடுவர் மன்றம் தன் தீர்ப்பை மறுபரிசீலனை செய்து கொண் டிருந்ததால் தமிழகத்தின் கோரிக்கையை நடுவர் மன் றத்தின் முன்வைத்து சென்னைக்கு குடிநீர் கிடைக்க ஏற்பாடு செய்யும்படி வலியுறுத்தப்பட்டிருந்தது. 20-11-1975-ல் தமிழகத்தின் கோரிக்கையை வற் புறுத்தியவர்கள் 1969-ல் இதே முயற்சியை மேற் கொண்டிருந்திருப்பின் இன்றைய சென்னை நகரக் குடி நீர்ப்பிரச்சினையே ஏற்பட்டிருக்காது. ஆனால் அன்றைய மத்தியப் பாசனத்துறை அமைச்சர் திரு ஜெகஜீவன்ராம் அவர்கள் கிருஷ்ணா ஆற்றுப்பிரச்சி னையில் மத்திய அரசு ஒரு வாதியாக இல்லாததால் அதுபற்றி மத்திய அரசு நடுவர் மன்றத்திடம் ஏதும் கூறமுடியாதென்று 19-1-1976 அன்று பதில் அளித்தார். 25-11-1975 அன்று கர்நாடகத்தின் அன்றைய முதல்வர் மறைந்த திரு. தேவராஜ் அர்ஸ் அவர்கள், மற்ற இரண்டு மாநிலங்களும் அவர்களது பங்கிலிருந்து சென்னை நகரத் தேவைக்குத் தண்ணீர் கொடுத்தால் கர்நாடகமும் கொடுக்கும் என்று பதில் அளித்தார். மகாராஷ்டிர முதல்வர் திரு. எஸ். பி. சவான் அவர்கள் சென்னை நகரக் குடிநீருக்கு மகாராஷ்டிரத்தின் பங்கிலிருந்து தண்ணீர் ஏதும் கொடுக்க முடியாதென்றும், கிருஷ்ணா ஆற்றுக்கு கோதாவரியிலிருந்து கூடுதலாக தண்ணீர் கொடுக்கப் பட்டால் அதுபற்றி யோசிப்பதாகவும் 29-1-1976 அன்று பதில் அளித்தார்.


12. 1969-ல் நடுவர் மன்றத்தில் தமிழக அரசும் வாதியாக இடம் பெற்று தமிழகத்தின் சார்பாக தனது கருத்தைத் தெரிவிக்கத் தவறியதன் காரண

மழக, பிரச்சினை குழப்பமடைந்து சென்னைக்கு கிருஷ்ணா நதிநீர் கிடைக்காது என்ற அச்சத்துக்கு சென்னை வாழ் மக்கள் ஆளாக்கப்பட்டனர். இந்நிலையில் 31-1-1976 அன்று தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவரின் ஆட்சி கொண்டுவரப்பட்டது. மகாராஷ்டிரம், ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மூன்று மாநிலங்களின் சம்மதத்தையும் பெற்று பாரத பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் கிருஷ்ணா நதியிலிருந்து 15 டி.எம்.சி. தண்ணீர் சென்னை நகரக் குடிநீர்த் தேவைக்குக் கொடுக்கப்படுமென்று 15-2-1976 அன்று சென்னையில் அறிவித்தார்கள். இவ்வறிவிப்பையொட்டி இம்மூன்று மாநில அரசுகளும், தமிழக அரசும் 14-4-1976 அன்று ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டன. இந்த ஒப்பந்தத்தின்படி மூன்று மாநிலங்களும் கிருஷ்ணா நதிநீரில் தத்தம் பங்கிலிருந்து 5 டி.எம்.சி. வீதம் மொத்தம் 15 டி.எம்.சி. தண்ணீரைச் சென்னைக்குத் தருவதென்றும் இந்தத் தண்ணீரை எங்கிருந்து எடுப்பது, எப்படிக் கொண்டு செல்வது போன்ற விவரங்களைப் பின்னர் பேச்சுவார்த்தை மூலம் தீர்மானிக்கலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது. பின்னர் அதிகாரிகள் மட்டத்தில் நடந்த பேச்சு வார்த்தைகளின்போது குழாய்களின் மூலம்தான் சென்னைக்கு குடிநீர் கொண்டு செல்ல வேண்டுமென்று மகாராஷ்டிர அரசும், கர்நாடக அரசும் வற்புறுத்தின.

**13.** அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னர், மத்திய வேளாண்மை மற்றும் பாசனத்துறை அமைச்சர் தலைமையில் 27-10-1977 அன்று ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. அக்கூட்டத்தில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி ஜூலை முதல் அக்டோபர் வரையிலான காலஅளவில் ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்திலிருந்து, திறந்த காரை பூசப்பட்ட கால்வாய் மூலம் ஆண்டொன்றுக்கு 15 டி.எம்.சி. நீரை எடுத்துக்கொள்ள ஏற்பாடுகள் செய்து ஒப்புக்கொள்ளப்பட்டது.

### வீராணம் திட்டம் கைவிடப்பட்டது ஏன்?

**14.** நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின் சென்னைக்கு கிருஷ்ணா நதிநீரைக் கொண்டுவருவதற்கான பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து நடத்தி வந்த அதே நேரத்தில், ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழக அரசால் துவக்கப்பட்டு நிறுத்தப்பட்ட வீராணம் திட்டத்தைப் பற்றியும் பரிசீலித்து முடிவு எடுக்க முழு முயற்சியில் ஈடுபட்டது. நாளொன்றுக்கு 40 மில்லியன் காலன் தண்ணீரை அதாவது ஆண்டொன்றுக்கு சுமார் 2.5 டி.எம்.சி. தண்ணீரை வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்கு குழாய் மூலம் கொண்டுவரும் வகையில் தீட்டப்பட்ட திட்டம் வீராணம் குடிநீர்த் திட்டமாகும். இத்திட்டத்திற்கான குழாய்கள் தயாரிக்கும் பணியும், அவற்றை பூமிக்குள் பதிக்கும் பணியும் துவக்கப்பட்டு 1975 ஆம் ஆண்டு அப்பணி இடையில் நிறுத்தப்பட்டுவிட்டது. 1975 ஆம் ஆண்டு சென்னையில் ஏற்பட்ட வறட்சியின்போது குடிநீர் வசதிக்காக திருவான்மியூரிலிருந்து வீராணம் திட்டத்திற்கு தயாரிக்கப்பட்ட குழாய்கள் மூலம் சோதனை அடிப்படையில் நீர் ஏற்றப்பட்டபோது (Pump) அழுத்தம் தாங்காமல் குழாய்களில் வெடிப்பு ஏற்பட்டது. இந்தத் திட்டத்துக்குத் தேவையான குழாய்களின் தரம் குறித்தும், எத்தகைய குழாய்களை உபயோகிக்கலாம் என்பது பற்றியும் ஆய்வு செய்து அறிக்கை தருவதற்காக சென்னை விஞ்ஞான தொழில் ஆராய்ச்சி நிலையத்தின் கீழுள்ள ''ஸ்டிரெக்சுரல் என்ஜினியரிங் ரிசர்ச் சென்டர்'' ன் இயக்குநராக இருந்த புரொபசர் ஜி. எஸ். ராமசாமி அவர்களைத் தலைவராக கொண்டு ஒரு தொழில் நுட்பக்குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழு 1976 ஆம் ஆண்டு மே மாதம் தனது அறிக்கையை அரசுக்கு அளித்தது. இந்த அறிக்கையில், ஏற்கனவே தயாரிக்கப்பட்ட 10,586 குழாய்களில் 6,000 குழாய்கள்தான் ஏற்கத்தக்கவை, மற்றவை பழுது பார்க்கப்பட்டு மறுபரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்



டியவை என்றும், ஏற்கனவே புதைக்கப்பட்ட குழாய்களை மீண்டும் தோண்டி எடுத்து சோதித்த பின்புதான் பயன்படுத்த வேண்டுமென்றும், வேக்ரீட் முறைப்படி தயாரிக்கும் குழாய்கள்தான் தொழில் நுட்ப ரீதியாக தரமானவை என்றும், ஆனால் இந்த முறைப்படி குழாய்கள் இந்தியாவில் எங்கும் தயாரிக்கப்படாததால், வேக்ரீட் நிறுவனம் இந்தக் குழாய்களின் தரத்திற்கு பொறுப்பேற்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

**15.** வீராணம் திட்டத்தைப் பற்றி ஆய்வு செய்த பொது நிறுவனங்கள் குழு தனது 1977–79ஆம் ஆண்டுக்கான 6-வது அறிக்கையில் இத்திட்டத்தைப் பற்றியும், திட்டம் துவக்கப்பட்டது முதல் செயல்பட்ட விதத்தைப் பற்றியும் கீழ்க்கண்டவாறு கடுமையாக விமர்சித்துள்ளது :

(1) இந்தத் திட்டத்திற்குத் தேவையான நீர் கிடைக்குமா என்பதையும், இந்த அளவு நீரை வாங்கி வழங்குவதற்கு வீராணம் ஏரிக்குக் கொள் திறன் தொடர்ந்து இருக்குமா என்பதையும், ஒரு குறிப்பிட்ட காலத்திற்காவது வீராணம் ஏரி திட்டத்திற்குப் பயன்படுமா என்பதையும் (முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதி அவர்களின்) அரசு முழுமையாக ஆய்வு செய்திருக்க வேண்டும்.

(2) கெட்டியாக்கப்பெற்ற கான்க்ரீட் குழாய் தயாரித்து பதித்தல் குறித்த ஒரு மாபெரும் ஒப்பந்தம் எவ்வகையிலும் தகுதியற்ற ஒரு நிறுவனத்திடம் ஒப்படைக்கப் பெற்று, பணிகள் சரியாக நிறைவேற்றப்படாமல் ஒரு குழப்பமான நிலை உருவாகி அரசுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது.

(3) திட்டமிடுதல், வடிவமைத்தல், தயாரிப்பு முறை ஆகியவை பற்றிய நடைமுறை வரை படங்களுக்கும், கலவை விகிதாச்சாரங்களுக்கும் துறையின் ஒப்புதல் அளிக்கப் பெறாமலேயே பணிகளைத் தொடங்கியது ; Indian Standard Specification தரத்தின்படி நீர் அழுத்தத்தைத் தாங்கும் சக்தி குழாய்களுக்கு இருப்பதை உறுதி செய்து கொள்ளத் தவறியது ; குழாய்களின் மேலுறையில் விரிசல் ஏற்படாது இருப்பதை உறுதி செய்து கொள்ளத் தவறியது, ஆகிய முறைகேடுகள் நிகழ்ந்துள்ளன.

(4) மேலும், ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்டிருக்கும் பல்வேறு சோதனைகளை நடத்தத் தவறியமை ;

கான்க்ரீட் சோதனைக்கு எடுத்துக்கொள்ளப் பெறும் சோதனை சிலிண்டர்கள் குழாய்க் கான்க்ரீட் தயாரிக்கப்பெறும் நிலையிலேயே தயாரிக்கப்பெறுவதை உறுதி செய்துகொள்ளத் தவறியமை ; கான்க்ரீட்டின் வலு எம். 450 தரத்தை எய்தவில்லை என்பது தெரிந்திருந்தும் குழாய் தயாரிப்பைத் தொடர்ந்து நடத்தியது, ஆகிய முறைகேடுகள் நிகழ்ந்துள்ளன.

(5) ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒப்பந்தக்காரருக்கு ஆதாயம் ஏற்படும் வகையிலேயே வடிவமைப்பிலும், ஒப்பந்த நிபந்தனைகளிலும் மாறுதல்கள் செய்யப் பட்டுள்ளன என்பது குறித்து தனது அதிருப்தியைத் தெரிவிக்கிறது.

(6) மேலும் அவ்வறிக்கையில் இத்திட்டத்தில் செய்யப்பட்ட மற்றொரு தவறு பெருவாரியான தொகை ஒப்பந்தக்காரருக்குக் கொடுத்தது தான் என்றும், அரசு இத்திட்டத்திற்கென்று ஒதுக்கிய மொத்தத் தொகையான ரூ. 16.55 கோடியில் திட்டத் தொடக்கத்திலேயே பொருளாகவும், முன் பணமாகவும் ஒப்பந்தக்காரருக்குக் கொடுத்தது ரூ. 13.25 கோடி என்றும், இது போன்று வேறு எந்த வேலைக்கும் ஒப்பந்தக்காரருக்கு இவ்வளவு பெருந் தொகையினை அளித்ததாக அரசின் வரலாற்றில் இல்லையென்றும் தெரிவித்துள்ளது.

இந்தக் குழு தனது அறிக்கையின் இறுதியில் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளது :

''இத்திட்டத்தின் அனைத்து ஒப்பந்தங்களில் உள்ள ஒப்பந்த விதிகளும் சரியாக எம்மட்டத்திலும் ஆரம்பத்திலிருந்தே நிறைவேற்றப்படவில்லை. இதன் விளைவாகத் திட்டமே தோல்வியுற்றது. இந்தத் திட்டத்தை மறு முறையும் சரி செய்து உற்பத்தி செய்யப்பட்டுள்ள குழாய்களைச் சரிபார்த்து இந்தத் திட்டத்தை மேற்கொண்டு நடத்த இயலுமா என்பதும் ஒரு கேள்விக் குறியாகவே தெரிகின்றது. குழாய்களை உற்பத்தி செய்யும் முறை நம் நாட்டிற்கு உகந்ததாக இல்லாததினால் மறு முறையும் 'வாக்குவம்'' முறை செயல் படுத்த முடியுமா என்பதும் சந்தேகமாக உள்ளது. அவ்வாறே செயல் படுத்த முடியுமானால் கூட, இது வரையுயிலும் தயார் செய்த குழாய்களில் பெருமளவு உபயோகிக்க முடியாது என்று கூறப்பெறுகிறது. ஆகவே, இதற்கு மேலும் பல கோடி ரூபாய் செலவிட வேண்டி வரும். இத்திட்டம் வெற்றி பெறாததுடன், செலவிடப்பட்ட தொகை எவ்வளவு தேறுமென்பதற்கும் குழு தனது கருத்தைத் தெரிவிக்க இயலவில்லை''.

''சென்னைக்குக் குடிதண்ணீர் கொண்டு வரும் இம்முயற்சி பயன் அளிக்காததினால் காலம் தாழ்த்தப்பட்டு சென்னை குடிதண்ணீர் பிரச்சினை இன்னும் தீராமல் உள்ளது. எனவே அரசு இத்திட்டத்தை மேற்கொண்டு தொடர்ந்து நடத்துவது பற்றியோ அல்லது கைவிடுவது பற்றியோ உடனடியாக ஒரு முடிவிற்கு வர வேண்டும். சென்னை குடி தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமானால், இத்திட்டத்தை மீண்டும் செயல் படுத்துவதற்கோ அல்லது வேறு திட்டத்தை உருவாக்குவற்கோ அரசு உடனடியாக முயற்சிகளை எடுத்துக் கொள்ளவேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது ''.

**16.** மேலும் உலக வங்கிக் குழு தனது பரிந்துரையில் இத்திட்டத்திற்குக் கடனுதவி செய்வதாயின் சிமெண்ட் குழாய்களுக்குப் பதில் உருக்குக் குழாய்களைத்தான் பயன் படுத்த வேண்டுமென்றும் நிபந்தனை விதித்தது. இவ்வாறு உருக்குக் குழாய்களைப் பயன்படுத்தினால் திட்டச் செலவு ரூ. 205 கோடியாகும் என்று மதிப்பிடப்பட்டது. இவ்வாறு 205 கோடி ரூபாய் செலவில் சுமார் 2·5 டி.எம்.சி. தண்ணீரைமட்டுமே கொண்டு வரும் வீராணம் திட்டம் சிக்கனமற்றதெனக் கருதப்பட்டு கைவிடப் பட்டது. இன்று வீராணம் ஏரியில் இன்று குடிக்க ஒரு சொட்டு நீர் கூட இல்லையென்பதும், (சேறு கலந்த தண்ணீர் இரண்டடி அளவிற்கு உள்ளது) காவிரி நதியில் ஆண்டு முழுவதும் தண்ணீர் கிடைப்பது நிலையற்றதாகிவிட்டது என்பதும் சிந்திக்கத்தக்கது.

கட்டளைக் கால்வாய்த் திட்டம்.

**17.** இது தவிர வேறு சில மாற்றுத் திட்டங்களும் பரிசீலிக்கப்பட்டன. திருச்சி மாவட்டத்தில் காவிரி நதியில் கட்டளை அணைக்கட்டிற்கருகிலிருந்து சுமார் 203 கோடி ரூபாய் செலவில், 450 கி.மீ. நீளத்திற்குக் கால்வாய் வெட்டி நாளொன்றுக்கு 995 மி.லி. தண்ணீரை (சுமார் 13 டி.எம்.சி.) சென்னை மாநகருக்குக் கொண்டுவருவதற்கான திட்டம் பரிசீலிக்கப்பட்டது. வீராணம் திட்டத்தைப்போல் உருக்குக் குழாய்களுக்கென்று கோடிக்கணக்கான ரூபாய்களை வெளிநாட்டுக்குக் கொடுக்காமல், கால்வாய் வெட்டுவதன் மூலம் மனித உழைப்பிற்காகச் செலவு செய்வதினால் இலட்சக்கணக்கான குடும்பங்களுக்கு வேலை கிடைக்

கும் என்ற காரணத்தால் இந்த கட்டளைக் கால்வாய்த் திட்டத்தைப் பரிசீலிக்க விரும்பினோம். மேலும், வீராணம் திட்டத்தில் தண்ணீரைக் குழாய்களின் வழியாக விசையேற்றம் (Pump) செய்வதன் மூலமே சென்னைக்குக் கொண்டுவர முடியும். ஆனால், கட்டளைக் கால்வாய்த் திட்டத்தில் நில மட்ட வித்தியாசத்தின் காரணமாக ஈர்ப்புச் சக்தியினாலேயே (Gravity) தண்ணீர் தானாகக் கால்வாய் வழியே சென்னை வந்து சேரும். இத் திட்டம் பரிசீலிக்கப்பட்டபோது இதற்காகக் கர்நாடகத்திடமிருந்து அதிகத் தண்ணீர் கேட்டுத்தான் இதை நிறைவேற்ற வேண்டும் என்று உத்தேசிக்கப் படவில்லை. காவிரியிலிருந்து கிடைக்கும் தண்ணீரிலேயே சிறு பகுதியும், தமிழகத்திற்குள் காவிரிப் பகுதியில் பெய்யும் மழையையும், மற்ற ஆறுகளிலிருந்து வரும் நீரையும் கணக்கிட்டுத்தான் இத் திட்டத்தைப் பரிசீலித்தோம்.

ஆனால், இத் திட்டத்தினால், திருச்சி, தஞ்சாவூர் மாவட்ட காவிரி நதி நீர்ப்பாசன ஆயக்கட்டு நிலங்கள் பாதிக்குமென்று அம்மாவட்ட விவசாயிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர். தங்களது பிடிவாதம் நாட்டு நலனைவிடப் பெரிதென்று கருதும் ஒரு சில தலைவர்கள் இத் திட்டத்திற்குக் கர்நாடகம் ஒப்புக்கொள்ளுமா, விவசாயிகள் அனுமதிப்பார்களா என்றெல்லாம் பேசி, சிக்கலை உருவாக்கி, இதையொரு விவாதப் பொருளாக்கி கர்நாடக மாநிலத்திற்கு யோசனையும் கூறினார்கள். இந்த கட்டளைக் கால்வாய்த் திட்டத்திற்கு யோசனை தந்தவரே பின்னால் உத்திரவாதம் தருவதற்கு மறுத்து விட்டார். இவ்வாறான சூழ்நிலைகளில் இத் திட்டமும் கைவிடப்பட்டது.

கிருஷ்ணா நீர்த் திட்டம் பற்றி தொடர்ந்து மேற்கொண்ட முயற்சிகள்.

**18.** இவ்வாறு மாற்றுத் திட்டங்கள் பற்றி பரிசீலித்துக் கொண்டிருந்த அதே நேரத்தில் கிருஷ்ணா நதிநீர்த் திட்டம் பற்றியும் தொடர்ந்து ஆந்திரப் பிரதேச அரசுடன் இந்த அரசு பேச்சு வார்த்தைகள் நடத்தி வந்தது. ஆந்திரப் பிரதேச அப்போதைய முதலமைச்சர் டாக்டர் திரு. சென்னா ரெட்டி அவர்களும், நானும் 15-6-78 அன்று ஹைதராபாத்தில் இதுபற்றி பேச்சுவார்த்தை நடத்தினோம். இத் திட்டத்தை நடைமுறைப்படுத்த எடுத்த மறு முயற்சிக்கு திரு. டாக்டர் சென்னா ரெட்டி அவர்களுக்கு பெரும் பங்குண்டு. அவருடன் நான் நடத்திய பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு இத் திட்டத்தின் தொழில்நுட்ப சாத்தியக் கூறுகளைப் பரிசீலிப்பதற்காக ஆய்வு செய்யும் பணிகள் உடனடியாகத் தொடங்கப்பட வேண்டுமென்றும், இரு மாநிலங்களின் அதிகாரிகள் அடங்கிய தொடர்புக் குழு ஒன்று இந்த ஆய்வுப் பணியின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க வேண்டுமென்றும் இருதரப்பிலும் முடிவு செய்யப்பட்டது.

**19.** ஆந்திரப் பிரதேச அரசும், தமிழ்நாடு அரசும் இத் திட்டம் குறித்து மேற்கொண்ட ஆய்வில் இத் திட்டம் தொழில்நுட்ப ரீதியில் சாத்தியமானது என்பது உறுதிப்படுத்தப்பட்டது. ஆந்திரப் பிரதேச அரசின் அறிக்கை நவம்பர் 1982 ஆம் ஆண்டில் தமிழக அரசிற்குக் கிடைத்தது. இதையடுத்து, இத் திட்டத்தை மேற்கொள்வதற்கான ஒப்பந்தம் ஏற்படுத்துவது பற்றி இருமாநில அதிகாரிகள் மட்டத்தில் பேச்சு வார்த்தைகள் நடந்தன. சென்னையில் ஆந்திர முன்னாள் முதல்வர் திரு. பவனம் வெங்கட்ராம் அவர்கள் தங்கள் அதிகாரிகளுடன் சென்னை வந்து என்னுடனும் நமது அதிகாரிகளுடனும் பேசி ஒரு முடிவு எடுக்கப்பட்டது.

கிருஷ்ணா நீர் ஒப்பந்தம் 18—4—83.

**20.** இறுதியாக, 18—4—1983 அன்று ஐதராபாத்தில் ஆந்திர மாநில முதலமைச்சர் என் உடன் பிறப்பு மாண்புமிகு என். டி. ராமராவ் அவர்களிடம் நானும், சம்பந்தப்பட்ட அமைச்சர்களும், அதிகாரிகளும் பேச்சு வார்த்தை நடத்தினோம். இக் கூட்டத்தில் சென்னைக்குக் கிருஷ்ணா நதியிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டத்திற்கான ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சங்கள் கீழ்க்கண்டவையாகும் :—

(1) சென்னை குடிநீர் கால்வாய், ஆந்திரப் பிரதேசம், கடப்பா தாலுக்காவிலுள்ள சென்னமுக்கப்பள்ளி என்ற கிராமத்தின் அருகிலிருந்து வெட்டப்படும். ஸ்ரீசைலத்திலிருந்து சென்னமுக்கப்பள்ளி வரை தண்ணீர் கொண்டு வருவதற்குச் செய்ய வேண்டிய ஏற்பாடுகளை ஆந்திரப் பிரதேசம் முடிவு செய்யும்.

(2) சென்னமுக்கப்பள்ளியிலிருந்து பெண்ணாற்றில் உள்ள சோமசீலா நீர்த்தேக்கம் வரை தமிழ் நாட்டிற்காக ஒரு தனி கால்வாய் வெட்டப்படும்.

(3) தற்போது கட்டப்பட்டுவரும் இந்த சோமசீலா நீர்த்தேக்கம் சென்னை நகரக் குடிநீர்த் திட்டத்திற்கும் பயனளிக்கும் வகையில் விரிவாக்கப்படும்.

(4) சோமசீலா நீர்த்தேக்கத்திற்குக் கீழ், 54 டி.எம்.சி. கொள்ளளவு உள்ள கண்டலேரு நீர்த்தேக்கம் அமைக்கப்படும். இந்நீர்த் தேக்கம் ஆந்திர மாநிலத்தில் பாசனத்திற்கு மட்டுமல்லாமல் சென்னை நகரக் குடிநீர்த் திட்டத்திற்கும் நீரைச் சேமித்து வைப்பதற்கு பயனுள்ளதாக இருக்கும்.

(5) கண்டலேரு நீர்த்தேக்கத்திலிருந்து தமிழ் நாடு—ஆந்திரப் பிரதேச எல்லை வரை ஆந்திர மாநிலத்தில் பாசனத்திற்கும், சென்னை நகரக் குடிநீர்த் திட்டத்திற்கும் பயனளிக்கும் வகையில் ஒரு கால்வாய் வெட்டப்படும்.

(6) ஆந்திரப் பிரதேசத்தின் எல்லைக்குள் சென்னை நகரக் குடிநீர் வழங்கும் திட்டக் கட்டுமானப் பணிகளை ஆந்திர அரசு நிறைவேற்றும். அப்பணிகளுக்கான செலவு, ஒவ்வொரு பணியினாலும் இரு மாநிலங்களும் அடையும் பயன்களின் விகிதாசாரப்படி பகிர்ந்து கொள்ளப்படும். இதே போல, இப்பணிகளைப் பராமரிப்பதற்கான செலவும் இதே விகிதாச்சாரப்படி பகிர்ந்து கொள்ளப்படும்.

(7) ஒவ்வொரு வருடமும் தமிழ்நாடு அரசால் வகுக்கப்பட்ட முறைப்படி வருடத்தில் 8 மாதங்களில் (நவம்பர், டிசம்பர், மே, ஜூன் நீங்கலாக) குறிப்பிட்ட அளவு தண்ணீரை ஆந்திர அரசு, தமிழ்நாட்டின் எல்லையில் கொடுக்கும்.

(8) இப்படிக் கொடுக்கப் போகும் அளவு, வழியில் ஏற்படும் நீரிழப்பையும் சேர்த்து ஒரு வருடத்திற்கு 15 டி.எம்.சி. ஆகும். நீரிழப்பு ஒரு வருடத்திற்கு 3 டி.எம்.சி.க்கு மேல் கணிக்கப்படாதென்றும் ஆந்திர பிரதேச அரசு ஒப்புக்கொண்டுள்ளது. நீரிழப்பு அதிகமாயின் அதை குறைக்க ஏற்படும் செலவை ஆந்திரப் பிரதேச அரசும், தமிழ்நாடு அரசும் ஏற்கெனவே வகுத்த முறையில் பகிர்ந்து கொள்ளும்.

(9) பணிகளை நிறைவேற்றும்போது நீரைக் கொண்டுவரும் கால்வாயின் தரைமட்டம், முழு நீர்மட்டம், முதலியவற்றில் ஏதேனும் மாற்றம் தேவைப்பட்டால் இம்மாறுதல்கள் இரு மாநிலங்களின் அதிகாரிகள் அடங்கிய தொடர்புக் குழுவின் அனுமதியுடன்தான் நிறைவேற்றப்படும்.

(10) இத்தொடர்புக் குழு பணிகளின் முன்னேற்றத்தையும், பணிகள் முடிந்த பிறகு திட்டம் செயல்படும் முறையையும் கண்காணிக்கும்.

(11) இத்திட்டத்தின்படி கிடைக்கும் நீரை சென்னை நகரின் குடிநீர்த் தேவைக்குத் தவிர வேறு எதற்கும் தமிழ்நாடு அரசு பயன்படுத்தாது.

(12) இத்திட்டத்தை மூன்று முதல் ஆறு ஆண்டுகளில் முடிக்க முடியும் என்று இரு அரசுகளும் கருதுகின்றன.

(13) இதை விரைவாகவே நிறைவேற்றுவதற்கு தமிழ்நாடு அரசு பணிகளின் முன்னேற்றத்தைப்

பொறுத்து முதல் மூன்று ஆண்டுகளுக்கு ஒவ்வொரு ஆண்டுக்கும் ரூ. 60 கோடி வரை ஆந்திர அரசுக்குத் கொடுக்க ஒப்புக் கொண்டுள்ளது.

(14) இந்த ஒப்பந்தம் காலவரம்பற்றது; நிரந்தரமானது.


**21.** ஆந்திர மாநிலத்தில் ஸ்ரீசைலம் நீர்த் தேக்கத்திலிருந்து தமிழகத்தின் எல்லைவரை தண்ணீர் கொண்டு வருவதற்கு 354 கி.மீ. நீளத்திற்கு வாய்க் கால்கள் அமைக்கப்பட வேண்டியுள்ளன. இவை தவிர, சென்னை நகரக் குடிநீர் திட்டத்திற்குத் தமிழ்நாட்டின் எல்லைக்குள் பல வேலைகள் செய்ய வேண்டியுள்ளன. தமிழ்நாடு எல்லையிலிருந்து பூண்டி நீர்த்தேக்கம் வரை 25 கி.மீ. நீளத்தில் ஒரு கால்வாயும், பூண்டி நீர்த்தேக்கத்திலிருந்து செம்பரம்பாக்கம் நீர்த்தேக்கம் வரை 25 கி.மீ. நீளத்திற்கு மற்றொரு கால்வாயும் வெட்டப்பட வேண்டியுள்ளது. மேலும் கிருஷ்ணா நதியிலிருந்து பெறப்படும் நீரை முறைப்படி சேமித்து வழங்க பூண்டி, புழலேரி, செம்பரம்பாக்கம் இம்மூன்று நீர்த்தேக்கங்களிலும் நீர்மட்டத்தை 2 அடி உயர்த்து வதோடு இத்தண்ணீரைச் சென்னை நகருக்குள் குடிநீர் உபயோகத்திற்குப் பயன்படுத்த குழாய்கள் அமைப்பதும், மற்றும் வடிகால்களை அமைப்பதும், அவசியம். இதற்குச் சுமார் ரூ. 236 கோடி ஆகும் என்று மதிப்பிடப்படுகிறது. ஆந்திரப் பிரதேச எல்லைக்குள் செய்யப்பட வேண்டிய வேலைகளுக்குத் தமிழ்நாட்டின் பங்கு இப்போது சுமார் ரூ. 200 கோடி இருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது.

**22.** சென்னை நகரில் இன்னும் 20 ஆண்டு களில் வளரும் மக்கள் தொகையின் நீர்த்தேவையை முழு அளவில் சரிக்கட்ட நாளொன்றுக்கு 1294 மில்லியன் லிட்டர் தண்ணீர் தேவைப்படும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. தற்சமயம் கிடைக்கக் கூடிய நீரின் அளவு 299 மில்லியன் லிட்டர்தான். நாளொன்றுக்குக் கூடுதலாகத் தேவைப்படும் தண்ணீர் 995 மில்லியன் லிட்டர். ஏற்கெனவே வகுக்கப் பட்டு, வேலைகளும் தொடங்கப்பட்டு கைவிடப் பட்ட வீராணம் திட்டம் நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டரையே, அதுவும் நீரேற்றத்தின் மூலமாகத்தான் கொடுத்திருக்கும். எனவே சென்னை நகருக்குத் தேவையான தண்ணீரை நிரந்தரமாகப் பெறுவதற்கு கிருஷ்ணா ஆற்றிலிருந்து தண்ணீரைப் பெறும் இத்திட்டமே சிறந்தது. ஆந்திரப் பிரதேச அரசுடன் நிறைவேற்றப்பட்ட இந்த ஒப்பந்தம், இத்திட்டம் விரைவில் செயல்படுத்தப்பட்டு சென்னைக்குக் குடிநீர் கிடைக்க வகை செய்யும். அதேசமயம் ஆந்திரப் பிரதேசத்தின் பின்தங்கிய பகுதிகளும் நீர்ப்பாசனத்தை விரிவுபடுத்துவதன் மூலம் பெரும் பயனடையும். இத்திட்டத்தின் மூலம் இரு மாநிலங்களிலும் பெருமளவில் வேலை வாய்ப்பு கள் ஏற்படும். இந்தியாவிலேயே, இருமாநிலங் களுக்கிடையே பரஸ்பர ஒத்துழைப்பின் மூலம் ஒரே நாளில் பேசி உருவாக்கப்பட்டு, இருமாநில மக்களுக்கும் ஒரே நேரத்தில் சம அளவில் பயன்பெறும் திட்டம் இது ஒன்றுதான் என்பதில் சந்தேகமில்லை.

**23.** இவ்வொப்பந்தம் ஏற்படுவதற்குக் காரணமா யிருந்த பாரதப் பிரதமர் அவர்களுக்குத் தமிழக, குறிப்பாகச் சென்னைவாழ் மக்களும், தமிழக அரசும் பெரிதும் நன்றி கூறிக்கொள்ளு கின்றோம். கர்நாடகம், மகாராஷ்டிரம், ஆந்திரம் ஆகிய இம் மூன்று மாநிலங்களையும் அவர்கள் அன்று (15—2—1976) சம்மதிக்கச் செய்ததினாலேயே இன்று இவ்வொப்பந்தம் உருவாகியுள்ளதுஎன்பதையும் இந்நேரத்தில் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். மகாராஷ்டிரா, கர்நாடக, ஆந்திர மாநில அரசு களுக்கு நமது நன்றி உரித்தாகுக. அவர்கள் சம்மதம் தராதிருப்பின் இவ்வொப்பந்தம் ஏற்பட் டிருக்குமா என்பது சந்தேகமே! இப்பேச்சு வார்த்தைகளில் தமிழக அரசின் தரப்பில் கலந்து கொண்ட மின்துறை அமைச்சர் மாண்புமிகு திரு எஸ். இராமச்சந்திரன், தொழிலாளர் நல அமைச்சர் மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம், தலைமை செயலாளர் (பொறுப்பு) திரு சொக்கலிங்கம், பொதுப் பணித் துறைச் செயலாளர் திரு மாதவ சர்மா, சட்டத் துறைச் செயலாளர் திரு வடிவேலு, தலைமைப் பொறியாளர் திரு மோகன கிருஷ்ணன், எனது செயலாளர் திரு எம். பரமசிவம் முதலான வர்களுக்கும், ஆந்திர அரசின் தரப்பில் கலந்து கொண்ட ஆந்திர மாநில நிதியமைச்சர் மாண்புமிகு திரு பாஸ்கர ராவ், பாசன அமைச்சர் மாண்புமிகு திரு ஸ்ரீநிவாசலு ரெட்டி, தலைமைச் செயலாளர் திரு இராமன், பாசனத் துறைச் செயலாளர் திரு நடராஜன், நிதித் துறைச் செயலாளர் திரு மாதவ ராவ், முன்னாள் பாசனச் செயலாளர் திரு ராஜா ராவ், சட்டத் துறைச் செயலாளர் திரு ராவ், தலைமைப் பொறியாளர் திரு ராஜேந்திரகுமார் முதலானோர்க்கும் தமிழகத்தின் சார்பில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இறுதியாக, பேச்சு வார்த்தைகளில் அவ்வப்போது ஏற்படும் சிறு பிரச்சினைகளைப் பரந்த மனப்பான்மையுடன் தீர்த்து, ஒப்பந்தம் ஏற்பட வாய்பளித்த என்றும் எனது அருமை உடன்பிறப்பான ஆந்திர முதல்வர் மாண்புமிகு திரு என். டி. ராமாராவ் அவர்களுக்கு என் சார்பிலும், தமிழக அரசின் சார்பிலும், தமிழக மக்களின் சார்பிலும் நன்றியையும் வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஒருவேளை இதை விடச் சிறப்பாக வேறு யாராவது இந்த ஒப்பந்தத்தை செய்ய முடிந்திருக்கலாம். எனினும் என்னை வாழவைக்கும் தமிழகத் தாய்மார்களின், பெரியோர் களின், சென்னைவாழ் மக்களின் நீண்டகாலத் தேவையான குடிநீர்ப் பிரச்சினைக்கு அவசர, அவசிய நோக்கோடு என்னால் முடிந்த அளவு, எனது கடமையை அண்ணா வழியில், என்னை இந்நிலையில் வைத்துள்ள தமிழகத்திற்குச் செய்து முடித்துள்ளேன். இந்தத் திட்டத்தை நிறைவேற்று வதற்கு என்னை ஆளாக்கிய அமரர் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும், தமிழக மக்களுக்கும் மீண்டும் ஒருமுறை எனது வணக்கத்தைக் காணிக்கை யாக்குகிறேன்.

வாழ்க அண்ணா நாமம்!

**தமிழ்நாடு சட்டப் பேரவையில் 26-4-1983 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சார்பில் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் வெளியிட்ட அறிக்கை**



சத்துணவுத் திட்டம் - ஓர் சமுதாயப் புரட்சித் திட்டம்! ஆம்! மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் திரு.எம்.ஜி. ஆர். அவர்கள், தமிழகத்தின், ஏழை-எளிய மக்களின் குழந்தைகளின் நல்வாழ்வு கருதி, நடைமுறைப்படுத்தியிருக்கும் மதிய சத்துணவுத்திட்டம், சமுதாய வாழ்வில் ஒரு மாற்றத்தை, முன்னேற்றத்தை -புரட்சியை உருவாக்கியிருக்கிறது என்பது உண்மை. எதிர்காலத்தில் உயர்வான நிலையை ஏற்படுத்தும் என்பது உறுதி!

குழந்தைகளுக்கான இலவச மதிய சத்துணவுத்திட்டம்....

- வேலைக்குச் செல்லும் பெற்றோர்கள் குழந்தைகளைப் பற்றிக் கவலைப்படாமல், வேலைகளில் கவனம் செலுத்த வாய்ப்பு அளிக்கும் திட்டம்.
- 2 வயது முதல் 5 வயது வரையிலுள்ள இளங்குழந்தைகளை ஆரம்பக் கல்விக்கு ஆயத்தப்படுத்தும் திட்டம்.
- துவக்கப் பள்ளிகளின் மாணவ - மாணவியரின் வருகை எண்ணிக்கை பெருகி நிற்கத் துணைபுரியும் திட்டம்.

பிரிந்து தாய்-தந்தையர் ஓய்வு எடுக்க உதவி அளிக்கும் திட்டம்.

- வறுமையில் உழன்று கொண்டிருக்கும் விதவை-அநாதை-திக்கற்ற வேலையற்ற உடலூனமுற்ற தாய்மார்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டம்.
- ஏழைக் காய்கறி விற்பனையாளர்க்கு வேலை வாய்ப்பு வசதி அளித்திடும் திட்டம்.

இப்படியாகப் பல சமுதாய நலன்களைப் புரட்சிகரமான வகையில் தர குழந்தைகளுக்கான மதிய சத்துணவுத் திட்டம் பெரிதும் பயன்பட்டு வருகிறது.



## சத்துணவுத் திட்டம் -

# சமுதாயப் புரட்சித்திட்டம்

- ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளின் பசிக்கொடுமையை அகற்றும் அரும்பெருந்திட்டம்.
- குழந்தைகளின் கடும்பசியை ஆற்றுவதோடு, அவர்களின் உடலுறுப்புகளின் வளர்ச்சிக்கு உதவியாக ஊட்டச் சத்து அளிக்கும் திட்டம்.
- இளங்குழந்தைகளின் உடல் வாட்டத்தையும், உள்ள வாட்டத்தையும் போக்கி அவர்களை உளமகிழ்ச்சியோடு கல்வியைக் கற்க வைக்கும் திட்டம்.
- ஏழை-எளிய பெற்றோர்களின் மனக்கவலையையும், மன வருத்தத்தையும் நீக்கும் திட்டம்.
- இளம் வயதிலேயே, குழந்தைகளைச் சாதி-சமய பேத உணர்விற்கு இடமில்லாமல் கலந்துண்டு பழகவைக்கும் திட்டம்.
- காப்பகங்களில் குழந்தையோடு குழந்தை நெருங்கிப் பழகிப் பண்புகளை வளர்த்துக்கொள்ளப் பயன்படும் திட்டம்.
- குழநதைகளின் நச்சரிக்கும் தொல்லைகளில் இருந்து

'அற்றார் அழி பசி தீர்த்தல்' 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்' 'வறியார்க்கு ஒன்று ஈதல்', 'பசி ஆற்றல்', 'ஈத்துவக்கும் இன்பம் அறிதல்' என்று வள்ளுவப் பெருந்தகையார் வற்புறுத்தியுள்ள இன்றியமையாக் கடமைகளை, இந்தச் சத்துணவுத் திட்டம், எல்லா வகையிலும் நிறைவேற்றி வைக்கிறது.

அனைத்துயிர் ஒன்றென்று எண்ணவேண்டும், அரும்பசி எவ்வுயிர்க்கும் ஆற்ற வேண்டும்.

மாண்புமிகு நிதி அமைச்சர்
டாக்டர் நாவலர்
**இரா.நெடுஞ்செழியன்**





தனிப்பெருங்கருணை காட்ட வேண்டும். அருட்பேரொளியைப் பெறவேண்டும் என்று வடலூர் வள்ளலார் கூறிய அறநெறிகளை இந்தச் சத்துணவுத் திட்டம் நடைமுறைப்படுத்தியுள்ளது.

''வயிற்றுக்குச் சோறுண்டு<br>
கண்டீர்-இங்கு<br>
வாழும் மனிதர்க்கெல்லாம்<br>
பயிற்றிப்பல கல்வி தந்து<br>
இப்பாரினை<br>
உயர்த்திட வேண்டும்''

என்று புதுமைக் கவிஞர் பாரதியார் முழங்கினார். பாரதியாரின் கூற்றுக்கு இணங்க, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், இந்தத் தமிழகத்தில் வாழும் பிள்ளைகளுக்கெல்லாம், வயிற்றுக்குச் சோறுண்டு என்று காட்டிப் பயிலும் பல கல்வி தந்து, இந்தத் தமிழகத்தை உயர்த்திடும் பணியில், இந்தச்சத்துணவுத் திட்டத்தின் மூலம் ஈடுபட்டுள்ளார்.

1981ஆம் ஆண்டு மக்கள் எண்ணிக்கைக் கணக்குப்படி தமிழக மக்கள் தொகை 4 கோடியே 82 இலட்சம் பேர்கள். அவர்களில் 2 வயது முதல் 10 வயது வரையிலுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை 1கோடியே 6 இலட்சம் பேர்கள் ஆவார்கள். அவர்களில் சுமார் 65 இலட்சம் குழந்தைகள் 26,617 காப்பகங்களிலும் 33,356 துவக்கப்பள்ளிகளிலும் இருந்து மதிய சத்துணவு பெற்று மகிழ்ந்து வருகின்றனர். அவர்களோடு சேர்ந்து, சுமார் 2 இலட்சத்திற்கு மேற்பட்ட, முதியோர் ஊதியம் பெறும் திக்கற்றவர்களுக்கும் மதிய சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. மதிய சத்துணவை இலவசமாக் 67 இலட்சம் பேர்களுக்கு வழங்க 1983-84ஆம் ஆண்டில் ரூ. 154 கோடி ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


விதவைகள் - அநாதைகள் - வேலையற்றவர் - உடல் ஊனமுடையவர்கள் என்ற தன்மையில் உள்ள ஏழை எளிய பெண்கள், காப்பகக் காப்பாளர், பள்ளிப் பொறுப்பாளர்கள், சமையல் செய்வோர், உதவியாளர்கள் என்ற முறையில் 1,80,000 பேர்கள் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.


மதிய சத்துணவுத் திட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு துவக்கப்பள்ளியிலும் பயிலும் மாணவ-மாணவியர் 19 இலட்சம்பேர்கள் மட்டுமே மதிய உணவை மட்டுமே பெற்று வந்தார்கள். ஆனால் அவர்கள் சத்துணவைப் பெறவில்லை. இப்பொழுது 65 இலட்சம் குழந்தைகள் மதிய சத்துணவைப் பெற்று வருகிறார்கள். முன்பு கொடுத்து வந்த உணவின் மதிப்பு 15 காசுகள், இப்பொழுது கொடுக்கும் சத்துணவின் மதிப்பு 55 காசுகள். முன்பு ஆண்டில் 220 நாட்களுக்கு மட்டுந்தான் மதிய உணவு அளிக்கப்பட்டு வந்தது. இப்பொழுது ஆண்டின் 365 நாட்களுக்கும் மதிய சத்துணவு அளிக்கப்பட்டு வருகிறது.

மனிதனின் மூளை-இதயம் - நுரையீரல்-கல்லீரல்-சிறுநீர்ப்பை எலும்பு -நரம்பு போன்ற உறுப்புக்களின் அடிப்படை வளர்ச்சி 12 வயதிற்குள்ளாகவே நிகழ்ந்து









விடுகின்றது என்று மருத்துவ வல்லுநர்கள் கூறுகின்றனர். அந்த உறுப்புக்கள் முறையான வளர்ச்சியைப் பெற, வைட்டமின்கள், புரதச் சத்து, கொழுப்புச்சத்து, தாது உப்பு, சுண்ணாம்புச்சத்து, இரும்புச் சத்து, மக்னீஷியச் சத்து போன்றவைகள் 12 வயதுக்குள்ளாகவே தேவையான அளவுக்கு உடலில் சேரவேண்டும். அப்படிச்சேர்ந்தால்தான், அப்படிப்பட்ட குழந்தை பிற்காலத்தில் முழு அறிவு, ஆற்றல், வலிவு, வளமை கொண்ட மனிதனாகக் காட்சியளிக்க முடியும். இல்லையென்றால், அறிவாற்றல் அற்ற தேவாங்கு போன்ற உடலமைப்பைக்கொண்ட மனிதன்தான் காட்சியளிக்க இயலும். இந்த நிலைமையை நன்கு அறிந்திருக்கும் காரணத்தால்தான் பொதுவாக மேலை நாடுகள், குறிப்பாக சோவியத் ரஷ்யா நாடு, குழந்தைகளை வளர்ப்பதில் பெரும் முயற்சிகளை எடுத்துக்கொண்டு பெரும்பொருள் செலவழித்துப் பெருங்கவனஞ்செலுத்தி அவர்களை உடல் வலிவு-உள்ள வலிவு பெறும் விதத்தில் வளர்க்க வரு

அதுபோல, தமிழகத்தில் எதிர்காலத்தில் உடலுறுதி கொண்டவர்களாகவும் உள்ள உறுதிபெற்றவர்களாகவும், அறிவு, வலிவு ஆற்றல், திறமை வாய்ந்தவர்களாகவும் ஆள நல்ல குடிமக்களை ஆக்கிட வேண்டும் என்ற எண்ணம்தான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை மதிய சத்துணவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும்படி தூண்டிற்று.

இந்தியாவில் உள்ள குழந்தைகளின் நிலைமையைப் பற்றித் தெளிவாக விளக்கிட வந்த சத்துணவு வல்லுநர் டாக்டர் கோபாலன் அவர்கள், இந்திய அரசின் வெளியீடான 'யோஜனா' என்ற இதழில் அருமையான கட்டுரை ஒன்று வரைந்துள்ளார். அவர் கூறுவதாவது:—

''நமது நாட்டில் 1983ஆம் ஆண்டில் பிறக்கக்கூடிய சுமார் 2 கோடியே 30 இலட்சம் குழந்தைகளில், சுமார் 30 இலட்சம் குழந்தைகள் முதல் ஆண்டு முடிவதற்குள்ளாகவே இறந்துபட்டு விடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது தவிர, மேற்கொண்டு குழந்தைப்பருவத்தைத் தாண்டுவதற்கு முன்பே, சாலையோரங்களில் அநாதைகளாக விடப்பட்டு விடுகிறார்கள். மீதியுள்ள 1 கோடியே 90 இலட்சம் குழந்தைகளில், சுமார் 90 இலட்சம் குழந்தைகள் அவர்களின் குழந்தைப்பருவக் காலத்திற்குள்ளாக போதுமான அளவு ஊட்டச் சத்துணவு இன்மையின் காரணமாகவும், உடல்நலக்குறைவின் காரணமாகவும், உடல் உறுதிப்பாடு இன்மையின் காரணமாகவும் மிக்ககுறைந்த அளவு ஆற்றலையும், மிகக்குறைந்த மன வளர்ச்சியையும் மட்டுமே பெற்றவர்களாக வளர்ந்து, வயது வந்தோர் நிலையை அடைவார்கள். மற்றும் 70 இலட்சம் குழந்தைகள் சற்றுக் குறைந்த ஊட்டச்சத்து காரணமாக அவதிப்படுபவர்களாக மாறுவார்கள். அப்படிப் பட்டவர்கள் பெரிதும் உடல் நலம் -மனநலம் அற்றவர்களாகவே காணப்படுவார்கள். எனவே 1983ஆம் ஆண்டில் பிறக்கக் கூடிய 2 கோடியே 30 இலட்சம் குழந்தைகளில், சுமார் 30 இலட்சத்திற்கும் குறைவான குழந்தைகள் மட்டுமே, உண்மையாகவே மன நலமுடையவர்களாகவும், உடலுறுதியுடையவர்களாகவும், அறிவுத்திறன் வாய்ந்த குடிமக்களாகவும் இந்த நாட்டில் அமைவார்கள்.''

சத்துணவு வல்லுநர் டாக்டர் கோபாலன் அவர்களின் கூற்றிலிருந்து நம் நாட்டில் குழந்தைப் பருவத்தினர்க்கு எந்த அளவுக்கு ஊட்டச்சத்துள்ள உணவு ஊட்ட வேண்டிய கட்டாயநிலை இருக்கிறது என்பதை எளிதில் புரிந்து கொள்ளலாம். இது காரணம் பற்றித்தான் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவர் அவர்கள் குழந்தைகளுக்கான இலவச மதிய சத்துணவுத் திட்டத்தைச் சமுதாயத்தின் ஓர் புரட்சிகரமான திட்டமாகக் கொண்டு வருவதில் பேரூக்கமும், பேருழைப்பும் எடுத்துக்கொண்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், தமிழகத்தில், சிறுகுடி என்ற சிற்றூரில், பண்ணன் கிழான் என்ற வள்ளல் பெருந்தகை, குழந்தைகளுக்கு அன்றாடம் சோறு கொடுத்து வளர்த்து வந்த வரலாற்று நிகழ்ச்சியொன்றைப் புவியரசனும், கவியரசனுமான சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்னும் சோழமன்னன், புறநானூற்றுப் பாடல் ஒன்றின் மூலம் நினைவுபடுத்தியுள்ளார். பண்ணன் கிழான் வழங்கும் சோற்று உருண்டையைக் கையில் வாங்கிக் கொண்டு பெருத்த ஆரவாரத்தோடு சிறு குழந்தைகள் சாரை சாரையாகப் போவார்களாம். அவர்கள் எழுப்புகின்ற மகிழ்ச்சி ஆரவார இரைச்சல், பழுத்த மரத்தில் உள்ள பறவைக்கூட்டம் எழுப்புகின்ற ஓசைகளுக்கு ஒப்ப இருக்குமாம். குழந்தைகள் வெண் சோற்று உருண்டைகளைக் கையில் ஏந்திக்கொண்டு வரிசை வரிசையாகச் செல்வது, முட்டையை ஏந்திக்கொண்டு மேட்டுப்புலம் நோக்கிச் சாரை சாரையாய்ச் செல்லும் சிற்றெறும்புக் கூட்டத்தின் போக்குப்போல இருக்குமாம். பண்ணன் கிழானைச் சோழன் கிள்ளிவளவன் ''பசிப் பிணி மருத்துவன்'' என்று வாயாரப் பாராட்டி மகிழ்கிறார். குழந்தைகளின் பசியாகிய பிணியைப் போக்கும் பணியைச் செய்து வந்ததால், பண்ணன் கிழானை 'பசிப்பிணி மருத்துவன்' என்று அழைக்கிறார் சோழ மன்னன் கிள்ளிவளவன்.

இன்றைய சமுதாய வளர்ச்சியில் ஒரு புரட்சிகரமான மேம்பாட்டை உருவாக்கும் பசிப்பிணியைப் போக்கும் மருத்துவப்பணியைத்தான் தமிழக அரசு குழந்தைகளுக்கான மதிய சத்துணவுத் திட்டத்தின் மூலம் நிறைவேற்றி வருகிறது.

[சென்னை வானொலியில் 1.6.'83 அன்று ஆற்றிய உரை].

# மின் உற்பத்தியைப் பெருக்குவதில்....

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு மின்சாரமே அடிப்படைத் தேவையாகும். இதனையுணர்ந்து, தமிழ்நாடு அரசு, மின்சார வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளித்து, மாநில அரசின் வளர்ச்சித் திட்டத்தில் 35 விழுக்காட்டுக்கு அதிகமான தொகையை மின்துறை வளர்ச்சிக்காக ஒதுக்கியுள்ளது. 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில், மின்துறை வளர்ச்சிக்கென மொத்தம் 1230 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில், 572.3 கோடி ரூபாய் மின்உற்பத்தித் திட்டங்களுக்கு; 325 கோடி ரூபாய் மின் செலுத்துகை-மின் பகிர்வுத் திட்டங்களுக்கு; 115 கோடி ரூபாய் ஊரக மின்மயமாக்கும் திட்டத்திற்கு.

1982-83ஆம் ஆண்டுக்கான மின்துறை முதலீட்டுச் செலவு 220 கோடி ரூபாயாகும்.

1975-76ஆம் ஆண்டில் மின்துறைக்கான முதலீட்டுச் செலவு 45 கோடி ரூபாயாக இருந்தது. 1982-83ல் இது 220 கோடி ரூபாய் அளவுக்கு வளர்ந்துள்ளது.

## சிற்றூர்களுக்கு மின் இணைப்பு:

தமிழ்நாட்டிலுள்ள 15735 சிற்றூர்களில் 31.3.83 வரை 15636 சிற்றூர்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டுவிட்டன.

## வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு:

வேளாண்மை விசையேற்றத்திற்கு மின் இணைப்புக் கொடுப்பதில் அரசு காட்டிய தீவிர அக்கறையின் காரணமாக, கடந்த 1982-83ஆம் ஆண்டில் மட்டும் 19497 மின் தொடர்புகள் வழங்கப்பட்டு, வேளாண்மை விசையேற்றத்திற்கு மின் இணைப்பு வழங்குவதில் மற்றெல்லா மாநிலங்களையும்விட தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# பயறு வளர்ச்சித் திட்டம்

தேசிய பயறு வளர்ச்சி ஆராய்ச்சிப் பண்ணை வம்பனில் 250 ஏக்கரில் ஆரம்பித்து அதற்குப் பலவகை ஆராய்ச்சியில் அனுபவமுள்ள நிபுணர்கள் உதவியினால், புது ரக வித்துக்கள் தமிழ்நாடு பல்கலைக் கழகத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது. இப்பண்ணை புதுக்கோட்டை மாவட்டத்திற்கு மாத்திரமின்றி தமிழ்நாடு முழுவதற்கும் வேண்டிய ஆராய்ச்சியை மேற்கொண்டு வம்பனில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் பயறு வகையில் ஆதார, மூல வித்து ரகங்கள் தயாரிக்கப்படுகிறது.

20 அம்சத் திட்டத்தின் கீழ் பயறு வளர்ச்சி முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, தனிக்குறியீடுகள் வழங்கப்பட்டுள்ளது. பயறு வளர்ச்சி முக்கியமான தொழில் நுட்பங்கள் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறப்பட்டு 23,605 ஏக்கர் பரப்பில் துவரை, உளுந்து, பாசிப்பயறு, தட்டைப்பயறு போன்ற ரகங்கள் பயிரிடப்பட்டுள்ளன. மானாவாரியில் கடலையில் ஊடுபயிராகச் சாகுபடி

# நீலப் பச்சைப் பாசி உற்பத்தித் திட்டம்

இது இயற்கையில் வயல்களில் வளரும் ஒருவகை பாசி. பாசி ஆகாயத்தில் உள்ள தழைச்சத்தை கிரகித்து, நஞ்செய் நிலங்களில் வளருகிறது. இதை ஏக்கருக்கு 4 கிலோ வீதம் நட்ட 10ம் நாள் போடுவதால், 22 கிலோ யூரியா அளவிற்குத் தழைச்சத்து குறைத்துப் போட வாய்ப்புள்ளது.

இந்த நீலப் பச்சைப்பாசி புதுக்கோட்டை மாவட்டத்தில் குளத்தூர், மற்றும் அறந்தாங்கி வட்டப்பகுதிகளில் சில இடங்களில் தானாகவே வளர்ந்து, உரச்செலவைக் குறைக்கிறது. இதுவரை நீலப் பச்சைப்பாசி 18.5 டன் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இது தழைச்சத்தை மிகக் குறைந்த செலவில் அளித்து,

# பொதுத் தொண்டில் வலம் வந்த புனிதர்



உயர்ந்த மலைப் புறத்தில் விளையும் சந்தனம், எழில்மிக்க யாழிலிருந்து பிறக்கும் நெஞ்சையள்ளும் இசை, சிறப்புற்ற சிப்பியில் தோன்றும் முத்து- இவை பிறர்க்குப் பயனும் மகிழ்வும அளிப்பதற்காக உள்ளவை. சந்தனம், தோன்றிய இடத்திற்கு அன்றி, அதைப் பயன்படுத்துவோருக்குக குளிர்ச்சியும் நலனும் அளிக்கிறது. யாழினின்று பிறக்கும் இசை, கேட்போரைப் பரவசப்படுத்துகிறது. எழில் சேர்க்கும் முத்து, அதை அணிவோருக்குச் சிறப்பையும் தகுதியையும் நல்குகிறது. இக் கருத்தை ஒரு புறப்பாடல் விளக்குகின்றது.

தனக்கென வாழாப் பிறர்க்குரிய பெருந்தகையாளர்கள், தங்களுக்கென்றும் தங்களைச் சார்ந்த குடும்பத்திற்கென்றும் மட்டுமே இராது, புற உலகின் நன்மைக்கும் முன்னேற்றத்துக்கும் தங்கள் வாழ்வை அர்ப்பணிக்கின்றனர். நாட்டின் விடுதலைக்கும் இலக்கிய வளர்ச்சிக்கும் தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்கும் தமிழ்நாட்டின் எழுச்சிக்கும் ஏற்றத்துக்கும் பாடுபட்டுத் தமிழர்களின் உள்ளத்தில் இடம்பெற்ற பெருமைக்குரிய திரு.வி. கல்யாணசுந்தரனார், நாட்டின் நலனிற்காக வாழ்ந்து, தன் வாழ்நாளில் நாட்டின் நலன் ஒன்றே பெரிதென உழைத்து உன்னத நிலையை அடைந்த செம்மல்.

எளிய குடும்பத்தில் பிறந்து, வளமான இலக்கியச் செல்வங்களை யாத்து என்றும் அழியாப் புகழை நிலைநாட்டிச் சென்றவர், திரு.வி.க.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அவர் வாழ்ந்த வாழ்வும், அவர் ஆற்றிய தொண்டும், வரலாறாகவே அமைந்துவிட்டன. அவர் ஒரு தனிமனிதரல்லர்; அவர் ஒரு நிறுவனம். அவரைச் சுற்றி அரசியல் வாழ்வு செழித்தது; தமிழ் இலக்கியம் வளர்ச்சியடைந்தது; தொழிலாளர் இயக்கம் வேரூன்றித் தழைத்தது. பெண்ணின பெருமை புலர்ந்தது; சமரச சன்மார்க்க நெறி மலர்ந்தது; செம்மாந்த தமிழ் நடை ஆட்சிபுரிந்தது; தமிழகமே தன்மான உணர்ச்சியில் காட்சி தந்தது.

பூத்துக் குலுங்கும் அழகிய மலரைக் காணும் கவிஞன் என்ன நினைப்பான்? மலருடன் தலைவியை ஒப்பிட்டு அழகைப் பாடுவான். ஓவியன், மலரையும் அதில் ஆடும் வண்டையும் கண்டு, வண்ண ஓவியம் தீட்டுவான். அறிவியல் முனைவன் கண்டால், மலரையும் வண்டையும்-அதனால் ஏற்படும் மகரந்தச் சேர்க்கையையும் எண்ணிடுவதுடன் மலரின் சாறிலிருந்து கிட்டும் வாசனைப் பொருளையும் கண்டறிவான். வாழ்வை மாயமெனும் முனிவன், அன்றலர்ந்து வாடும் மலரன்ன வாழ்க்கையென்பான். ஒரு பொருளைக் காணும் பலர், அவரவர் உள்ளத்திற்கேற்ப எண்ண அலைகளை அலையவிடுவது போல்- திரு.வி.க.வின் வாழ்வும்-பலருக்குப் பல கோணங்களில் அமைந்துவிட்டது.

அவரைத் 'தமிழ் உலகு உய்விக்க வந்த தமிழ்த் தென்றல்' என்றும், 'தமிழ் முனிவர் என்றும் பகர்வர், தமிழ் அறிந்தோர்.



## எஸ்.டி.காசிராஜன்.ஐ.ஏ.எஸ்

**இயக்குநர்**
**செய்தி-மக்கள் தொடர்புத்துறை.**


வடலூர் வள்ளலாருக்கு அடுத்த நிலையில் சன்மார்க்க நெறியைத் தழைத்திடச் செய்த பெருமைக்குரியவர் இவர் என்பர், சமயநெறி தழுவியவர்கள்.

ஆசியாவிலேயே முதன்முதலில் தொழிலாளர்களின் நலன் பேணத் தொழிற் சங்கத்தை நிறுவித் தொழிலாளர்களின் வாழ்விற்கும் வளத்திற்கும் வழிகாட்டிய தந்தை இவர் என்பர், தொழிற் சங்க அமைப்பாளர்கள்.

பெண்கள் அடிமைகள்; ஆண்களின் நலன் காக்கும் கருவிகள் என்றிருந்த நிலையில் - பெண் நலம் நாடாத நாடு நாடன்று; பெண் நலம் பாராத ஆண்மகன் ஆணல்லன்-என்ற




அறுதியிட்டுரைத்து பெண்டிர் பெருமை பேசவந்த தூயோன்-என்றுரைக்கும் பெண்டிர் உலகம்.

இம்முனிவரது வாழ்வு, காந்திய நெறியில் தழைத்தது; வடலூர் வள்ளலார் வழியில் திளைத்தது; சங்க காலப் புலவர்கள் போல் தமிழே மூச்சாகத் திகழ்ந்தது.

டாக்டர் உ.வே. சாமிநாத ஐயரைப் பற்றித் திரு.வி.க. கூறும் புகழுரை:

**" தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று**

எனவரும் பொய்யாமொழிக்கு டாக்டர் சாமிநாத ஐயர் வாழ்க்கை ஓர் இலக்கியம். சாமிநாத ஐயர் தமிழிலே பிறந்தார்; தமிழிலே வளர்ந்தார். தமிழிலே வாழ்ந்தார்! அவர் பிறப்புந் தமிழ்; வளர்ப்புந் தமிழ்; வாழ்வுந் தமிழ். அவர் மனமொழி மெய்களெல்லாம் தமிழே ஆயின. அவர் தமிழாயினார். தமிழ் அவராயிற்று. அவர் தமிழ்; தமிழ் அவர்''

இக்கூற்று, தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களுக்கு முற்றும் பொருந்தும். திரு.வி.க. வின் பிறப்பும் தமிழ்; வளர்ப்பும் தமிழ்; வாழ்வும் தமிழ்; அவர் தமிழ்; தமிழ் அவர்.

திரு.வி.க.வின் தொண்டைச் சுருங்க உரைத்திட்டார் பாவலர் பெருஞ்சித்திரனார் கவிதை வடிவில்!

**" ஒப்பற்ற தமிழ்த் தலைவன்! தமிழ்ப்பற்றென்**
**றொரு பற்றால் மண் பொன் பெண்ணாம்**
**முப்பற்றும் துறந்தமுனி! முனைப்புற்ற**
**தமிழ்த்தொண்டன்! வாழ்க்கை முற்றும்**
**மப்பற்ற வானத்தின் முழுமதிபோல்**
**பொதுத்தொண்டில் வலமாய் வந்தோன்**
**தப்பற்ற பளிங்கனைய தூயவுளம்**
**தமிழ்த் தென்றல் திரு.வி.க.வே!"**

1883ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 26ஆம் நாள் பிறந்த திரு.வி.க.வின் இளமைப் பருவம், இராயப்பேட்டையில் துடிப்பும் மிடுக்கும் மிக்கதாய்க்கழிந்தது. ஆறாம் படிவம் படித்துக் கொண்டிருக்கையில் யாழ்ப்பாணம் கதிரைவேற்பிள்ளையின் தொடர்பால் தேர்வு எழுதுதற்குத் தகுதி பெறாது_மேற்கொண்டும் படிப்பைத் தொடரமுடியாது_நிறுத்தும் நிலையேற்பட்டது.

கதிரைவேற்பிள்ளையை முதன்முதலில் புரசவாக்கத்தில் ஒரு கண்டனக் கூட்டத்தில் திரு.வி.க. பார்த்தார். அவர்தம் நாவன்மையில் உள்ளத்தைப் பறிகொடுத்தார். அவர் வெஸ்லி கல்லூரியில் தமிழாசிரியராக வந்த போது அவருடன் நெருங்கிப் பழகினார்; அவருடைய பித்தனானார். அவர் மீதிருந்த வழக்கில் சாட்சி சொல்லி,படிப்பை நிறுத்திய நிலை ஏற்பட்டது. இவருடைய கருத்து தமிழில் சென்றது; சைவ சமயத்தில் நிலைத்தது.

பள்ளிப் படிப்பு முடிந்த பின்னர் ஏதேனும் வேலைக்குச் சென்று பொருளீட்டும் நிலை ஏற்பட்டது.

''யான் 'லோயர் செகண்டரி செர்டிபிகேட்' உடையவன். 'புக்கீப்பிங் செர்டிபிகேட்' உடையவன். எனது கையெழுத்தோ தலையெழுத்து. எனக்கு என்ன ஊழியங் கிடைக்கும்? ஊழியத்திற்குச் செல்ல மனமெழுவதில்லை. நூல்களை ஆராய்ந்து காலங்கழிக்கவே மனம் விரும்பியது. மனவிருப்பம் நிறைவேறியதா? இல்லை. ஏன்? குடும்பத் தொல்லை பெருகியது'' என்றுரைக்கிறார் திரு.வி.க.

ஸ்பென்ஸர் கம்பெனியில் காட்லாக் டிபார்ட்மென்டில் பணிக்கமர்ந்தார், திரு.வி.க. அப்போது அவருக்குக் கிட்டும் ஓய்வில் நிறையப்புத்தகங்கள் படித்தார்; பாட்டுகள் எழுதினார். அச்சமயத்தில்தான் இவரது ஆசான் கதிரைவேலர் இயற்கை எய்தினார்.

திரு.வி.க.வின் வாழ்க்கையைத் திருப்பிய கதிரைவேலரை இளமையிலேயே இழந்த திரு.வி.க.- ''இந்நாளில் உன்னை இளமையிலேயே இழந்து வாடுகின்றேன். எந்தாய்! எந்தாய்!'' என்று புலம்பி வருந்தியதுடன் அவரைப் பற்றிய சரித்திரம் ஒன்றை முதன் முதலில் ஸ்பென்ஸரில் பணியாற்றும் சமயத்தில் வெளியிட்டார்.

அக்காலப் பகுதியில் வங்காளப் பிரிவினையையொட்டி எழுந்த சுதேசிய இயக்கம் நாடு முழுவதும் பரவத் தொடங்கியது. விபின சந்திரபாலர், சென்னைக் கடற்கரையில் சுதந்திர வேட்கையை மூட்டிச்சொற்பொழிவாற்றினார். திரு.வி.க.வின் உள்ளத்தில் எழுச்சியை ஊட்டிய பேச்சு அவருடையது. லஜபதிராய்

நாடு கடத்தப்பட்ட செய்தி எங்கும் எட்டியது. அரவிந்த கோஷால் நடத்தப்பட்ட 'வந்தே மாதரம்' பத்திரிகையைப் படித்து, இந்திய நிலையை அறிந்தார். இந்தியாவின் நிலையை நேரே காணவந்த கீர் ஹார்டி என்பவர் சில பொருள்களை வாங்குவதற்காக ஸ்பென்ஸர் வந்தபோது அவரைச் சந்திக்கும் வாய்ப்புப் பெற்றார் திரு.வி.க. காலை முக்கால் மணி நேரத்திற்கு முன்னரே ஸ்பென்ஸர் நிலையத்திற்கு வந்து, அங்குள்ளோருக்குப் பத்திரிகைச் செய்திகளை எடுத்துரைத்து ஆங்கிலேய ஆட்சியாளரின் கொடுமைகளை விளக்கியது, பல ஐரோப்பியரை அதிர்ச்சிக்குள்ளாக்கி வந்தது.

இப்பதவியை விடுத்து, ஆயிரம் விளக்குப் பள்ளியின் தமிழாசிரியர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட காலமும் சிறப்பு மிக்கதாய் அமைந்தது. அச்சமயம் அவருக்குத் திருமண ஏற்பாடு நடந்தபோது திரு.வி.க. மனம், திருமணத்திற்கு ஒப்பவில்லை. ஜான் ரத்தினம் அவர்கள், ''தொண்டுக்குத் தனி வாழ்க்கை கூடாது. மணவாழ்க்கை வேண்டும்'' என்று வலியுறுத்தி திரு.வி.க.வை மணம் செய்துகொள்ள ஒப்பு வித்தார். அவரையும் திருமணத்திற்கு அழைத்து வந்தபோது, திருமணத்தில் ஜான் ரத்தினம் ஜெபம் செய்து வாழ்த்துக் கூறியதை திரு.வி.க. பெரிதும் பெருமையாகக் கருதுகிறார். பின்னர், வெஸ்லி கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக ஒன்றரை ஆண்டு தமிழ்த் தொண்டாற்றினார். அரசியல் ஈடுபாட்டினால் அப்பதவியையும் துறந்து அரசியலில் முழுமையாக ஈடுபடலானார்.

இளமைதொட்டே அரசியல் வேட்கை திரு.வி.க.வின் உள்ளத்தை ஆட்கொண்டதற்கு இரண்டு சிறப்பான காரணங்கள் இருந்தன. முதலாவது காரணம், திரு.வி.க. பெரிதும் போற்றிவந்த அன்னிபெஸண்ட் அம்மையார் சிறையேகியது; இரண்டாவது காரணம், அப்போது முகிழ்த்த ஜஸ்டிஸ் கட்சியை எதிர்த்து நாட்டில் ஒற்றுமை நிலைநாட்டப் படவேண்டுமென்னும் பேரவா. சாதி வேற்றுமையைக் கடலில் அழுத்திவிட்டு, நாம் அனைவரும் இந்தியமக்கள் என்ற ஒருமித்த உயரிய உணர்ச்சியை, இந்தியத் தோட்டத்தில் பூத்திடச் செய்ய வேண்டுமென்ற உள்ளக்கிடக்கை திரு.வி.க.விற்கு இருந்ததும் அரசியல் ஈடுபாட்டிற்குரிய மற்றொரு காரணம். அவர் ஒன்பதாம் வகுப்புப்படிக்கும்போதே, திரு. அனந்தாச்சார்லு, திரு. ஜி. சுப்பிரமணிய ஐயர், டாக்டர் நாயர், திரு. வி. கிருஷ்ணசாமி ஐயர், ஆகியோரின் காங்கிரஸ் இயக்கம் பற்றிய ஆங்கில உரையெனும் தேனைப் பருகி உளம்பூரித்துப்போனார். 1907ம் ஆண்டில் திலகர் தலைமையில் இந்தியா முழுவதும் அமித வாதப் பிரச்சாரம் நடைபெற்றது. தமிழகத்தில் வ.உ.சிதம்பரனார், சுப்ரமணிய சிவா, கவி பாரதியார், ஸ்ரீநிவாசாச்சாரியார், எஸ். துரைசாமி ஐயர் முதலியோர் அரசியலில் அக்காலக்கட்டத்தில் முனைப்பாகச் செயலாற்றி வந்தனர். 1917ம் ஆண்டில், காங்கிரஸ் இயக்கத்தில் நேரடி ஈடுபாடுகொண்டு வெளிப்படையாகச் செயலில் முனைந்தார், திரு.வி.க. பின்னர், திரு.வரதராஜுலு நாயுடு, பெரியார் ஈ.வே.ரா., ஆகியோருடன் இணைந்து காங்கிரஸ் இயக்கத்தின் வளர்ச்சிக்குப் பாடுபட்டார், திரு.வி.க.


பெரியாரின் நட்பைப் பெற்ற நிகழ்ச்சி பற்றி திரு.வி.க. குறிப்பிடுகின்றார். ''ஈரோட்டில் சென்னை மாகாணச் சங்க இரண்டாம் ஆண்டு மாநாடு 11.10.1919, 12.10.1919-ல் குழுமியது. அதன் தலைவர் லார்ட் கோவிந்த தாஸ்; வரவேற்புரைத் தலைவர் ஈ.வே. இராமசாமி நாயக்கர். நாயக்கர் நட்பை அம் மாநாட்டிலேயே யான் பெற்றேன்.''

பெரியார் ஈ.வே.ரா. பற்றி திரு.வி.க. எத்தகைய உயர்ந்த மதிப்பீடு செய்திருந்தார். என்பது அவரது கூற்றிலிருந்தே தெளிவாகும்.

''முன்னாளில் தமிழ்நாட்டில் காங்கிரஸ் தொண்டு செய்தவர் என்ற முறையில் எவர்க்கேனும் பரிசில் வழங்கப் புகுந்தால் முதற் பரிசில் நாயக்கருக்கே செல்வதாகும். தமிழ் நாட்டுக் காங்கிரஸ் நாயக்கர் உழைப்பை நன்றாக உண்டு கொழுத்தது. நாயக்கரும் யானும் சேர்ந்து சேர்ந்து எங்கெங்கோ தொண்டு செய்தோம். காடு மலையேறியும் பணிபுரிந்தோம்,'' என்று பெரியாரின் தொண்டைப் பாராட்டியதுடன் திரு.வி.க.வும். இரண்டறக் கலந்து காங்கிரஸ் இயக்கத்திற்கு ஆற்றிய தொண்டைக் குறிப்பிடுகிறார்.

பெரியார், திரு.வி.க. மீது அளவிடற்கரிய பாசமும் நேசமும் கொண்டிருந்தார். திரு.வி.க.வே ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட்டுக் கூறுகின்றார்.

1942ம் ஆண்டு இராமசாமிப்பெரியார் ஜெனரல் ஆஸ்பிடலில் படுக்கையில் கிடந்த


இயற்றிய நூல்கள்

போது அவரைக் காண சக்கரைச்செட்டியாரும், சண்முகானந்தசுவாமியும்,ஜானகிராம் பிள்ளையும், யானும் சென்றோம். யான் அவர் கட்டிலில் நெருங்கி அமர்ந்தேன். நாயக்கர் என் கையைப் பற்றிக் கதறினார். என் குட்டை நனைந்தது. நாயக்கர் கண்கள் ஏன் முத்துக்களை உகுத்தன? அக்காட்சி கண்டவர் ''இங்கே பலர் வருகிறார்;போகிறார்;எவரைக் கண்டும் நாயக்கர் அழுதாரில்லை. இவரைக் கண்டதும் அவருக்கு அழுகை ஏன் பெருகியது? என்று ஒருவரோடொருவர் பேசியது என் காதுக்கு எட்டியது'' என்று குறிப்பிடுகிறார். பெரியார், திரு.வி.க.விடம் உயரிய மதிப்பும் நம்பிக்கையும் தமிழகத்தை வழிநடத்திச் செல்லும் ஆற்றல் மிக்கவர் என்ற எண்ணமும் கொண்டிருந்தார் என்பதும் நாம் அறிந்து கொள்ளத் தக்கதாகும்.

திரு.வி.க. அரசியலில் ஈடுபாடு கொண்டிருந்த போதும் தனிமனித சுதந்திரம் அவரால் போற்றப்பட்ட ஒன்றாகும்.


''உரிமை என் பிறவியின் இயல்பு. உரிமை எனது பிறவிக் கூறாதலின், அஃது என்னை அடிமைக் குழியில் விழாதவாறு காத்தே வருகிறது. அடக்கம் எனது உடைமை. அடிமை எனது பகைமை. உடன் பிறந்தவரிடத்தும் யான் அடிமையாயிருக்க ஒருப்படேன். அவர்க்கு உயிரையும் நல்கும் அன்பார்ந்த தொண்டாற்றுவதில் எனக்கு ஆர்வம் உண்டு'' என்கிறார் திரு.வி.க. ஆதிக்கத்தால் பிறர்க்கு அடிமை செய்யும் வாழ்வை வெறுத்த அவர், அன்பினால், பண்பினால்-பிறர்க்குத் தொண்டாற்றுவதை ஏற்றார்.

திரு.வி.க.வின் அரசியல் நுழைவும் அரசியல் வாழ்வும் எழுச்சி பெற்று அவரது தொண்டு சிறந்திடத் தக்க வாய்ப்பு அளித்தது 'தேச பக்தன் '' ஆசிரியர் பொறுப்பாகும். 5.12.1917ல் கல்லூரித் தமிழ் ஆசிரியர் பதவியை அடுத்து 7.12.1917ல் ''தேசபக்தன்'' ஆசிரியர் பதவியை ஏற்றார். இவர்பால் நாட்டங்கொண்ட நண்பர்கள், இவர் கல்லூரி ஆசிரியர் பதவியை விட்டு வந்திருக்கக் கூடாதென்றும், மீண்டும் அப்பணிக்கே செல்ல வேண்டுமென்றும் வலியுறுத்தினர். இந்நிலையில், 'நியூ இந்தியா'' ''தேச பக்தன்'' வெளிவரும்;அதன் ஆசிரியர் திரு.வி.கலியாண சுந்தரனார்'' என்று பெருமையோடு விளம்பரம் வெளியிட்டது. அதன் ஆசிரியர், இவர் அப்பொறுப்பை ஏற்றதைப் பாராட்டியும் எழுதியிருந்தார். சோர்வடைந்திருந்த திரு.வி.க.வின் உள்ளத்தில் எழுச்சி பொங்கியது; வீழ்ந்த மனம் எழுந்தது. செயல்படத் தொடங்கினார். தேசபக்தனுக்கென்று தனி நடை கண்டார் திரு.வி.க; எளிமையில் கருத்துக்கள் விளங்கும் முறையைப் பின்பற்றினார்.

'தேசபக்தன்' பொறுப்பேற்று திரு.வி.க. தமிழ்த் தொண்டு செய்த காலை, தமிழகத்தின் நிலை என்ன? தமிழ்மொழிப் பத்திரிகைகளில் ஆங்கில மொழி ஆதிக்கமே அதிகம். அரசியல் குறியீடுகள் ஆங்கிலத்தில் அவ்வாறு வெளியிடப்படும். இந்நிலையில், 'தேசபக்தன்' புரட்சியை விளைவித்தது; நல்ல, இனிய தமிழில் செய்திகளை வெளியிட்டுத் தமிழ்ப் பத்திரிகையாகவே வெளிவந்தது. அரசியல் மேடைகளில் தலைவர்கள் ஆங்கிலத்தில் பேசி வந்ததை, 'தேசபக்தன்' இதழில் திரு.வி.க. கண்டித்து எழுதி அந்நிலையை மாற்றினார். 'தேசபக்தன்' செய்த புரட்சி பற்றி திரு.வி.க. குறிப்பிடுகின்றார்: ''தேசபக்தன் எழுப்பிய கிளர்ச்சி தலைவர்களைத் தமிழ் பேச வைத்தது. இந்நாளில் மேடைகளில் பேசுவதற்பொருட்டுத் தலைவர்கள் 'தேசபக்தனைப்' படித்ததும் தமிழாய்ந்த ஐரோப்பியப் பாதிரிமார் பலர் 'தேசபக்தன்' சந்தாதாரராயதும் ஈண்டுக் குறிக்கத்தக்கன. **'தேசபக்தன்' தமிழரை அந்நிய மோகத்தினின்றும் விடுவித்தான்** என்று சொல்வது மிகையாகாது''.

நாட்டின் நாட்டுப் பற்றையும் நாட்டுத் தலைவர்களிடம் மதிப்பையும் மரியாதையையும் பரப்பிடத் ''தேசபக்தன்'' மூலம் வீறு கொண்டு அருந்தொண்டாற்றினார் திரு.வி.க. 'தேசபக்தன்' அலுவலகத்திலுள்ள இவரது மேசை மீது திலகர் பெருமான் உருவம் பொலிவுறும். அந்த உருவம் திரு.வி.க. நெஞ்சில் உரிமைக்கனலை எழுப்பி வந்தது.


கிலாபத் கிளர்ச்சி, சத்தியாக்கிரக இயக்கம், பஞ்சாப் படுகொலை நடைபெற்ற சமயங்களில் அந்நிகழ்ச்சிகளை விவரித்து தேசபக்தனில் திரு.வி.க. எழுதிய அனல் பறக்கும் கட்டுரைகள், எரிமலையைக் கக்குவதாய் அமைந்தன.




அச்சமயத்தில் தேசபக்தர் சிலர் புதுவையில் இருந்தனர். வ.வே.சு. ஐயர் , சுப்பிரமணிய பாரதியார் ஆகியோர் புதுவையில் வாழ்ந்தனர். ''இருவரும் பிரிட்டிஷ் எல்லையில் வாழும் உரிமையுடையவராயிருத்தல் வேண்டும்'' என்ற கிளர்ச்சியை 'தேசபக்தனில்' திரு.வி.க. தொடங்கி வெற்றியும் பெற்றார். புதுவையிலிருந்து இருவரும் வெளியேறித் தமிழகம் வந்தனர். வ.வே.சு. ஐயர், திரு.வி.க.விற்குக் கடிதம் எழுதினார். ''தாங்கள் ''பக்தனில்'' அடிக்கடி எழுதியதன் பயனாக நான் ஆங்கில இலாகாவுக்கு யாதொரு நிபந்தனையும் தடையுமின்றி வரலாம் என்று அரசாங்கத்தார் பதில் இறுத்திருக்கிறார். என் நன்றியை எதிர்பார்த்துத் தாங்கள் கிளர்ச்சி செய்யவில்லையாகிலும் என் மனமார்ந்த நன்றியைத் தங்களுக்கு நான் தெரிவியாமலிருத்தல் எங்ஙனம் சாத்தியம்'' என்று நன்றி கூறிக் கடிதம் எழுதினார்.

(தொடர்ச்சி 33-ஆம் பக்கம்)





# தெலுங்கு கங்கை திட்டம் தொடக்க விழா

எல். ராஜேந்திரன்

தமிழகத்தின் தலைநகராம் சென்னை மாநகருக்கு எப்போதாவது ஏற்படும் குடிநீர்ப் பஞ்சத்தை நிரந்தரமாக நீக்க, ஒரு புதிய ஏற்பாட்டைச் செய்திருக்கிறது தமிழக அரசு. கிருஷ்ணா நதி நீர்த் திட்டமே அது.

'தெலுங்கு கங்கை திட்டம்.' என்ற பெயரில், திறந்த கால்வாய் வடிவில் ஆந்திரத்திலிருந்து தமிழகத்திற்குப் பாந்தமுற வரவிருக்கிறது கிருஷ்ணா நதிநீர்.

'தெலுங்கு கங்கை திட்டத்'திற்கான உடன்பாட்டில், ஆந்திரத் தலைநகர் ஐதராபாத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்;ஜி.ஆர். அவர்களும் மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு.என்.டி.ராமாராவ் அவர்களும் கையெழுத்திட்டனர் (19.4.83). அதன்பின் அத்திட்டத்திற்கான தொடக்கவிழா ஆந்திர மாநிலத்தில் சீரோடும் சிறப்போடும் நடாத்தப் பெற்றது.

27.4.83ல் நடைபெற்ற அவ்விழாவில் இரு மாநில முதல்வர்களும் பெருமிதத்தோடு பங்கேற்றனர்.

**பிரம்மகாரி மடம்**

720 கோடி ரூபாய் செலவில், மூன்று முதல் ஆறாண்டுகளுக்குள்ளே நிறைவு பெற்றிட இருக்கும் 'தெலுங்கு கங்கை திட்டத்'தின் முதற்கட்டத் தொடக்க விழா 'பிரம்மகாரி மடம்' என்ற இடத்தில் பிரம்மாண்டமான அளவில் நடைபெற்றது.

'நாளை நடப்பதை யாரறிவார்' என்று கூறிப் பெரு மூச்சு விடாமல் 'நாளை நடப்பதை நானறிவேன்' என்று எதிர்கால நிகழ்ச்சிகளை அப்படி அப்படியே கணித்துச் சொல்லி விட்டுப் போன ராஜ யோகியாம் 'பிரம்மகாரி' (1605-1695) என்ற பெரியவர்.

அவரது அரிய உபதேசங்களால் ஈர்க்கப்பட்டவர் என்ற காரணத்தாலேயே மாண்புமிகு ஆந்திர முதல்வர் அவர்கள் மூன்று இடங்களில் விழா ஏற்பாடு என்றாலும் முதலாம் இடமாக நல்ல மலைப்பகுதியில் உள்ள இதைத்தேர்ந்தெடுத்தார் எனக் கூறப்பட்டது.

பிரம்மகாரி முனிவரின் கொள்கை வழி நடப்போர் எனச் சிலர் நமக்கு அறிமுகம் செய்யப்பட்டனர். என்ன அவர் கொள்கை எனக் கேட்கிறோம்-

சாதிமத பேதமற்ற சமுதாயம்...
விதவைப் பெண்டிர் மறுமணம்...
பால்ய மணம் தவிர்த்தல்...






—என அடுக்கிக் கொண்டே போகிறார்கள். போலித் துறவியல்ல, போற்றத்தக்க மனிதர்தான் என நாமும் அந்த பிரம்மகாரி பெரியவர் பற்றி பெருமைகொள்கிறோம்.

சித்திரவடம் நவாபு தந்த 7 ஏக்கர் நிலத்தில் மடம் ஒன்று கட்டிவைத்திருக்கிறார் அவர். அதைச் சுற்றிக் கொஞ்சம் வீடுகள் முளைத்திருக்கின்றன. இந்தப் பகுதியே பிரம மகாரிமடம் எனப்படுகிறது.

'ஸ்ரீமத் வீரதர்மேந்திரகாரு ஜீவித சரித்திரம்' என்ற பெயரில் இல்லறம் கண்டு துறவு வழிப்பட்ட அந்த மாமுனிவரின் வாழ்க்கை திரைப்படமாகியிருக்கிறது தெலுங்கில். அதில் அவராக நடித்திருக்கிறாராம் இன்றைய மாண்புமிகு ஆந்திர முதல்வர்.

இத்தகு சிறப்புடைய பிரம்மகாரி மடத்தின் மலைவெளியில் காலை 9 மணியளவில் 'தெலுங்கு கங்கை திட்ட' முதலாவது தொடக்க விழா.


மேற்கே கதிரவன் மறைவதையும், கிழக்கே எழில் நிலா எழுவதையும் காணவே போலக் கடப்பாவிலிருந்து முதல்நாள் இரவே அப்பகுதிக்குப் போய்ச்சேர்கிறோம் நாம். நாலாபுறமும் மலைச்சுவர், வானக்கூறை.



மறுநாள் அதிகாலை முதலே விழா இடம் நோக்கித் திருவிழாக் காணவே போல மக்கள் வெள்ளம். இடையிடையே கார்கள், பஸ்கள், லாரிகள், டிராக்டர்கள். எல்லாவற்றின் உள்ளும் புறமும் மக்கள். கரும்புத்துண்டமே தெரியாமல் ஈக்கள் மொய்த்திருக்குமே? ... அப்படி!

சிலபேர் கைகளில் கனத்த சோற்று மூட்டைகள் அவர்கள் புறப்பட்ட ஊர்களின் தொலைவைக் காட்டின.

முன்னாள் ஆந்திர மாநில உள்ளாட்சித் துறை அமைச்சர் சல்ல சுப்பராயடு என்பாரை நமக்கு அறிமுகம் செய்கிறார்கள்.







''இந்தத் திட்டத்தைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்''?—கேட்கிறோம்.

'' உள்ளபடியே இதற்காக நாங்களெல்லாம் எம்.ஜி.ஆருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். தமிழகத்திற்குக் குடி நீருக்கான இத்திட்டத்தால் ஆந்திராவின் வறண்ட பகுதிகளும் வளமாகப் போகிறதே, அதற்காக நாங்கள் பெரிதும் மகிழ்வடைகிறோம்''— என்கிறார் அவர்.

ஆந்திராவிலிருந்து புறப்பட்டு 250 மைல் பயணத்தின் பின்னாலே சென்னை நகரை அடையவிருக்கும் 'தெலுங்கு கங்கை' கால்வாயையொட்டி பிரம்மகாரி மடத்தில் அமையவிருக்கும் நீர்த்தேக்கத்திட்டத்தின் தலைமைப் பொறியாளர் திரு.எஸ்.பிரபாகர், தனி அலுவலர் திரு. சிவ்ராமகிருஷ்ணன், எல்லோரும் நமக்கு அறிமுகமாகின்றனர்.

''இந்தத் திட்டத்தைப் பற்றி உங்கள் கருத்தென்ன?'' பாதுகாலாபட்டு கிராம அதிகாரியான திரு. செஞ்சி ரெட்டியிடம் கேட்கிறோம்.

''உதவற அளவுக்கு வசதி இருக்கும் போது உதவி பண்றதுல தப்பில்லே'' நல்ல தெலுங்கில் சொல்கிறார் அவர்.

மணி 8.10. மேலே ஹெலிகாப்டர் சப்தம் கேட்கிறது. V.T.6. ஹெலிகாப்டரில் காவி நிறம் கண்ணைப் பறிக்கிறது.


''என்.டி.ஆர். காருக்கு'' என்ற ஒரு குரல் எழுகிறது. ''ஜே'' என்ற பல குரல்கள் அந்த ஹெலிகாப்டரின் சப்தத்தையும் மிஞ்சுகின்றன.

கீழே இறங்கிய மாண்புமிகு முதல்வர் திரு.என்.டி.ராமாராவ் மாவட்ட ஆட்சித் தலைவரால் வரவேற்கப்படுகிறார். மக்களுக்கெல்லாம் மகிழ்ச்சி தெரிவிக்கிறார். திறந்த ஜீப் அவரை ஏற்றிக் கொண்டு பிரம்மகாரி முனிவரின் மடத்திற்குப் போகிறது. பதினைந்தே நிமிடத்தில் திரும்புகிறது.

மணி 8.30. மீண்டும் ஒரு ஹெலிகாப்டர் சப்தம். மேலே பார்க்கிறோம். **VT-EHI** ஹெலிகாப்டர். ''எம்.ஜி.ஆர். காருக்கு''... ஒரு குரல் வெடிக்கிறது. ''ஜே'' பல குரல்கள் விண்ணை இடிக்கின்றன.

மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி. ஆர். அவர்களை மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு. என்.டி.ராமாராவ் அவர்கள் மல்லிகை மாலை அணிவித்து மார்புறத் தழுவி வரவேற்கிறார்.

இருவரும் நாதசுர இசைக் குழுவோடு



மேம்பட அமைந்த மேடைக்கு அழைத்து வரப்படுகிறார்கள்.

**முதலில்...**

மேடைக்கு இடப்புறம் அமைக்கப்பட்டிருந்த அடிக்கல் மாண்புமிகு ஆந்திர முதல்வர் தலைமையில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்படுகிறது.

'கடப்பை மாவட்டம், பத்வேல் வட்டம். 27.4.83... ஆந்திர மாநில அரசு நீர்ப்பாசனத் துறை... தெலுங்கு கங்கை திட்ட அடிக்கல் நாட்டு விழா... மாண்புமிகு ஆந்திர மாநில முதல்வர் என்.டி.ராமாராவ் தலைமையில், மாண்புமிகு தமிழக முதல்வர் எம்.ஜி.ராமச்சந்திரன் அடிக்கல் நாட்டினார்...' என்ற கருத்தில் தெலுங்கு வாசகங்களும் அதன் கீழே ஆங்கில வாசகங்களும் அந்தக் கருப்புச் சலவைக் கல்லில் கவினுறச் செதுக்கப்பட்டுள்ளன.

**விழாத் தொடக்கம்**

''எங்கள் தெலுங்குத் தாயை வணங்குகிறோம்'' (மா தெலுங்கு தல்லி) வாழ்த்துப் பாடலோடு 8.45 இளம் வெய்யிலில் கூட்டம் தொடங்குகிறது.

ஆந்திர மாநில அரசு தயாரித்த 'The Telugu Ganga Project' என்ற மலரை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வெளியிட, மாண்புமிகு ஆந்திர முதல்வர் அவர்கள் பெற்றுக் கொள்கிறார்.

மாண்புமிகு ஆந்திர மாநில நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு நல்லபுரெட்டி சீனிவாசலுரெட்டி வரவேற்புரையாற்றுகிறார்.

''முப்பதாண்டுக் காலமாக முடியாத பிரச்னையாயிருந்த இத்திட்டத்தை மூன்றே மாதத்தில் முடித்துவைத்த பெருமை நமது முதல்வர் என்.டி.ஆரைச் சேரும். அண்டை மாநிலமானாலும் சென்னை மக்கள் குடிநீரின்றி அவதிப்படுகிறார்கள் என்றறிந்தபோது மனந்துடித்து இத்திட்டத்தில் விரைவான முடிவு கண்டார் அவர். இந்த 'தெலுங்கு கங்கை திட்டத்'தின் நிறைவு விழாவிலும் என்.டி.ஆர். அவர்களும் எம்.ஜி.ஆர். அவர்களும் சேர்ந்தே பங்கேற்பார்கள் என்பது உறுதி..''

—இவ்வாறு அவர் வரவேற்புரையாற்றிய பின்னர் பத்வேல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.வீராரெட்டி இரு மாநில முதல்வர்களுக்கும் வாழ்த்திதழ்கள் படித்துக் கொடுத்தார். நூறாண்டுக் காலத்தின் முன் தொடங்கிய கிருஷ்ணா நதிநீர் பற்றிய பேச்சு வார்த்தை நல்லபடி முடிவுற்றதற்கு அவ் வாழ்த்தில் மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டிருந்தது.

அடுத்துப் பேசிய மாண்புமிகு ஆந்திர மாநில வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. ஜானா ரெட்டி பேசுகையில் ''லட்சோபலட்சம் விவசாயப் பெருமக்கள் நலன் காக்கும் இத்திட்டத்தை மக்கள் மகிழ்ந்து வரவேற்கிறார்கள்'' என்று குறிப்பிட்டார்.

காவி தரித்துவிட்ட மாண்புமிகு ஆந்திர



கம்பீரமாக எழுந்து மைக்கைப் பிடித்தார். மக்கள் வாழ்த்தொலி மலைகளில் எதிரொலித்தது.

சுந்தரத் தெலுங்கில் அவர் ஆற்றிய உரைச் சுருக்கம் வருமாறு:

இந்த அரசு மக்களால் உருவாக்கப்பட்டது; ஆகவே மக்கள் நலனே முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு பாடுபட்டு வருகிறது. தமிழ்நாடு வேறு மாநிலமானாலும் அவர்களோடு நாம் சகோதரபாசம் கொண்டிருக்கிறோம். அதற்கு இத்திட்டம் உதாரணமாகும்.

தெலுங்கு கங்கை திட்டத்தின் தொடக்க நாளான இந்த நாள் நமக்கெல்லாம் ஒரு புனித நாள். சகோதர சகோதரிகளிடையே மகிழ்ச்சி அலை மோதுவதை நான் காண்கிறேன்.


மக்களே அரசு. அரசே மக்கள். ஆகவே, எல்லோருக்கும் பலன் கிட்டும் வகையில் ஆறு கோடி ஆந்திர மக்களின் மகிழ்ச்சிக்காக நான் பாடுபட்டு வருகிறேன்.

தேர்தல் நேரத்தில் நான் மக்களுக்குப் பல்வேறு வாக்குறுதிகள் கொடுத்தேன். அவற்றையெல்லாம் நிறைவேற்றுவதற்கான முதற்கட்டமே இது.

அண்டையில் உள்ள சென்னை மக்கள் குடிக்க நீரின்றி அவதிப்படுகிறார்கள். அடுத்தவர்களின் அல்லலைப் போக்குவதே மனுஷத்தனம். தர்மம். இதைத்தான் பிரம்மகாரி என்ற ராஜயோகியும் சொன்னார். அதைத்தான் நாம் இன்று செய்கிறோம்.

உழைக்கும் வர்க்கத்தை மதிக்கும் அரசு இது. இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி போட முடியுமா என்பதைப் பரிசீலித்து வருகிறோம்.

தெலுங்கு கங்கைதிட்டத்தின் மூலம் தெலுங்கு தேசமும் தமிழ்நாடும் ஒன்றுக்கொன்று விசுவாசமாக இருக்கவேண்டும். இருக்கும். இந்தியா இருக்கும்வரை நமக்குள் இந்த ஒற்றுமை நீடிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.



படுத்தாமல் எதிர்கால நீர்த் தேக்கமான திறந்தவெளி மலைச்சரிவில் அமர்ந்திருந்த லட்சோப லட்சம் மக்களும் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் தமது உரையைத் தெலுங்கிலே துவக்கியது

கண்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். மாண்புமிகு ஆந்திர முதல்வரும் கைத்தட்டி களிப்புத் தெரிவித்தார்.

சில நிமிடங்களின்பின், கரும்புத் தமிழில் தொடர்ந்த மாண்புமிகு தமிழக முதல்வரின் உரையினைத் தெலுங்கில் மொழிபெயர்க்க ஒரு அதிகாரி முன்வந்தவர்-ஆரம்பத்திலேயே தயங்கித் தவிக்க, மாண்புமிகு ஆந்திர முதல்வரே எழுந்து அதைத் தெலுங்கில் மொழிபெயர்க்கலானார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உரை விவரம் வருமாறு:

சித்திரா பௌர்ணமியில் நடக்கும் இந்த அடிக்கல் நாட்டுவிழா ஆந்திர மக்களுக்கும் தமிழக மக்களுக்கும் உள்ள சகோதர பாசத்திற்கு எடுத்துக் காட்டாக நடக்கின்ற விழாவாகும்.

இத்திட்டத்தால், ஆந்திராவில் உள்ள ராயலசீமா போன்ற பகுதிகளில் இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு எவ்வளவு நன்மை என்று இங்கே பேசியவர்கள் குறிப்பிட்டனர்.

தமிழகத்தில் 65 லட்சம் ஏழைக் குழந்தைகளுக்கு அரசு மூலம் இலவசச் சத்துணவு அளித்து வருகிறோம். அதேபோல் இங்கே எனது தம்பி, ஆந்திர முதல்வர் என்.டி.ஆர். அவர்கள் ஏழை எளிய குழந்தைகளுக்கு ரொட்டியும் பாலும் தந்து வருவதை நான் மனமாறப் பாராட்டுகிறேன். இன்றைய குழந்தைகள் நல்ல ஊட்டச் சத்தோடு வாழ்ந்தால்தான் எதிர் காலத்தில் இத்தேசம் ஒளிமயமாகும். இத்தகைய திட்டம் இந்தியா முழுவதும் வரவேண்டும்.

எங்கே போனாலும் வேலை இல்லை; போதுமான சம்பளம் கிடைக்கவில்லை; சொந்தமாகக் குடியிருக்க வீடில்லை என்கிறார்கள். இது தமிழகத்திலோ, ஆந்திராவிலோ மட்டுமல்ல; இந்தியா முழுவதும் இருக்கிறது. இந்த நிலை மாறப் புதிய திட்டங்கள் தீட்டப்படவேண்டும்.

படித்தவர்கள் நூற்றுக்கு நூறு என இருந்தாக வேண்டும். தாய்மார்கள், நூற்றுக்கு எழுபது சதவீதத்துக்கும் குறைவாகவே படித்தவர்கள் இருப்பதை வருத்தத்தோடு குறிப்பிடுகிறேன்.

ஆந்திர முதல்வர் அவர்கள் இத்திட்டத்திற்கு ஒத்துக்கொண்டது ஏன் என்று சிந்திக்கிறேன். வெறும் விவசாயத்திற்கு மட்டுமல்ல தண்ணீர். இத் திட்டத்தின் மூலம் பல லட்சக் கணக்கான மக்களுக்கு வேலையும் தரவிருக்கிறார். இந்த அணைக்கட்டு கட்டும் போது லட்சக் கணக்கான வேலையற்றோர் வேலை பெற இருக்கின்றனர். அதுபோலவே தான் கோடிக்கணக்கான ரூபாயில் கால்வாய் வெட்டும் திட்டமும்.

பாசனத்திற்குத் தண்ணீர் - குடிப்பதற்குத் தண்ணீர் - மக்களுக்கு வேலை எல்லாம் இத்திட்டத்தில் இருக்கிறது. உழைக்கும் மக்களுக்கு வேலை வாய்ப்பு நிச்சயம் கிடைக்கும். அதேநேரத்தில் பல தொழில்கள் பெருகும். இதைச் சுற்றி சிறுசிறு தொழில்கள் இங்கு தோற்றுவிக்கப்படும். வேலைவாய்ப்பு உறுதியிருந்தால், மக்கள் வாழ்வு உத்தரவாதத்தோடு மேம்படும். இன்சூரன்ஸ் போல வாழ்க்கை உத்தரவாதம் கிட்டும்.

மாண்புமிகு ஆந்திர முதல்வர் அவர்கள் இங்கே பேசுகிறபோது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். சொன்னதை நிறைவேற்றுகிறேன் என்றார். எந்த மாநிலத்திலும், மூன்றே மாதத்தில் இப்படி திட்டமிட்ட வரலாறே கிடையாது. அது என்.டி.ஆர். ஒருவரால்தான் முடிந்திருக்கிறது- நாட்டு மக்களாகிய உங்கள் துணையுடன்.

இந்தத் துணை அவருக்கு எப்போதும் இருக்கவேண்டுமென என் தாயாம் தெய்வத்தை வேண்டுகிறேன்.

இத்திட்டத்தின் மூலம் சென்னையில் உள்ள 45 லட்சம் மக்களுக்குக் குடிநீர் கிடைக்கவிருக்கிறது. அங்கே தமிழ் பேசுவோர் மட்டுமல்ல; தெலுங்கு பேசுவோரும் இருக்கின்றனர். இதுமட்டுமல்ல; கர்னாடக மக்களும், குஜராத்-பஞ்சாப்-மகாராட்டிரம் இப்படிப் பல மாநில மக்களும் அங்கே இத்தண்ணீரைக் குடிக்கவிருக்கின்றனர்.

இதை இங்கு நான் கூறக் காரணம், சகோதரர் என்.டி.ஆர்., ஆந்திராவுக்கு மட்டுமல்ல; எல்லோருக்கும் சொந்தம். அவ்வகையில் அவர் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன். அண்ணா நாமம் வாழ்க!

—இவ்வாறு மாண்புமிகு தமிழக மு, ல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் உரையாற்றினார்.

மாண்புமிகு ஆந்திர மாநில மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு ராமுனு ரெட்டி நன்றி கூறினார்.

**மற்ற விழாக்கள்**

இதற்கடுத்த துவக்க விழா அதே நாளில் சின்ன முக்கப் பள்ளியில் நடைபெற்றது.அங்கே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தெலுங்கு கங்கை திட்டத் துவக்கவிழாவில் மாண்புமிகு ஆந்திர முதல்வர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

பிற்பகலில், கர்நூல் மாவட்டத்தில் உள்ள வெளுகோடு என்ற இடத்தில் நடைபெற்ற துவக்கவிழா நிகழ்ச்சிக்கு மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு.என்.டி.ஆர். அவர்கள் தலைமை தாங்க, மாண்புமிகு தமிழக முதல்வர் திரு.எம்.ஜி.ஆர். அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

# உண்ணாவிரதத்தின் உயரிய நோக்கம்

'காமர்ஸ்' (Commerce) என்னும் ஆங்கில வார இதழில் (19.2.1983) அதன் ஆசிரியர் திரு. வாடிலால் தக்ளி (Vadilal Dagli) 'அயல் நாட்டினருக்கு அரிசி' ஆனால் இந்தியருக்கு இல்லை' என்று தலைப்பில் எழுதியுள்ள குறிப்பு :

அரிசி வழங்குவதில் தமிழ்நாட்டை மத்திய அரசு புறக்கணித்து வருவதை எடுத்துக் காட்டும் வகையில் தமிழக முதல்வர் மேற்கொண்ட அடையாள உண்ணாவிரதத்தை ஏடுகள் கேலி செய்து எழுதியதைக் கண்டு வியந்தேன், வேதனையும் அடைந்தேன். முதல்வர் உண்ணாவிரதம் இருப்பதை கேலிக்குரியச் செயலாகக் கருதுவது என்பது எண்ணிக்கூட பார்க்க முடியாததாகும். தனது எதிர்ப்பை மத்திய அரசுக்கு தெரிவிப்பதற்காகத்தான் அவர் உண்ணாவிரதம் இருந்தாரே அன்றி, மத்திய அரசை மிரட்டி பணியவைப்பதற்காக அன்று. எனவே அவர் எவ்வளவு மணி நேரம் அல்லது எத்தனை நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார் என்பது முக்கியமல்ல. ஆனால் என்ன நோக்கத்திற்காக அவர் இருந்தாரோ அது நிறைவேறிவிட்டது. தமிழகத்தின் தேவையை நாடு உணரவேண்டும் என்று அவர் கருதினார். அகில இந்தியாவின் கவனத்தை ஈர்த்த அவர் உண்ணாவிரதம் அந்த எண்ணத்தை ஈடேற்றிவிட்டது. மக்கள் நலனுக்காக மக்கள் தலைவர்கள் உண்ணாவிரதம் இருப்பது நாட்டை பெரும் கொந்தளிப்பில் ஆழ்த்தும், ஆகையால், குறுகிய கால அளவில், அதுவும் மிகவும் முக்கிய காரணங்களுக்காகத் தான் அது நிகழவேண்டும். ஏனெனில் குறுகிய கால உண்ணாவிரதம் குழப்பங்களும், சங்கடங்களும் ஏற்படுவதை தவிர்க்கின்றது. அப்படி உண்ணாவிரதம் இருப்பவர்கள் நன்றிக்குரியவர்கள் ஆவார்கள். அந்த வகையில் பார்த்தால் தமிழக முதல்வரின் தெளிந்த நிதானத்துக்கு நாம் நன்றி சொல்லவேண்டும்.

தமிழகத்திற்கு போதுமான அளவு அரிசி அளிக்கப்படாததை சுட்டிக்காட்டுவதற்காகத் தான் தமிழக முதல்வர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டார். பசி கொடுமையானது. அதனை அலட்சியப்படுத்தவோ கேலி செய்யவோ கூடாது. மத்திய அரசின் அதிகாரத்திற்குட்பட்ட வானொலி, தொலைக்காட்சி நிறுவனங்கள் இந்நிகழ்ச்சியினை புறக்கணித்ததாக அறிகிறேன்.

நான் ஒரு சிறு கேள்வி கேட்க விரும்புகிறேன்; மத்திய அரசு ரஷ்யாவிற்கும் சவுதி அரேபியாவிற்கும் அரிசியை ஏற்றுமதி செய்யும் போது, தமிழக மக்கள் அரிசி வேண்டுமென்று எதிர்பார்க்கக்கூடாதா? திரு எம். ஜி. ஆர். அவர்களை புரிகின்றவர்கள், 1980-81-ல் ரூ. 224 கோடி அளவிற்கும் 1981–82-ல் ரூ. 343 கோடி அளவிற்கும் அரிசியை வெளிநாட்டிற்கு ஏற்றுமதிசெய்தது ஏன் என்று மத்திய அரசைப் பார்த்து வினா தொடுத்ததாக எனக்குத் தெரியவில்லை. 1982-83 ஆம் ஆண்டிலும் அரிசி வெளிநாட்டிற்கு ஏற்றுமதியாகியுள்ளது.

தமிழ் நாட்டு மக்களுக்கு அரிசி தேவை என்கிறபோது மத்திய அரசு, ரஷிய மக்களையும் சவுதி அரேபிய மக்களையும்விட தமிழக மக்களைத்தான் முதலில் சிந்திக்க வேண்டும்.

மத்திய அரசின் வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை இந்தியாவின் ஒற்றுமையை பல வீனப்படுத்துகிறது.

---

# நில உரிமையாளர்களுக்கு...

நில உடைமைப்பதிவு மேம்பாட்டுத்திட்டம் திட்டத்தின் குறிக்கோள்கள் என்ன?

விவசாயிகள் தங்கள் உரிமைகளை எளிதில் அறிய முடியும். கூட்டுப் பட்டாக்கள் தனிப் பட்டாவாக மாற்றப்படும். சிட்டா போன்ற கிராமக் கணக்குகளில் நில உரிமையாளர்களின் பெயர்கள் குறிப்பிடப்படும். விற்பனை, பாகப்பிரிவினை நிலங்களை மாற்றிக்கொள்ளுதல் போன்ற மாறுதல்களை சரியான முறையில் கிராமக் கணக்குகளில் பதிவு செய்யப்படும். நீண்ட நாட்களாக மறு நிலவரித்திட்டம் மேற்கொள்ளப்படாத காரணத்தால் புதுப்பிக்கப்படாத புலப்படச் சுவடிகள் மற்றும் 'அ' பதிவேடுகள் தற்போது நடைமுறையிலுள்ள 'மெட்ரிக்' முறையில் தயார் செய்யப்படுகின்றன.

இத்திட்டத்தின் வாயிலாக ஏற்படும் நன்மைகள்:

ஒவ்வொரு புலத்தினையும் மீண்டும் அளந்து, வருவாய்த் துறை பதிவேடுகளில் பதிக்கப்படும். பூமியில் உட்பிரிவுகள் செயல்படுத்தப்படும். கூட்டுப் பட்டாக்களை தனிப் பட்டாக்களாகப் பிரித்து தரப்படும். விவசாயிகள் தங்கு தடையின்றி வங்கிகளில் கடனுதவி பெற வாய்ப்பு பெருகும். அவர்கள் தங்கள் உரிமையினை எளிதில் அறிய முடியும் அரசுக்குச் சொந்தமான நிலங்களின் எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு அவற்றிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவும் இத்திட்டம் வகை செய்யும். மேலும் கூட்டுப் பட்டா நிலங்களின் ஈட்டின் பேரில் வாங்கப்பட்ட கடன் பணத்தை உரியவர்களிடத்தில் வசூல் செய்ய இத்திட்டம் வகை

செய்யும். இத்திட்டத்தின் கீழ் பட்டா புத்தகங்கள் புதுப்பிக்கப் படுவதால் விவசாயிகளுக்குத் தங்கள் கைப்பற்றியுள்ள நிலத்தின் எல்லா விவரங்களும் அந் நிலத்தில் தங்களுக்குள்ள உரிமைகளையும் அறிய வாய்ப்பு ஏற்படுகிறது. மேலும் பட்டாதாரர்களுக்கு அவர்களுக்குச் சொந்தமான நிலங்களுக்கான புலப்படங்களும் எல்லா அளவுகளுடனும் கொடுக்கப்படுகிறது. புலப்படங்கள் கொடுக்கப்படுவதினால் நில உடைமைத்தாரர்கள் தங்களது நிலத்தின் வடிவமைப்பைப் பிறர் உதவி இல்லாமல் எளிதில் அறிந்து கொள்ள உதவுகிறது.

இதுநாள் வரை குடும்பத்தில் பாகப்பிரிவினை ஏற்படுங்கால், நிலங்களை பாகத்திற்கேற்ப பிரித்து தர விவசாயிகள் அதற்குண்டான கட்டணத்தைச் செலுத்திவிட்டு அலுவலர்களை நாடி அல்லலுற வேண்டியிருந்தது. இதனால் பண விரயமும் கால தாமதமும் நேர்ந்து வந்தது. இந்நிலை இத்திட்டத்தின் கீழ் தவிர்க்கப்படுகிறது.

புதிய திட்டப்படி மனு இல்லாமலேயே நிலங்கள் பிரிவினைப் பத்திரங்களையும் அனுபோகத்தையும் அனுசரித்து அளக்கப்பட்டு பிரித்து தரப்படுவது மட்டுமின்றி பட்டா மாறுதலும் உடனுக்குடன் செய்து கொடுக்க இத்திட்டம் வகை செய்கிறது.

மேலும் விவசாய வருமான வரி வசூல் செய்வதில் கூட்டுப்பட்டாவாக இருந்தால் யார் மேற்படி வரியை செலுத்த வேண்டும் என்று துல்லியமாக நிர்ணயிக்க முடிவதில்லை. தனிப்பட்டாவாக பிரித்து இருந்தால் யார் எவ்வளவு எந்தப் பயிருக்கு விவசாய வருமான வரி செலுத்த வேண்டும் என்று தீர்மானிக்க ஏதுவாகிறது.

இத்திட்டத்திற்கு மாநிலம் முழுவதற்கும் 5.75 கோடி ரூபாய் (80 யூனிட்டுகளுக்கு) ஒதுக்கப்பட்டு, அதில் இம்மாவட்டத்திற்கு 0.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் நில உரிமையாளர்களுக்கு ஒரு ஒப்பற்ற வரப்பிரசாதமாகும். நிலப் பதிவேடுகளில் நெடுங்காலமாக இருந்து வந்த குறைகளைக் களைவதுடன், விவசாயப்பெருங்குடி மக்கள் பொருளாதாரத்துறையில் முன்னேற ஒரு வாய்ப்பையும் இத் திட்டம் வழங்குகிறது. நில உரிமையாளர்கள் தங்கள் நிலங்களின் எல்லைகளைக் குறித்து வழக்கினை வழக்கு மன்றங்களுக்கு எடுத்துச் செல்லப்பட வேண்டிய நிலம் இத்திட்டத்தால் பெருமளவு தவிர்க்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது ஒதுக்கப்பட்டுள்ள கூடுதல் பணியாளர்களைக் கொண்டு மாவட்டம் முழுவதையும் இரண்டு ஆண்டுகளில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.



# கூட்டுறவுச்சங்க ஊழியருக்குப்புதிய திட்டம்

இந்தியாவிலேயே முதன்முறையாகக் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கான ஒரு புதிய - சிறந்த திட்டம் அமலுக்கு வந்துள்ளது.

ஆம், அதுதான் ‘குழு காப்பீட்டுத் திட்டம்’ (Group Insurance Scheme).

இத்திட்டத்தின்படி, பணிக்காலத்தில் இறக்கும் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு ஆறாயிரம் ரூபாய்க்குக் குறையாமல் நிதி உதவி கிடைக்கும்.

சென்னை ‘பாம் குரோவ்’ ஓட்டலில், ஏப்ரல் 29 ஆம் நாள், தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியின் சார்பில், இந்தக் குழுக் காப்பீட்டுத் திட்டத்தின் தொடக்க விழா நடந்தது.

துவக்கத்தில் தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியின் தனி அலுவலர் திரு இரா. ஆறுமுகம் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், ‘‘இது ஒரு சமுதாய மறுமலர்ச்சித் திட்டம், கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் ஊழியர்களின் குடும்பங்களுக்குப் பாதுகாப்பளிக்கும் திட்டம்’’ என்றார்.

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு. எ. பால்ராஜ் இ. ஆ. ப. அவர்கள் இத்திட்டத்தை வெகுவாகப் பாராட்டிப் பேசினார்.

உணவு மற்றும் கூட்டுறவுத் துறையின் ஆணையாளரும், செயலாளருமான திரு. என். கிருஷ்ணமூர்த்தி இ. ஆ. ப. அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில், கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்குப் பாதுகாப்பளிக்கும் சிறந்த திட்டம் இது என்று குறிப்பிட்டார்.

குழு காப்பீட்டுத் திட்டத்தைத் துவக்கி வைத்து, மாண்புமிகு சட்டம்—கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்:

‘‘மாநிலக் கூட்டுறவுப் பதிவாளரின் கட்டுப்பாட்டில் இருக்கும் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் 45 ஆயிரம் பணியாளர்களுக்கு மே முதல் நாள் முதல் இந்தத் திட்டம் அமலுக்கு வருகிறது.

‘‘பதிவாளர் பொறுப்பில் உள்ள பல்வேறு துறைகளில் உள்ள கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் 40 ஆயிரம் பேருக்கும் இந்தத் திட்டத்தைக் கொண்டு வரத்தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன’’.

இந்த விழாவில், பம்பாயிலுள்ள ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திரு என். சுந்தரேசன் அவர்கள் கலந்து கொண்டு இத்திட்டத்தின் சிறப்பினை எடுத்துக் கூறினார்.

பிற மாநிலங்களுக்கு வழிகாட்டுகிற வகையிலே, தமிழ்நாட்டின் இந்தக் குழு காப்பீட்டுத்திட்டம் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்றால் அது மிகையல்ல,

பி. வி. ஜி.




பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாளினையொட்டி சென்னை கடற்கரையிலுள்ள பாவேந்தர் பாரதிதாசன் சிலைக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்களும் மாண்புமிகு அமைச்சர்களும் 29.4.83 அன்று காலையில் மாலை அணிவித்தார்கள்.



சென்னை ஆயிரம் விளக்குப் பகுதியின் குடிநீர் வசதிக்காக அமைக்கப்பட்ட 25 குழாய்கள் துவக்கி வைக்கப்பட்டன. மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களும், மாண்புமிகு கல்வியமைச்சர் திரு சி. அரங்கநாயகம் அவர்களும் விழாவில் பங்கேற்றனர்.



மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் 24.4.83 அன்று செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள கிராமங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்ட நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வறட்சி நிவாரணப் பணித் திட்டத்தின்கீழ் புத்தாடையும், நலிந்தோர் நல்வாழ்வுத் திட்டத்தின்கீழ் கிராமப்புற ஏழை எளியோர்களுக்கு தொழில், விவசாயக் கருவிகள், தையல் எந்திரங்கள், கறவை மாடுகள், நிலப்



முதல்வர் சத்துணவுத் திட்டம் பற்றி மாண்புமிகு கல்வியமைச்சர் திரு சி. அரங்கநாயகம் அவர்களை, ஆந்திர மாநில மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. பி. ஆனந்த கஜபதி ராஜு அவர்கள் 28.4.83 அன்று சந்தித்து முதல்வர் சத்துணவுத் திட்டம் பற்றி கலந்துரையாடினார்.

# படமும் செய்தியும்




சென்னையிலிருந்து பாண்டிச்சேரிக்கு செல்லும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் குளிர்பதன வசதியுடைய பேருந்தை மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் திரு எஸ். முத்துசாமி அவர்கள் 2.5.1983 அன்று துவக்கி வைத்தார்.





தமிழ்ப்புத்தாண்டு நாளன்று (14.4.83) தஞ்சாவூரில் நிலமற்ற ஏழைவிவசாயத் தொழிலாளர்களுக்கு இலவச வேட்டி சேலைகளை மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் வழங்கினார். விழாவுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. க. மெய்கண்டதேவன் தலைமை வகித்தார்.

TAMILNADU
FOREST PLANTATION
CORPORATION
LIMITED

# 'வியூலே' ரப்பர்

இன்று இன்றியமையாத பொருளாக விளங்குவது ரப்பர். ஹிவியா என்று அழைக்கப்படும் ஒருவகை மரத்திலிருந்து கிடைக்கும் பால் பதப்படுத்தப்பட்டு ரப்பராகக் கிடைக்கின்றது. பெட்ரோலியத்திலிருந்து செயற்கை முறையில் செய்யப்படும் மற்றொரு வகை ரப்பரும் இன்று புழக்கத்தில் அதிகமாக உள்ளது.

'வியூலே' என்ற ரப்பர் கொடுக்கும் தாவரம் நூறு ஆண்டுகளுக்கு முன்பே உலகத்திற்குத் தெரிந்திருந்தும் தற்போது புழக்கத்தில் உள்ள இயற்கை, செயற்கை ரப்பர் முன் அது ஒரு முக்கியமானதாகக் கருதப்படவில்லை. ரப்பர் தோட்டங்கள் உற்பத்திக்குத் தகுந்த நீர்வளம், நிலவளம் அதிகமாக இல்லை என்ற காரணத்தாலும், பெட்ரோலியத்தின் விலை அதிகமாகக் கூடிக்கொண்டு போவதாலும், லத்தீன் அமெரிக்கா, யு.எஸ்.ஏ., போன்ற நாடுகளிலும் 'வியூலே' செடிக்குப் புதிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

உலக நிலப்பகுதியில் மூன்றில் ஒரு பங்கு வறண்ட வளம் குறைந்த நிலமாகும். இம்மாதிரி நிலங்களில் 'வியூலே' இயற்கையாக வளரும் செடியானதால் இதன் முக்கிய பலன் சமீபகாலமாகத்தான் அதிகரித்து வருகிறது.

வியூலே மழை குறைந்த (ஆண்டுக்கு 15''-25'') வெப்பமான (32-38) சுக்கான் நிலத்தில் நன்றாக வளரும். கரிசல் மண் தவிர மற்ற நிலங்களிலும் இதனைப் பயிரிடலாம். இது 2-3 ஆண்டுகளில் 3 அடி உயரப் புதராக வளர்க்கக்கூடியது. அந்த நிலையில் அதை முழுவதும் அறுவடை செய்யலாம். செடியின் எடையில் கால்பங்கு உலர்ந்த ரப்பராகக் கிடைக்கும். உயர்ந்த ஹிவியா ரப்பர் ரகத்தோடு வியூலே ரப்பரை ஒப்பிடலாம்.

தமிழ்நாட்டில் இதற்கு ஏற்ற வறண்ட பகுதிகளான திருநெல்வேலி, இராமநாதபுரம், புதுக்கோட்டை, திருச்சி, மதுரை, தர்மபுரி போன்ற மாவட்டங்களில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் உண்டு. ஏக்கருக்கு 1000 முதல் 1500 செடிகள் வரை நடலாம்.


அமெரிக்க நாட்டில் இதனை உயர்ந்த கலப்பினங்களாக உருவாக்குவதிலும் நல்லதொரு பணப்பயிராக உண்டாக்குவதிலும், ஆராய்ச்சிகள் நடந்து கொண்டு வருகின்றன. மெக்சிகோ நாடு இதனைப் பெரிய அளவில் பயிரிட முன்வந்துள்ளது.

தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம், மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தோடு கொண்டுள்ள தொடர்பால் மெக்சிகோ நாட்டிலிருந்து விமானம் மூலம் வரவழைக்கப்பட்ட 10,000 வியூலே செடிகளில் இச் செடியைப் பயிராக்கும் நோக்கத்தோடு புதுக்கோட்டை மாவட்டத்திற்கு 300 செடிகள் கொடுக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இம்மாவட்டத்தில் இந்த அதிசயச்செடி நடப்படுவது இதுவே முதல் தடவையாகும். இன்று உருவாகும் இச்சிறிய ''வியூலே'' தோட்டத்தின் மூலமாக விதைகளை உண்டாக்கி மேன்மேலும் பெருக்கி மேலும் பல இடங்களில் வளரும் ஒரு பணப்பயிராக்கிக் கொள்ளலாம். சமூக நலக்காடுகளின் ஆக்கப்பணிகளில் இது ஒரு முக்கிய இடம் வகிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் 22.2.'83 அன்று புதுக்கோட்டையில் "வியூலே" ரப்பர் கன்றுச் செடியை நட்டார்கள்.





# குஜராத்தில் ஒரு பாலாறு!

பி. வி. கிரி

அதோ! அங்கு ஆடவர், பெண்டிர், சிறுவர், சிறுமியர் எல்லாம் பால் கலயத்தை வைத்துக் கொண்டு வரிசையாக நிற்கிறார்களே!

வரிசை முறை ஒழுங்காக-கொஞ்சம்கூடச் சத்தம் இல்லாமல் அமைதியாகச் செல்கின்றதே!

ஆம். ஒவ்வொருவராக, தாம் கொண்டு வந்த பாலை அங்குள்ள ஒருவரிடம் தருகிறார்கள். அவர், அந்தப் பாலில் கொஞ்சம் மாதிரிக்காகக் எடுத்துக் கொண்டு, மீதிப் பாலை எடைபோடுகிறார். பக்கத்திலிருப்பவர், பாலின் அளவையும், அவர்களுக்குத் தர வேண்டிய தொகையையும் அட்டையில் குறித்துத் தருகிறார். அட்டையை எடுத்துக் கொண்டு போய் ஒரு'கவுண்டரில்' கொடுக்க, அங்கு அவர்கள் கொடுத்த பாலுக்குரிய பணம் தரப்படுகிறது. 'கியூ' நகர்கிறது. இயந்திரம் போல் பணி ஒழுங்காக நடக்கிறது; பார்க்க அழகாகவும் இருக்கிறது.

ஆம். மோக்ரி கிராமத்தில் உள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில்தான் இந்த அரிய காட்சியை நாம் காணமுடிகிறது.

குஜராத் மாநிலத்தில் உள்ள ஓர் அழகிய கிராமம்-தான் மோக்ரி. இக்கிராமத்திற்கு அருகில் இருப்பதுதான் ஆனந்த் தேசிய பால் வள வளர்ச்சி வாரியம் (National Dairy Development Board ). இதைப் பார்த்துப் பல செய்திகளை அறிந்து கொள்கிற வாய்ப்பு, தமிழக நிருபர்களுக்குக் கிடைத்தது.

மேலே சொன்ன பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச்சங்கங்கள் பல பகுதிகளிலும் உள்ளன. அவற்றின் மூலம் பால் சேகரிக்கப்பட்டு, பிரம்மாண்டமான 'அமுல்' பால் பண்ணைக்குக் கொண்டுவரப்படுகிறது.

முதலில் ஆனந்த் தேசிய பால் வள வளர்ச்சி வாரியத்தின் வரலாற்றைத் தெரிந்து கொள்வோம்.

குஜராத் மாநிலத்தில் ஆனந்த் என்னுமிடத்திலுள்ள இந்தப் பால் வள வளர்ச்சி வாரியம், நாட்டிற்கே ஒரு முன்மாதிரியாக விளங்குகின்றது.

தொடக்க காலத்தில், அதாவது 1945ஆம் ஆண்டில், கெய்ரா மாவட்ட வேளாண்மைத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலைமை மிகவும் மோசமாக இருந்தது.



பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில்...


உழவுத் தொழில் நடைபெறாத காலத்தில், அன்றாட வாழ்க்கை நடத்துவதற்கே அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டனர். இக்காலங்களில் கறவை மாடுகளைப் பேணி பாலை விற்று பட்டினியைத் தவிர்க்க வேண்டியதாயிற்று. பால் வழங்கீட்டை ஒப்பந்தக்காரர்களும், இடைத்தரகர்களும் கட்டுப்படுத்தி வந்தனர். அவர்கள் விவசாயிகளிடம் குறைந்த விலைக்குப் பாலை வாங்கி, பம்பாயில் அதிக விலைக்கு விற்றனர்.

1945ஆம் ஆண்டில் பம்பாய் பால் பங்கீட்டுத் திட்டம் அரசினால் தொடங்கப் பெற்றது. இதற்குச் சுமார் 420 கிலோமீட்டர் தொலைவிலுள்ள ஆனந்தியிலிருந்து பால் கொண்டுவர வேண்டியதாயிற்று. பாலைச் சூடாக்கி குளிர வைத்து, பக்குவப்படுத்தினால்தான் பால் திரிந்துவிடாது, இவ்வளவு தொலைவுக்கு வந்து சேரமுடியும். எனவே, 'பால்சன் கம்பெனி'யுடன் அரசு இதற்கான ஏற்பாடுகளைச் செய்தது.

இதனாலும் கெய்ரா மாவட்ட விவசாயிகளுக்கு நன்மை ஏற்படவில்லை. அவர்கள் சர்தார் பட்டேலை அணுகி ஆலோசனை கேட்டனர். 1942ஆம் ஆண்டிலேயே அவர், பால் விற்பதற்கெனக் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்கக் கேட்டுக் கொண்டார். பாலைப் பக்குவப்படுத்தும் கருவியைக் கூட்டுறவுச் சங்கமே நிறுவ வேண்டும் என்றும் தெரிவித்தார். இக்கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க அரசு இணங்கவில்லை என்றால், பாலை விற்காமல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட வேண்டும் என்றும் தெரிவித்தார். இதனை விவசாயிகளின் பிரதிநிதிகள் ஏற்றுக் கொண்டனர்.

கெய்ரா மாவட்டத்திற்கு, சர்தார் பட்டேல் தமது நண்பர் மொரார்ஜி தேசாயை அனுப்பி வைத்தார். அவர் தலைமையில் பால் வழங்கா வேலைநிறுத்தம் 15 நாட்கள் நடைபெற்றது. நிலைமையைக் கவனிக்க ஆங்கிலேய ஆணையர் ஒருவர் அனுப்பி வைக்கப்பட்டார். பின்னர் அரசு பணிந்து, கெய்ரா மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தை ஆனந்தில் அமைக்க இசைவளித்தது. 1948ஆம் ஆண்டில் பாலைப் பக்குவப்படுத்தும் நிலையமும் அமைக்கப்பட்டது. நாளொன்றுக்கு 250 லிட்டர் பால் மட்டுமே அப்போது விற்கப்பட்டது.

1948 இறுதிக்குள் 432 விவசாயிகள் கூட்டுறவு ஒன்றியத்தில் உறுப்பினர்களாகச் சேர்ந்தனர். விவசாயிகள் வழங்கும் பாலுக்கு அன்றாடம் விலை கொடுக்கப்படவே, திரளான விவசாயிகள் கூட்டுறவுச் சங்கத்தில் சேர்ந்த



தேசிய பால்வள வாரியத்தின் எழில்மிகு தோற்றம்.

னர். குளிர்காலத்தில் பால் உற்பத்தி இருமடங்கு பெருகவே அதிகப்படியான பாலை குறைந்த விலைக்கே விவசாயிகள் விற்க நேரிட்டது.

இந்த உபரிப் பாலை பயன்படுத்தும் திட்டத்திற்கு யூனிசெப் (UNICEF) நிதி உதவி செய்தது. உபரிப் பாலை வெண்ணெய்யாகவும், பால் பவுடராகவும் மாற்ற ஏற்பாடு செய்யப்பட்டது. நியூசிலாந்து அரசும் கொழும்புத் திட்டத்தின்கீழ் நிதி உதவி அளிக்கவே ரூ. 50 இலட்சம் செலவில் பாலைப் பக்குவப்படுத்தும் தொழிற்சாலை அமைக்கப்பட்டது. இதற்கு 1954 நவம்பர் மாதத்தில் இந்தியக் குடியரசுத் தலைவர் அடிக்கல் நாட்டினார். 1955ஆம் ஆண்டு அக்டோபர் 31ந் தேதி, அப்பொழுது பிரதமராக இருந்த பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இத்தொழிற்சாலையைத் திறந்து வைத்தார்.

இதனால் கிராம மக்களிடையே பெரும் ஊக்கம் ஏற்பட்டது. கிராமங்களில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மேலும் மேலும் அமைக்கப்பட்டன. 1958ஆம் ஆண்டில் இந்தத் தொழிற்சாலை விரிவாக்கப்பட்டது. கெட்டிப்படுத்தப்பட்ட பால் உற்பத்தியாயிற்று. 2500 டன் குழந்தை உணவும், 600 டன் பாலாடைக் கட்டியும் தயாரிக்கப்பட்டன.

1960ஆம் ஆண்டில், பெருமளவில் விற்பனை செய்யக்கூடிய தொழிற்சாலை ஒன்று தொடங்கி வைக்கப்பட்டது. பின்னர் கால்நடை உணவு தயாரிக்கும் தொழிற்சாலை 1964ஆம் ஆண்டில் இயங்க ஆரம்பித்தது.

1963ஆம் ஆண்டில் இந்திய இராணுவத்திற்காக, கெய்ரா பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் நாளொன்றுக்கு 20 டன் வெண்ணெய்யையும், 40 டன் பால் பவுடரையும் உற்பத்தி செய்தது.

ஆனந்த் பால் வளத் தொழிற்சாலைகளின் தொகுதிக் கூடங்களில் நாளொன்றுக்கு 500,000 லிட்டர் பால் பக்குவப்படுத்தி அனுப்பப்பட்டது. 1974ஆம் ஆண்டில் இது நாளொன்றுக்கு 750,000 லிட்டராக அதிகரித்தது. பின்னர் சாக்லேட், மாச்சத்து சேர்ந்த உணவு ( Malted food ) உற்பத்தியாயிற்று.

ஆறு மாவட்ட ஒன்றியங்கள் ஒன்று சேர்ந்து, ஒரு உயர் மட்ட இணையத்தை அதாவது குஜராத் பால் விற்பனைக் கூட்டுறவு இணையத்தை அமைத்தன. 2388 முழுநேர ஊழியர்கள் பணியாற்றினர். இவர்களில் 18 பேர் வெளிநாடுகளில் பயிற்சி பெற்றவர்கள். 97 பேர் பால் பண்ணை நிபுணர்கள். 43 பேர் பொறியாளர்கள். 58 பேர் கால்நடை மருத்துவர்கள்.

'அமுல்' பால் பவுடர் மற்றும் பால் பண்டங்கள் எல்லாம் எப்படித் தயாரிக்கப்படுகின்றன என்பதைப் பார்ப்போம்.

கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து பெறப்படும் பாலானது, பால் பண்டங்களாக மாறுகின்ற விந்தையினை நேரில் காண முடிந்தது.

குஜராத் மாநிலம், கெய்ரா மாவட்டத்தில் 894 கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் சங்கங்கள் உள்ளன. அவற்றின் உறுப்பினர்கள் 3.39 இலட்சம் பேர், இங்கு 16 கோடி கிலோ கிராம் பால் கொள்முதல் செய்யப்படுகின்றது.

* * *

உலகிலேயே முதல் தடவையாக எருமைப் பாலிலிருந்து பால் பவுடரும், குழந்தை உணவும் இங்குதான் தயாரிக்கப்பட்டது.

* * *

ஆனந்தில் தலைமைக் கால்நடை மருத்துவ நிலையம் ஒன்று உள்ளது. இது கைடா மாவட்டத்திலுள்ள நான்கு முக்கியப் பகுதிகளுடன் தொடர்பு கொண்டு, கிராமங்களுக்குக் கால்நடை மருத்துவர்களை உடனுக்குடன் அனுப்பி வைக்கிறது. இந்நிலையத்தில் வயர்லெஸ் வசதியுடன் 18 ஜீப் வண்டிகள் உள்ளன. ஆகவே, எந்தப் பகுதிக்கும் இவை உடனே சென்று கால்நடைகளுக்கு மருத்துவம் பார்க்க முடிகிறது. இந்நிலையம் 24 மணி நேரமும் இயங்குகிறது.

* * *



**வெண்ணெய் தயாரிக்கும் நவீன இயந்திரம்.**

# இது எவ்வாறு இயங்குகிறது?

கெய்ரா மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தின் தலைமைச் செயலகம் ஆனந்தில் உள்ளது.

இங்குள்ள பால்பண்ணை பெரும் வளர்ச்சியடைந்து வெற்றிகரமாக விளங்குவதை நேரில் கண்டறிவதற்காக, திட்டம் வகுப்பவர்களும் - பொருளாதார வல்லுநர்களும் -நிர்வாகிகளும் - பால்பண்ணை அமைப்பதில் ஈடுபட்டிருப்பவர்களும் இங்கு வந்து செல்கிறார்கள்.

ஆனந்த் முன் மாதிரித் திட்டம் இரண்டு கட்ட அமைப்புகளுடன் கூடியது:

1. கிராமக் கூட்டுறவுச் சங்கம்- ஆரம்ப நிலை உற்பத்தியாளர்களைக் கொண்டது- இங்கு பால் சேகரிக்கப்படுகின்றது.

2. ஒன்றியமானது, பாலைப் பக்குவப்படுத்துவதையும், விற்பனை செய்வதையும், மற்றும் கறவை மாடுகள் அதிகப் பால் தருவதற்குத் தொழில் நுட்ப அம்சங்களைக் கவனித்துக் கொள்வதையும் கண்காணிக்கிறது.

செயற்கை முறையில் கருத்தரித்தல், கறவை மாடுகளுக்கு மருத்துவம், தரமான கால்நடைத் தீவனம் போன்றவற்றையும் இந்த ஒன்றியம் கவனிக்கிறது.

இத்திட்டம் வெற்றியடையக் காரணம் என்ன?

விவசாயிகள் தரும் பாலுக்கு நியாய விலை -நுகர்வோருக்குத் தரமான பால்- முன்பு இடைத் தரகர்களுக்குக் கிடைத்த லாபம், இப்பொழுது பால் பண்ணையின் வளர்ச்சித் திட்டத்திற்குப் பயன்படுகிறது.

உற்பத்தியைப் பெருக்குவதும், பெருமளவில் இலாபம் கிடைக்க வழி செய்வதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்கள் பல வகைகளில் நன்மை அடைகிறார்கள். மாவட்டம் முழுவதும் விவசாயிகள் கொடுக்கும் பாலுக்கு ஒரே மாதிரியான விலை. ஒவ்வொரு உறுப்பினருக்கும் ரூ. 40 முதல் ரூ. 50 வரை போனஸ்.

கிடைக்கும் மொத்த இலாபத்தில் ஒரு பகுதி அறக்கொடைக்கும், கால்நடைகளைப் பேணுவதற்கும், கட்டடங்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது. இவைதவிர நூல் நிலையங்கள், ஆரம்ப, உயர் நிலைப் பள்ளிகள் அமைக்கவும், கிராமச் சாலைகள் போடவும், மருத்துவ நிலையங்கள், சுகாதார மையங்கள், குடிநீர் வசதிகள் முதலியவற்றிற்கும் பயன்படுத்தப்படுகிறது.

கிராமங்களில் சாதி வேற்றுமை மறைந்து பெண்களின் நிலை உயர்கிறது.

ஆனந்த் முன் மாதிரித் திட்டம், 1978ஆம் ஆண்டுக் கணக்குப்படி, நாடு முழுவதும் ஆந்திரா ,பீஹார், குஜராத், அரியானா, கர்நாடகம், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரம், பஞ்சாப், ராஜஸ்தான், தமிழ்நாடு (மதுரை, ஈரோடு )உத்திரபிரதேசம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் பின்பற்றப்படுகிறது.

அழகிய சூழ்நிலையில், பிரம்மாண்டமாகக் காட்சியளிக்கிறது. அமுல் பால்பண்ணை. 'அமுல்' என்ற பெயர் எப்படி வந்தது? **Anand Milk Union Ltd.**, என்ற பெயரிலுள்ள முதல் எழுத்துக்களின் கோவையே **'AMUL'** ஆகும்.

அமுல் பால் பண்ணைக்குள் நுழைகிறோம்.

லாரிகளில், பால் 'கேன்'கள் வந்த வண்ணமிருக்கின்றன. 'கேன்'களில் உள்ள பாலின் தரத்தை ஒருவர் பரிசோதித்த பிறகே, பால் உள்ளே அனுப்பப்படுகிறது. ஓரிடத்தில், கேன்களில் உள்ள பாலை அப்படியே சாய்த்துக் கொட்டுகிறார்கள். உலோகக் கால்வாயில் பால் ஆறு போல

உள்ளே ஓரிடத்தில் பால் சூடாக்கும் பெரிய பெரிய எவர் சில்வர் டாங்குகள் உள்ளன. ஒவ்வொன்றும் 15,000 லிட்டர் பால் கொள்ளளவு உள்ள டாங்குகளாகும். இம்மாதிரி அங்கு எட்டு டாங்குகள் இருப்பதைப் பார்க்க முடிந்தது. ஒரு இலட்சம் லிட்டர் பால் கொள்ளளவு உள்ள பெரிய உயரமான உறை(டாங்கு) ஒன்றும் இங்குள்ளது.

முதலில் குளிர்ந்த பால் சூடாகி இயந்திரத்தின் மூலமாக ( **Roller Drying Plant**) உலர்ந்த வடிவில் காகிதம் மாதிரி சுடச்சுட வெளிவருகிறது!

பிறகு, ஓரிடத்தில் இதுவே பால் பவுடராக மாறுகிறது. பால் பவுடர் டப்பாக்களில் அடைக்கப்படுவது, அந்த டப்பாக்கள் 'கண்

விரைந்து செல்வது-இவற்றை எல்லாம் பார்க்கும்போது, மந்திரமா தந்திரமா என்று பிரமிப்பு ஏற்படுகிறது.

பாலைக் கடைதல், பாலிலிருந்து வெண்ணெய் எடுத்தல், வெண்ணெய்யை அழகிய தாளில் 'பேக் 'செய்தல் எல்லாம் இயந்திரமே!

மனிதனின் கைபடாமல், எல்லா வேலைகளையும் மிகத் துல்லியமாக, சுத்தமாக, ஒழுங்காகச் செய்து முடிக்கின்றன இங்குப் பொருத்தப்பட்டுள்ள நவீன ராட்சத இயந்திரங்கள்!


ஓரிடத்தில் நெய்க்குளம் இருப்பதையும் பார்த்தோம். மணமணக்கும் அந்த இடத்தைவிட்டு நகரவே எங்களுக்கு மனமில்லை!


# புதுக்கோட்டை மாவட்டத்தில் வனவளம்

தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் 1974ஆம் ஆண்டு முதல் திருச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. இதில் திருச்சி, புதுக்கோட்டை, காரைக்குடி, விருத்தாசலம் போன்ற நான்கு மண்டலங்கள் உள்ளன.


புதுக்கோட்டை மண்டலத்தில் 19,509.67 எக்டேர் பரப்பில் காடுகள் உள்ளன. இதனை புதுக்கோட்டை, கந்தர்வகோட்டை, ஆலங்குடி, அரிமளம் ஆகிய நான்கு வனச் சரகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.











புதுக்கோட்டை மண்டலத்திற்கு ஒரு மண்டல மேலாளரும், வனச்சரகங்களுக்கு வனச்சரக அலுவலர்களும், அவருக்கு உதவியாக வனக்காப்பாளர்கள், வனக்காவலாளிகள் ஆகியோர் பணி புரிகின்றனர். இவர்களின் முக்கியப் பணி,இருப்பில் உள்ள காடுகளைப் பராமரித்தலும் மேலும் புதிய தோட்டங்களை உற்பத்தி செய்தலும் ஆகும்.

இம்மண்டலத்தில் 1982-83-ம் ஆண்டு வரை கீழ்க்கண்டபடி தோட்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

கற்பூர மரத் தோட்டங்கள் 14,985.89 எக்டேர், முந்திரித் தோட்டங்கள் 2,768.81 எக்டேர், சவுக்குத் தோட்டங்கள் 884.92 எக்டேர், தென்னை கொடைவேல்போன்றபலவகைத் தோட்டங்கள் 200·53 எக்டேர்.

கற்பூர மரங்கள் பள்ளிப்பாளையத்தில் உள்ள சேஷசாயி காகித ஆலைக்கு அனுப்பப்படுகிறது. மிஞ்சும் சிறிய மிளார்கள், பட்டைகள் சவுக்கு மரங்கள் விறகுக்காக ஏலம் விடப்படுகின்றன. முந்திரித் தோப்புகளில் இருந்து முந்திரிக் கொட்டைகள் வனத் தோட்டக் கழகத்தால் சேகரம் செய்யப்பட்டு விற்கப்படுகிறது. தென்னையில் இருந்தும் தேங்காய்கள் பறித்து விற்பனை செய்யப்படுகின்றன.

1982-83ஆம் நிதியாண்டில் பள்ளிப்பாளையம் காகித ஆலைக்கு 2165 எக்டேர் கற்பூரக் காடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதில் இருந்து சுமார் 67,000 டன் கூழ் மரங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. அதாவது காகித ஆலைக்குச்சுமார் 6 மாதத்திற்கு தேவையான கற்பூரக் கூழ் மரங்கள் மட்டும் புதுக்கோட்டை மண்டலத்தில் இருந்து அனுப்பப்படுகிறது.

1982ஆம் ஆண்டு மட்டும் புதுக்கோட்டை மண்டலத்தில் நல்ல முந்திரிக் காய்ப்பு ஏற்பட்டு சுமார் 2,500 எக்டேரில் இருந்து 343.453 டன் முந்திரிக் கொட்டைகள்சேகரம்செய்யப்பட்டன. இதுவரை இதுபோன்ற அளவு உற்பத்தியாகவில்லை. இச்சேகரம் ஒரு சிறந்த சாதனை.

மேலும் ஆண்டுதோறும் இம்மண்டலத்தில் தைலமரக்காடுகள் முந்திரிக் காடுகள் உற்பத்தி செய்வதோடு அல்லாமல் பொதுமக்களுக்கும், கற்பூரம், முந்திரி, சவுக்கு வேம்பு நாற்றுகள் விற்பனை செய்யப்படுகிறது. 1981-82ஆம் ஆண்டில் இம்மண்டலத்திற்கு 70.54 இலட்சம் ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது. ஆனால் சிலவோ 25.46 இலட்சம் ஆகும்.

இப்புதுக்கோட்டை மண்டலத்திலிருந்து அரசுக்கு நல்ல வருவாய் கிட்டுவதோடல்லாமல், ஆண்டுதோறும் பொதுமக்களுக்கு தோட்டம் எழுப்புதல் முந்திரி சேகரம் போன்றவற்றில் வேலை வாய்ப்பும் கிட்டுகிறது.

# மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகம்

இரா. வீராசாமி, செய்தி, மக்கள் தொடர்பு அலுவலர், இராமநாதபுரம் மாவட்டம்.

தமிழ்நாடு அரசு நியமித்த பட்டாபிராமன் குழுவின் கருத்துப்படி மக்களுக்குச் சிறந்த முறையில் சேவை செய்யப் போக்குவரத்துக் கழகங்கள் மாவட்டந்தோறும் தனித்தனியே இயங்க வேண்டும் என்ற அடிப் படையில் பாண்டியன் போக்கு வரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

புதுக்கோட்டை, கிழக்கு இராமநாதபுரம் (அருப்புக் கோட்டை வரை) ஆகிய மாவட் டங்களை ஒருங்கிணைத்துப்புதிய போக்குவரத்துக் கழகம் ஒன்று துவக்க அரசு ஆணையிட்டுள்ளது.

போக்குவரத்துக் கழகத்தைப் பிரித்து அம்மாவட்டத்தில் வர லாற்றுச் சிறப்புடையவர்களின் பெயரில் அப்போக்குவரத்துக் கழ கம் இயங்கி வருவது வழக்கம். இராமநாதபுரம் மாவட்டத்தில்

## மருது சகோதரர்கள்



வரலாற்றுச் சிறப்பு மிக்கவர்கள் மருது சகோதரர்கள். இவர்கள், நாட்டின் விடுதலைக்காக வெள் ளையர்களை எதிர்த்துக் கடும் போர் புரிந்தவர்கள். மருதுபாண் டியர்கள் 1780 முதல் 1801வரை 21 ஆண்டுக் காலம் சிவகங்கைச் சீமையை ஆண்டனர். இக்கால மும் சிவகங்கைச் சீமையின் பொற் காலமாய்த் திகழ்ந்தது.

வீரமிக்க மருது சகோதரர்கள் பெயரில் புதிய போக்குவரத்துக் கழகம் இயங்க வேண்டுமெனத் தமிழக அரசு தீர்மானித்தது. மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம் எனப் பெயரிட்டு 1.4.1983 முதல் இப்போக்கு வரத்துக்கழகம் தனித்து இயங்கி வருகிறது.

மருதுபாண்டியர் போக்குவரத் துக் கழகத்திற்குத் தலைமை யிடம் காரைக்குடியில் இயங்கி வருகிறது. திருச்சி, புதுக் கோட்டை, பட்டுக்கோட்டை, அறந்தாங்கி, காரைக்குடி, தேவ கோட்டை, சிவகங்கை, இராம நாதபுரம், பரமக்குடி, இராமேஸ் வரம், மதுரை, அருப்புக் கோட்டை, திருப்பத்தூர் ஆகிய 13 இடங்களில் மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகத்திற்குப் பணிமனைகள் உள்ளன.

கடந்த இரண்டு ஆண்டுகளாக எடுத்த பூர்வாங்க நடவடிக்கை களின் மூலம் இப்போக்குவரத்துக் கழகம் எல்லா நிலைகளிலும் தனது தேவைகளைத் தானே பூர்த்தி செய்து கொள்ளும்.

தேவகோட்டையில் ரூ. 10 இலட்சம் செலவில் டயர்களைப் புதுப்பிக்கும் தொழிற்சாலை ஒன்று துவங்கப்பட்டுள்ளது. இத் தொழிற்சாலையில் மாதம் ஒன் றுக்கு 2,000 டயர்கள் வரை புதுப்பிக்கப்படுகின்றன.

காரைக்குடியில் ரூ. 12 இலட் சம் செலவில் பேருந்துகளைப் 'புதுப்பிக்கும் பிரிவு' தொழிற் சாலை துவங்கப்பட்டு, கடந்த ஓராண்டுக் காலமாகஇத்தொழிற் சாலை இயங்கி வருகிறது.





மாதம் 5 பேருந்துகட்குக் கூண்டு கட்டும் திறனுடைய கட்டுமானத் தொழிற்சாலை இக் கழகத்திற்காகத் திருச்சியில் கடந்த ஓராண்டுக் காலமாக இயங்கி வருகிறது.

மருது பாண்டியர் போக்கு வரத்துக் கழகத்தில் 3,000 தொழிலாளர்கள் பணிபுரிகிறார் கள். இப்போக்குவரத்துக் கழ கத்தில் 350 பேருந்துகள் உள் ளன. நாளொன்றுக்குச் சுமார் 1,15,000 கி.மீ.தூரம் பேருந்து கள் செல்லுகின்றன. 2,61,000 பயணிகள் பேருந்துகளில் பயணம் செய்து பயனடைகின்றனர்.

மருது பாண்டியர் போக்கு வரத்துக் கழகம் சிறந்த முறை யில் சேவை செய்து, பயணிகள் வசதியாகவும், விரைவாகவும் பயணம் செய்யத் தக்க வகையில் செயல்படுவதால் இப்போக்கு வரத்துக் கழகம் வளர்ச்சி பெற்றுச் சிறந்த போக்குவரத் துக் கழகமாக விளங்குவது உறுதி.

(16-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாரதியாரும் சென்னை வந்தார். டிராம்வே தொழிலாளர் சங்கத்தில் திரு.வி.க. பாரதியாரைக் கண்டார். பாரதியார் 'சக்திப்' பாடலை ஆங்குப்பாடி, உணர்ச்சியூட்டினார்.

22.7.1920ல் தேசபக்தனை விட்டு விலகும் நோக்கத்தைத் திரு.வி.க. தலையங்கத்தில் எழுதி, அம்முடிவை மேற்கொண்டார்.

'தேச பக்தன்' இதழ் பொறுப்பை விட்டு திரு.வி.க. விலகியது தென்னாடெங்கும் கலக்கத்தை ஏற்படுத்தியது. விரைவில் நண்பர்கள், தொழிலாளர்கள் ஒத்துழைப்புடன் 'நவசக்தி' ஏடு தொடங்கப்பட்டு 22.10.1920 முதல் செயல்படத் தொடங்கியது.

ஏன் ''நவசக்தி'' என்ற பெயர் சூட்டப் பட்டது?


'நவசக்தி' என்பதற்குப் புதிய சக்தி என்று பொருள். எங்ஙனம் புதிய சக்தி பிறந்தது? எங்கிருந்து பிறந்தது? புதிய சக்தி பிறந்திருந்ததா?

முதலாவது உலகப் போருக்கு முன்னர் கொடுங்கோன்மையும் செல்வச் செருக்கும் நாடுகளை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தன. ஜனநாயக ஒலி, தொழிலாளர் ஆரவாரம் கிடையா. ஆனால் இப்போது எங்கணும் ஜனநாயக எழுச்சியும் தொழிலாளர் கிளர்ச்சியும், பெண்களின் உரிமை முழக்கமும் கொழுந்து விட்டெரியத் தொடங்கின. ஓய்வு பெற்றுள்ள உலகப்பெரும்போர்,இவைகளைத் தோற்றுவித்தன.

''ஜனநாயகத்தை அடக்கிக்கொண்டிருந்த அசுர சக்தியும், தொழிலாளர்களை நசுக்கிக் கொண்டிருந்த பூத சக்தியும் பெண் மக்களை ஒடுக்கிக் கொண்டிருந்த மிருக சக்தியும் இனித் தலை காட்டா. அவைகள் தலை சாய்ந்து கிடக்கின்றன. நீண்ட காலமாக உலகத்தை வதைத்து வந்த அசுர, பூத, மிருக சுபாவங்களைச் சிதைத்தழித் தொழிக்கவே ''நவசக்தி'' உலகத்தில் தோன்றியிருக்கிறது''.

நவசக்தி என்பதற்குச் சாத்திரம் கண்டவர்கள் ஒன்பது சக்தி என்று அறைவர். ''நவசக்தி''யும் ஒன்பது வழிகளைக் கையாண்டு பணி புரிபவள். அவ்வழிகள் எவை என்று திரு. வி.க. கூறுகிறார் —

1. மக்கள் சுதந்திரத்துக்கு அடிப்படையாக உள்ளது ஜனநாயக முறையாதலால், அதை நாடி உழைத்தல்.
2. ஜனநாயக முறைக்கு அடிகோல வேண்டுவது தொழிலாளர் இயக்கமாதலால், அவ்வியக்கத்தை வளர்க்க முயலல்.
3. தொழிலாளர் இயக்கத்தை வலுப்படுத்தவும், அவர்கள் குறைகளை நிவர்த்திக்கவும், அவர்கள்வழி ஆட்சி முறையைத் திருப்பவும், அவர்கட்கெனத் தனியாக உழைக்கவும் தொழிற் கட்சியை வகுத்தல்,
4. இந்தியாவில் விவசாயம் கைத்தொழில் முதலியவற்றை ஓம்பலும், விவசாயிகளின் கஷ்டங்களைப் போக்க முயலலும், தொழிற்சாலைகளைப் பெருக்குதலும்.
5. பெண்மக்கள் நலத்துக்குப் பாடுபடுதல்.
6. தமிழ் மொழியையும், தமிழ்நாட்டுப் பழைய வழக்க ஒழுக்கங்கள் முதலியவற்றையும் செப்பஞ்செய்தல்.
7. தமிழ் நாட்டில் தோன்றியுள்ள சாதிப் பகை, வகுப்புத் துவேஷம் முதலியவற்றை ஒழித்துச் சகோதர நேயத்தை வளர்த்தல்.
8. தேசத்துக்குத் தீங்கிழைக்குங் கட்சி



தமிழ்ப்பெரியார் திரு. வி. கலியாணசுந்தரனர் தலைமையில் (1945—46)

களைக் கண்டித்து, அக்கட்சித் தலைவர்களை நேசித்துத் தேச வளர்ச்சியை நாடும் கட்சியில் அவர்களைத் திருப்ப முயலல்.

9. இந்தியாவில் பிறந்த அனைவரையும் இந்தியராகக் கருதி, அவரை ஓரினமாக்கி, அவர் நலத்துக்காகத் தியாகஞ் செய்தல்.

இக்குறிக்கோள்களை முன்நிறுத்தி அரசியல், சமூக சீர்திருத்தம், பெண்டிர் நலன், மொழிச்சிறப்பு, கலைஆக்கம் முதலியன பற்றிய செந்தமிழ்த் தேன்சிந்தும் கட்டுரைகளை மலர்விப்பார் தமிழ்த் தென்றல்; சமதர்ம சன்மார்க்கக் கட்டுரைகள், ஒன்றேகுலம் என்ற தத்துவத்தையும் பொதுமை நிலையையும் வலியுறுத்துவதாய் அமையும். இலங்கை, பர்மா, சையாம், மலேசியா, மொரிஷியஸ் நெட்டால், இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மெனி முதலிய நாடுகளில் வாழ்ந்த தமிழ் மக்களும் நவசக்தியை வரவழைத்துப் படித்தனர். நவசக்தியின் மணம் கடல் கடந்த நாடுகளில் பரவியதுடன் திரு.வி.க.வின் தமிழ் நடையும் தமிழ்த் தொண்டும் தமிழர்களை விழிப்படையச் செய்தது.

1925, நவம்பர் 21, 22 ஆகிய நாட்களில் காஞ்சி நகரில் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் மாநாடு கூடியது. வரலாற்றுச் சிறப்பு மிக்க மாநாடாகக் கருதப்பட்ட இம்மாநாட்டுக்கு திரு.சி.வி.நாயுடு, திரு.வி.க.வைத் தலைமைப் பதவிக்கு முன்மொழிய, திரு. சி.வரதாச்சாரியார் வழிமொழிந்தார். தமிழ்மொழியை வளர்ப்பதால்தான் தமிழர்கள் ஒற்றுமையை எய்திட இயலுமென்றும், இத்தகைய ஒற்றுமை மூலம்தான் உரிமையை அடைந்திட முடியுமென்றும், இத்தொண்டை திரு.வி.க. தான் செய்து வருகிறார் என்றும் திரு. ஸ்ரீநிவாச ஐயங்காரும், டாக்டர். வரதராஜு நாயுடுவும் திரு.வி.க.வின் தலைமையைப் பாராட்டிப் பேசினர்.

திரு.வி.க. தலைமையேற்ற காஞ்சி மாநாட்டில் இரண்டு தீர்மானங்கள் ஆலோசனைக் குழுவில் வாதிடப்பட்டன. கதராடை எப்போதும் கட்டாயமாய் உடுத்தவேண்டுமென்னும் பாட்னாவில் ஒப்பிய தீர்மானமும், சட்டசபைத் தேர்தல்களையும் நடத்த வேண்டும், இனிதனிப்பட்ட சுயராஜ்யக்கட்சி தேவையில்லை என்ற தீர்மானமும் ஆலோசிக்கப்பட்டன; இரண்டாவது திரும்பப் பெறப்பட்டு, முதல் தீர்மானம் நிறைவேறியது.

ராஜிய சபைகளிலும் பொது அமைப்புகளிலும் பிராமணர், பிராமணர் அல்லாதார், தீண்டாதார் எனக் கருதப்படுவோர் என்ற இம்மூன்று பிரிவினருக்கும் தனித்தனியாக மக்கள் தொகை விழுக்காடு அடிப்படையில் தங்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள உரிமை ஏற்படுத்தவேண்டும் என்பதும், சட்டசபைத் தேர்தல்களைக் காங்கிரஸ் நடத்தவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டமையால் நமது மாகாணத்தில் அத்தேர்தல்களை நடத்தும்பொருட்டு ஒரு தேர்வுக் குழுவை நியமித்து நடத்திவைப்பது அவசியமாகும் என்பதும், வேறு இரண்டு தீர்மானங்கள். இவற்றில் முதல் தீர்மானம் ஆலோசனைக் குழுவில் நிராகரிக்கப்பட்டது. இத்தீர்மானங்களை அனுமதிக்கமுடியாதெனத் தலைவர் திரு.வி.க. மறுத்துவிட்டார். இதனால், பெரியார் ஈ.வே.ரா., எஸ்.இராமநாதன், திரு. சுரேந்திரநாத் ஆரியா, திரு. சக்கரைச் செட்டியார் ஆகியோர் அவையிலிருந்து வெளியேறினர்.

பின்னர், 1925ம் ஆண்டு இறுதியில் கான்பூரில் கவியரசி சரோஜினி தலைமையில் நிகழ்ந்த மாநாட்டில், சட்டசபைத் தேர்தலில் காங்கிரசே தலையிட முடிவுமேற்கொள்ளப்பட்டது. கான்பூர் மாநாட்டு முடிவுப்படி காங்கிரஸ் சார்பாகச் சட்டசபைத் தேர்தல் பிரச்சாரத்தில் திரு.ஸ்ரீநிவாச ஐயங்காருடன் சேர்ந்து முழுமூச்சாக ஈடுபட்டார். காங்கிரஸ் வெற்றிக்குப் பின்னர் காங்கிரஸ் தலைவர்கள் மேற்கொண்ட முறை இவருக்குப் பெரும் அதிர்ச்சியை அளித்தது. தேர்தலுக்குப் பின்னர் காங்கிரஸ் செயற்குழுவினின்றும் திரு.வி.க. விலகினார். பின்னர் சுயேட்சைக் கட்சிக்கு ஆதரவு நல்கி அதனை மந்திரி சபை அமைக்கச் செய்த நிகழ்ச்சியால் பெரிதும் காங்கிரஸ் நிர்வாகம் இகழ்வுற்ற நிலையில் திரு.வி.க. காங்கிரஸ் கட்சியில் சந்தாவும் இல்லாமல் தொடர்ந்து காங்கிரஸ் தொண்டராக இருந்து வந்தார்.

''எனது வாழ்க்கையைப் பெரிதும் கவர்ந்தது தொழிலாளர் இயக்கம். அவ்வியக்கம் ஊண், உறக்கத்தைக் குலைத்தது. என்னை மெலிவித்தது. அஃது என்னைத் தன்னுள் யோகியாக்கியது என்று சுருங்கச் சொல்கிறேன்'' என்கிறார் திரு.வி.க. தொழிலாளர் நலனில் அவர் கொண்டிருந்த பற்றும் அவர்களின் முன்னேற்றத்திற்கு ஓயாது உழைத்திட்டமையால் திரு.வி.க.வின் உடல் நலிவுற்ற தன்மையையும் நாம் உணர முடிகின்றது.

தொழிலாளர்களுக்கென சங்கம் அமைத்திடல் வேண்டுமென்ற எண்ணம் செயலில் முடிந்தது. முதன்முதலில் தொழிலாளர் கூட்டங்கள் கூட்டப்பட்ட போது திரு.வாடியா ஆங்கிலத்தில் பேசியதை, திரு.வி.க. தமிழில் மொழி பெயர்த்துத் தொழிலாளர்களிடை விளக்கம் அளித்தார். தொழிலாளர்களிடை வீர உணர்ச்சி எழுந்தது. 1918ம் ஆண்டு ஏப்ரல் 7-ம் நாள் சென்னைத் தொழிலாளர் சங்கம் உருவாகி, ஆசிய வரலாற்றில் புதிய எழுச்சியைத் தோற்றுவித்தது. திரு.வி.க.வால் உருவாக்கப்பட்ட தொழிலாளர் கிளர்ச்சி காட்டுத் தீபோல் பரவி, பம்பாய், கல்கத்தா, கான்பூர், நாகபுரி முதலிய இடங்களிலும் தொழிற் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன.

சென்னைத் தொழிலாளர் சங்கத்தின் வெள்ளி விழா, 14.4.1943 அன்று அருண்டேல் தலைமையில் பீப்பில்ஸ் பூங்காவில் நடைபெற்றது. விழா முடிவில் திரு.வி.க. ஆற்றிய உரையின் சில பகுதிகளை நோக்கினால், தொழிற்சங்க இயக்கத்திற்கு திரு.வி.க. ஆற்றிய பணியும் அவர் தொழிலாளர்களிடம் கொண்டிருந்த பற்றும் பாசமும் தெளிவாகும்.

''முதன் முதலில் தோன்றிய சங்கம் நம்முடையதே. அது தோன்றியிராவிட்டால் இந்தியாவில் தொழில் இயக்கமே ஆக்கம் பெற்றிராது. தொழிற்சங்கச் சட்டம் இல்லாத வேளையில் சங்கச் சார்புடைய பதின்மர் மீது முதலாளிகளால் வழக்குத் தொடரப்பட்டது. அவ்வழக்கே தொழிற்சங்கச் சட்டத்

# இந்தியாவில்...!

வங்கி வழிகாட்டுகிறது

நாட்டின் மிகப் பெரிய வங்கிகளில் ஒன்றான கனரா வங்கி மாணவர்களுக்குத் தொண்டு செய்யும் புத்தக வங்கியாகவும் செயல்படுகின்றது. சனிக்கிழமை மாலை வேளைகளில் இதர வங்கிகள் மூடப்பட்டிருக்கும்போது, கனரா வங்கியின் பெங்களூரிலுள்ள தலைமையக அலுவலகத்தில் நீண்ட வரிசைகளில் மாணவர்கள் புத்தகங்களைப் பெறக் காத்திருக்கின்றனர்.

இந்தப் புத்தக வங்கியில் உறுப்பினராகச் சேர மாணவர்கள் ஒரு ரூபாய் சந்தா செலுத்த வேண்டும். விலை மதிப்புள்ள புத்தகங்களை வாங்க இயலாத ஏழை-எளிய மாணவர்களுக்கு அரிதான மற்றும் பாடப் புத்தகங்கள் படிப்பதற்கு வழங்கப்படுகின்றன. புத்தக வங்கியில் பணிபுரியும் வங்கி ஊழியர்கள் இதற்கெனக் கூடுதல் ஊதியம் எதையும் பெறுவதில்லை. ஒரு புத்தகத்தினை 15 நாட்கள் வைத்திருந்து படிக்கலாம். இன்றுவரை புத்தகங்கள் திருப்பியளிக்கப்படவில்லை என்ற புகாரே வந்தது கிடையாது.

## இதய மூலிகை

'ரென்வோல்பியா சொர்பெண் என்ற பெயர் கேரளாவில் உள்ள சாதாரண மக்களுக்குத் தெரியாது. ஆனால் 'அமல்பொரி செடி' என்றால் புரிந்து கொள்வார்கள். இந்தச் செடியிலிருந்து தயாரிக்கப்படும் மருந்துகள், பரம்பரையாக உயர் இரத்த அழுத்தம் மற்றும் இதய நோய்களுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த மருந்தினை நவீன மருத்துவமும் ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்தச் செடியின் வேரில் பல விதமான காரப் பொருள்கள் உள்ளன. இவை அமைதிப்படுத்தும் மருந்துகளாகவும், உறங்க வைக்கும் மருந்துகளாகவும் பயன்படுகின்றன.

## தீப்பிடிக்காத பருத்தித் துணிகள்

பம்பாய் பருத்தித் தொழில் நுணுக்க ஆய்வுக்கூடம் தீப்பிடிக்காத பருத்தித் துணியை உருவாக்கியுள்ளது.

டை அமோனியம், ஹைடிரஜன் அதோபாஸ்பேட் யூரியா மற்றும் ஹைடிரோசின் என்ற இரசாயனப் பிசினைப் பயன்படுத்தி பருத்தித் துணிகளுக்குத் தீப்பிடிக்காத தன்மை வழங்கப்படுகிறது. இத்தகைய துணியின் இரசாயனப் பொருட்கள் பெரிதும் படிவதில்லை. சுசங்குவதும் இல்லை.

பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் தற்செயலாக ஏற்படும் தீவிபத்துக்களில் பலியாவதாக மேலோட்டமான ஆய்வு தெரிவிக்கிறது. நெருப்பும் உலைகளின் அருகே வேலை செய்வோரும், தீப்பற்றும் கூடிய பொருள்களைக் கையாளுவோரும் தீவிபத்தில் சிக்கக்கூடிய அபாயம் உள்ளது. அவர்களுக்குப் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட தீப்பிடிக்காத துணி ஒரு வரப்பிரசாதமாகும்.

## புதிய கருவி

மைக்ரோ . பிராசசர் மூலம் இயங்கும் புதிய சாலைப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றை, இந்தியத் தொலைபேசித் தொழிற்சாலை (ஐடிஐ) முதன் முறையாக உருவாக்கியுள்ளது.

மிகோர்ட்ஸ்-80 என்றழைக்கப்படும் இக்கருவி, பெருநகரங்களில் அதிகரித்துவரும் போக்குவரத்துப் பிரச்சினைகளைச் சமாளிக்கப் பெரிதும் உதவும்.

சந்திப்புகளிடையே கேபிள் தொடர்பு இன்றி, சமிக்ஞைகளை வழங்குவது இக்கருவியின் சிறப்பம்சம். இதன்மூலம் கேபிள்கள் போட ஏற்படும் செலவு குறைவதோடு, தரைக்கடியில் கேபிள்கள் நெருக்கடியும் அதிகரிக்கப்படுகிறது.

இந்தியாவின் முதல் கேபிள் இணைப்பு தேவைப்படாத ஐடிஐ ...வாக்கிய இக்கருவி, தற்போது ... அண்ணாசாலையில் ...பட்டு வெற்றிகரமாக ...றது.

## குறட்டை கூடாது !

உரத்த குரலில் விடாமல் குறட்டை விடுவதால் மற்றவர்களுக்கு மட்டுமல்ல, குறட்டை விடுபவருக்கே அது கேடு விளைவிக்கக் கூடுமென்று மருத்துவ ஆராய்ச்சிகள் புலப்படுத்துகின்றன.

மூச்சுவிடும் பாதைகள் சுருங்குவதால் தான் குறட்டை ஒலி ஏற்படுகிறது. சிலரைப் பொறுத்தவரை இவ்வாறு சுருங்குவது-இயற்கையாக மூச்சு விடுவதால் அரை நிமிடம் முதல் மூன்று நிமிடம் வரைத் தடை ஏற்படலாம். ஒரே இரவில் இவ்வாறு பல தடவை நிகழ்ந்தால் இருதயத்தையே பாதிக்கும்.

குறட்டை விடுகையில் மூச்சுத் தடை ஏற்படுவதால் இரத்தத்தில் ஆக்ஸிஜன் அளவு குறைகிறது. எனவே, இருதயம் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கிறது, இதனால் இரத்த அழுத்தம் பெரிதும் கூடுகிறது. சுவாசம் விடும் அமைப்பு முழுதுமே கடுமையாகப் பாதிக்கப்படுகிறது. இதனால் இருதயத் துடிப்பு சீராக இருக்காது. சில சமயங்களில் திடீர் மரணம்கூட நேரிடலாம்.

இவ்வாறு நேராமல் தடுக்கும் வழி என்ன? குறட்டை விடுபவர் உடல் எடையைக் குறைப்பதுதான், உடல் பருமன், மூச்சுப் பாதைகளில் அழுத்தம் ஏற்படுத்தி அவை சுருங்குமாறு செய்யக்கூடும்.

## இரத்த ஓட்டம்

ஒரு மனிதனின் வாழ்நாளில் அவன் இருதயம் எவ்வித சீரமைப்பும் இல்லாமலேயே 250 கோடி தடவை துடிக்கிறது. ஒரு நிமிட நேரத்தில் ரத்தம் இருதயத்தில் இருந்து புறப்பட்டு மீண்டும் இருதயத்திற்கு வந்து சேர்ந்து விடுகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் பிற்பட்ட வகுப்பு மாணவ, மாணவிகள் தங்கிப் படிக்க 25 விடுதிகள் செயல்பட்டுவருகின்றன. மேற்கூறிய விடுதிகளில் நான்கு விடுதிகள் நடப்பு நிதியாண்டில் புதிதாகத் திறக்கப்பட்டன. அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவிகளின் மொத்த எண்ணிக்கை 1,389 ஆகும். 1982-83க்கு விடுதிகளின் எல்லாச் செலவுகளுக்கும் ரூ. 13,32,600 ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதுவரை ரூ. 11,35,860 செலவிடப்பட்டுள்ளது.

இந்த விடுதுகளில் இரண்டு அரசுக்குச் சொந்தமான கட்டடங்களிலும், மற்றவை வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. தற்பொழுது விராலிமலை பிற்பட்டோர் மாணவர் விடுதிக்குச் சொந்தமாகக் கட்டடம் ஒன்று ரூ. 4.35 இலட்சம் செலவில் தாட்கோ மூலம் கட்டப்பட்டு வருகிறது.

மேல்நிலைப்பள்ளி, கல்லூரிப் படிப்புக்கானது இத்திட்டத்தின் கீழ் 27 கல்வி நிலையங்கள் இம்மாவட்டத்தில் உதவி பெறுகின்றன. இத்திட்டத்திற்கு இந்த நிதியாண்டிற்கு ரூ. 5,00,000 ஒதுக்கப்பட்டது. இதுவரை ரூ. 4,97,917 செலவிடப்பட்டுள்ளது. இத் திட்டத்தினால் 2,500 மாணவர்கள் பயன் பெற்றனர்.

உயர்நிலைப் பள்ளிகளுக்குப்படிப்புக்காக வழங்கப்படும் கல்வி உதவித்தொகை ரொக்கத்திற்குப் பதிலாக உயர்நிலைப் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு, இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்குதல் மற்றும் பள்ளி சிறப்புக் கட்டணம் ஈடுசெய்தல், முதலிய கல்வி சலுகைகள் அளிக்கப்படுகின்றன. இத்திட்டத்திற்கென ரூ. 1,33,000 ஒதுக்கப்பட்டதில் ...12 இதுவரை செலவு செய்யப்பட்...

சீருடை வழங்குதல், விடுதிகளில் தங்கி பயிலும் உயர்நிலைப் பளளி மாணவ மாணவியருக்கு ஆண்டு இரண்டு தடவைகள் (தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகைக் காலங்களில்) இலவசமாகச் சீருடைகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்கென நடப்பு நிதியாண்டில் ரூ. 66,500 ஒதுக்கீடு செய்யப்பட்டதில் இதுவரை ரூ. 66,236 செலவு செய்யப்பட்டு, சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

மாணவர்களுக்குப் பரிசு வழங்குதல் பள்ளியிறுதித் தேர்வில் (எஸ்.எஸ்.எல்.சி) முதல் மற்றும் இரண்டாவது அதிக மதிப்பெண்கள் பெற்ற பிற்பட்ட வகுப்பு இரண்டு மாணவர்களுக்கு முறையே ரூ. 100- மற்றும் ரூ. 50- மதிப்புள்ள பரிசுகள் புத்தகவடிவில் வழங்கப்படுகின்றன. இதேபோல் எட்டாவது வகுப்பில் தேறிய மாணவர்களுக்கு ரூ. 50- மற்றும் ரூ. 10 மதிப்புள்ள பரிசுகளும் வழங்கப்படுகின்றன.

சவர, சலவைத் தொழிற்கருவிகள்; பிற்பட்ட சவர, சலவைத் தொழிலாளர்களுக்கு ஆண்டுதோறும், இலவச சவரப்பெட்டி மற்றும் சலவைப் பெட்டிகள் வழங்கப்படுகின்றன. நடப்பு ஆண்டில் இதுவரை 215 சலவைப் பெட்டிகளும் 78 சவரப் பெட்டிகளும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

கல் உடைக்கும் கருவிகள்; நடப்பு நிதியாண்டிற்கு கல் உடைக்கும் தொழிலாளர்கள்



# பிற்பட்டோர் நலத் திட்டங்கள்

50 பேர்களுக்கு இலவசக் கல் உடைக்கும் கருவிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஒரு நபருக்கு வழங்கப்படும் கல் உடைக்கும் கருவிகளின் மதிப்பு ரூ,150 ஆகும்.

## புஞ்சை நில வளர்ச்சித் திட்டம்

1971-ஆம் ஆண்டிலிருந்து 1982-ஆம் ஆண்டு முடிய ஒருங்கிணைந்த புஞ்சை நில வேளாண்மை வளர்ச்சித் திட்டம், புதுக்கோட்டை மாவட்டத்தில் செயலாற்றி வந்தது. மத்திய மாநில அரசின் நிதி உதவியால் மொத்தம் 60 கிராமங்களுக்கு மேல் விவசாய உற்பத்திக்கு உயர்ரக பொறுக்கு விதைகளும், விவசாயக் கருவிகளும், உரம், மருந்துகளும் மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது.

ஓய்வு நேரங்களை நல்ல முறையில் பயன்படுத்திட நல்ல உயரினக் கறவை மாடுகளும், ஆடு வளர்க்கவும் மானியம் வழங்கப்பட்டது. மேலும், புதிய கிணறு வெட்டவும், பழைய கிணறுகளை ஆழப்படுத்தவும், ஆயில் என்ஜின் பம்பு செட் வாங்கவும், சிக்கனமாகத் தண்ணீரைப் பயன்படுத்த சிமெண்ட் வாய்க்கால்கள் அமைத்திடவும், மானியம் வழங்கப்பட்டது. புஞ்சை நில விவசாயிகள் மானாவாரியாக பயிரிடுவது ஒரு சூதாட்டம் போன்றதாகும். பஞ்சத்தைப் போக்கும் இப்புஞ்சை திட்டம் வந்து நலிவுற்ற ஏழை, சிறு, குறு விவசாயிகளின் பொருளாதார நிலை உயர்ந்திட இத்திட்டம் மிகுந்த உதவியாக இருந்தது. எதிர்பாராத விதமாக இத்திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மறுபடியும் இத்திட்டம் அமலாக்கப்படுமானால் புஞ்சை நில விவசாயிகள் அஞ்சாமல் பயிரிட்டு அமோக விளைச்சல் பெற்று அகமகிழ்வு அடைவார்கள் என்பதில் ஐயமில்லை.


தோற்றத்துக்கு மூலமாக நின்றது. தொழில் இயக்க நலனுக்கென்று நம் சங்கம் உற்ற தியாகத்துக்கு ஓர் அளவில்லை.

''முதலாளிகளின் பொருளும் உங்கள் உழைப்பும் சேர்ந்தே விளைவு உண்டாகிறது. இலாபம் மட்டும் ஒரு சாரார்க்குச் செல்வது அறமாகாது. உங்கட்கும் பங்கிருத்தல் வேண்டும்.... ஆகவே தோழர்களே! ஒன்றுபட எழுங்கள், எழுங்கள். புது உலகைக் காண எழுங்கள்! எழுங்கள்!''

அவரது எழுச்சிக் குரலாலும் சீரிய தொண்டாலும் தொழிலாளர் உலகில் புது எழுச்சியும் விழிப்புணர்வும் தோன்றியதெனில் மிகையாகாது. இத்தகைய எழுச்சியை நவசக்தி என்று நவில்வார் திரு.வி.க. தொழிலாளர் இயக்கம், இந்த நவசக்தியின் வெளிப்பாடே என்பது அவரின் கருத்து. தொழிலாளரின் வாழ்க்கை வளம் பெற்றுப் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டால் தான் எந்த ஒரு நாடும் செழுமைபெறும் என்று உளமார நம்பி உழைத்திட்டார் தமிழ்த்தென்றல். நவசக்தியின் பகுதிதானே தொழிலாளர் குலம். எனவே தான் தொழிலாளர்களுக்காகக் கரையில்லாக் காதலுடன் உழைத்தார் திரு.வி.க. ''தொழிலாளர் குலத்திற்குத் தெய்வமாக விளங்கினார் திரு.வி.க.'' என்று தொழிலாளர்களுக்கும் தமிழ்ப்பெரியாருக்குமுள்ள தொடர்பை உரைத்திட்டார் ராஜாஜி. தொழிலாளர்களின் வளனும் நலனும் காத்திட முதல் குரல் கொடுத்த மேதை, குலதெய்வம் திரு.வி.க. என்று முழங்குவோம்! அந்த உண்மையை நாடறியப் பறைசாற்றுவோம்! அவர் தொழிலாளர் நலன் காக்க உரைத்திட்ட மொழி வழி நடந்திட உறுதியெடுப்போம்!

# வறட்சி நிவாரணப் பணிகள்







1981 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து பருவமழைபொய்த்ததின் காரணமாக தமிழ்நாட்டில் உள்ள எல்லாப் பகுதிகளிலும் கடுமையான குடிநீர் பற்றாக்குறை இருந்து வருகிறது. குடிநீர் பிரச்சினையை தீர்ப்பதற்காக தமிழகத்திலுள்ள ஊராட்சிகள், பேரூராட்சிகள், மற்றும் நகராட்சிகளில் ஆழ்துளைக்கிணறுகள் அமைக்கவேண்டும் என்ற அரசின் ஆணையின்படி இதுவரை சுமார் 9215க்கு மேற்பட்ட ஆழ்துளைக் கிணறுகள் சுமார் ரூ. 22 கோடி செலவில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் அமைக்கப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட ஆழ்துளைக் கிணறுகளையும் சேர்த்து சுமார் 20 ஆயிரம் ஆழ்துளைக் கிணறுகளை சுமார் 50 கோடி ரூபாய் செலவில் வறட்சி நிவாரணப் பணியின் கீழ்நிறைவேற்ற முடிவெடுக்கப்பட்டுள்ளது. இப்பணியை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் போர்க்காலத் தீவிரத்தோடு நிறைவேற்றி வருகிறது. இதைத்தவிர பொதுப்பணித் துறையினரால் ஏரிகளின் உட்பக்கமும், ஆற்றுப்படுகையிலும், பெரிய கிணறுகள் ஏற்படுத்தப்பட்டு, அவைகளில் எங்கெங்கு நல்ல குடிதண்ணீர் இருக்கிறதோ, அவைகளிலிருந்து நீர் எடுப்பதற்காக டீசல் மோட்டார்கள் அமைத்து குடிநீர் வழங்கி மக்களின் குறை தீர்க்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிக்காக ரூ. 50 இலட்சம் செலவாகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. எங்கெங்கு நல்ல நீர் ஆதாரங்கள் காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் குடிதண்ணீர் வினியோகம் செய்யப்படாத இடங்களிலும் குடிநீர் வழங்க பகிர்மாணக் குழாய்கள் பதிக்கவும், நீர் ஆதாரங்களை மேம்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக சுமார் ரூ. 2 கோடி செலவாகும் என கணக்கிடப்பட்டுள்ளது.

மேலும், நல்லநீர் ஆதாரங்கள் உள்ள இடங்களில் தொடர்ந்து மின்சாரம் வழங்க தனி மின் இணைப்புகள் அமைக்கத்திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக இதுவரையில் ரூ. 1·60 கோடி செலவில் 48 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு அவைகளில் சுமார் 22 திட்டங்கள் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஏனைய திட்டங்கள் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்திலுள்ளன.






# பெருமை தரும் பணி

தமிழ்நாடுசுற்றுலா வளர்ச்சிக் கழகம் நாளுக்கு நாள் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் அதன் வளர்ச்சி, பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது.

அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் தேவையை நிறைவு செய்யும் வகையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் குளிர் சாதனம் பொருத்தப்பட்ட வெளிநாட்டுக் கார்களை வாங்கியுள்ளது.

குளிர்சாதனம் பொருத்தப்பட்ட இந்த ஐந்து கார்களை துவக்கி வைத்த விழா சென்னை அரசினர் தோட்டத்தில் 5.5.83 அன்று நடைபெற்றது.

சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான திரு .கே.பாலசுப்பிரமணியம் அவர்கள் இவ்விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றார். சுற்றுலாத் துறை வளர்ச்சி மக்களுக்கும் நாட்டுக்கும் பயன்படுவதாகக் குறிப்பிட்டார்

சுற்றுலா வளர்ச்சிக் கழக கார் ஓட்டுநர்களிடம் குளிர்சாதன வசதி பொருத்தப்பட்ட கார்களின் சாவிகளை வழங்கி முறைப்படி துவக்கி வைத்த மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு.இராம. வீரப்பன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

''சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பல்வேறு முன்னேற்றமான திட்டங்களைத் துவக்கி எல்லாருக்கும் பயன்படும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

கடந்த சித்திரைத் திங்கள் முதல் நாள் சென்னைக்கு அருகிலுள்ள திருவேற்காடு மாங்காடு ஆகிய திருத்தலங்களுக்குச்சென்று வரும் திட்டம் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் துவக்கப்பட்டது. வாரத்திற்கு மூன்று நாட்களுக்கு இந்தப் பயணத்திட்டம் தொடங்கப்பட்டது. இப்பயணத்திற்கு பதினைந்து நாட்களுக்கு முன்பே 'ரிசர்வ்' செய்து கொள்ளுமளவுக்கு மக்கள் பேராதரவு அளித்துள்ளனர். இதனால் இந்தத் திட்டத்தை நாள்தோறும் செயல்படுத்த வேண்டிய நிலைமை வளர்ந்துள்ளது.

''குளிர்சாதனம் பொருத்தப் பட்ட கார்களை வாங்கியுள்ள மாநில சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்தான்.

மாநில அரசின் ஆதரவில் இயங்கும் இந்தச் சுற்றுலாக் கழகத்திற்கு வளர்ச்சிக்கு மத்திய அரசு பெருமளவில் உதவி செய்ய வேண்டும்.

இங்கு வாங்கப்பட்டுள்ள குளிர் சாதனம் பொருத்தப்பட்ட கார்களுக்கு இறக்குமதி சுங்கத் தீர்வையிலிருந்து விலக்கு அளிக்க வேண்டினோம். அதற்கும் இசை வளிக்கப்படவில்லை. முழுக்கவும் விலக்கு அளிக்காவிட்டாலும் ஓரளவு தள்ளுபடி செய்து தாருங்கள் என்று கேட்டோம். அதற்கும் இசையவில்லை. ஆகவே, பெருந்தொகை கொடுத்து வாங்கியுள்ளோம்.

வெளிநாட்டுப் பயணிகளை ஊக்குவிக்கும் வகையில் அமைந்துள்ள இது போன்றத் திட்டங்களுக்கு மத்திய அரசு உதவ வேண்டும். நாம் மிகப் பெரிய வசதி என்று எண்ணிக் கொண்டிருப்பவைகள், மேலை நாடுகளில் அப்படை வசதிகளாக கருதப்படுகின்றன. எனவே ,இது போன்ற வசதிகளை வெளிநாட்டுப் பயணிகளுக்கு அளிப்பது அவசியமாகிறது.

இக்கார்களை ஓட்டும் ஓட்டுநர்களும் பயணம் செய்யும் பயணிகளைக் கவரும் வகையிலே பொறுப்புடன் நடந்து கொள்ளுதல் அவசியம். இதனால் நமது சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பெருமை வளரும் , ஒருநாள்கூட இந்தக் கார்கள் 'ஷெட்டில்' நிற்காமல் ஓடின என்ற நிலை வரவேண்டும்''

விழா முடிவில் சுற்றுலா வளர்ச்சிக் கழக நிருவாக இயக்குநர் திரு மாதவன் நம்பியார் நன்றி நவின்றார்.

குளிர்சாதனம் பொருத்தப் பட்ட ''டாட்சன்'' (Dutsun) டீசல் கார்கள் ஐந்து ஜப்பான் நாட்டிலிருந்து தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இறக்குமதி செய்துள்ளது. டோக்கியோ நகரத்திலுள்ள இக்கார்களில் தயாரிப்பாளர்களான ''நிப்பான் டிரேடிங்'' கம்பெனியாளர்களிடமிருந்து பெறப்பட்டவை ஆகும்.

ஒரு காரின் விலையாக போக்குவரத்து மற்றும் இன்சூரன்ஸ் உட்பட ரூ. 58,691- கார் விற்பனையாளர்களுக்கு அளித்திருக்கிறோம். கார் விலைக்கு சுமார் 260 சதவிகிதம் இறக்குமதி சுங்கத் தீர்வையாக ஒவ்வொருகாருக்கும் ரூ. 1,56,023 அளித்திருக்கிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம். இதனால் ஒவ்வொரு காரில் விலை ரூ.2,14,714 ஆகும்.

இக்கார்கள் சிறு சுற்றுலாக் குழுக்களுக்கும், சுற்றுலாப்பயணிகளுக்கும் தாங்கள் விரும்பிய முறையில் சுறறுலாத் தலங்களை கண்டுகளிக்க வாடகைக்கு அளிக்கப்படும்.

இறக்குமதி செய்யப்பட்ட இந்த 5 கார்களில் ஒன்று மதுரைக்கும், மற்றொன்று கோவைக்கும் அங்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்கென அனுப்பி வைக்கப்படும்.

மத்திய அரசின் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தவிர, மாநில சுற்றுலா வளர்ச்சிக் கழகங்களில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மட்டும் தான் நாட்டிலேயே முதன்முதலாக வெளிநாட்டிலிருந்து ஏ.சி. கார்களை இறக்குமதி செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தனது அரும்பணியால் நாளுக்கு நாள் வளர்ந்து வரும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் புதியதொரு பணியைத் தொடங்கி, சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை நிறைவு செய்வதில் முன்னோடியாகத் திகழ்கிறது.

—மாமூலன்

## கிராமப் பகுதிகளில் புதிய போக்குவரத்து வசதி

பயணிகளுக்குச் சேவை செய்வதை நோக்கமாகக் கொண்டு, திறமையான், ஒருங்கிணைந்த, சிக்கன முறையிலான போக்குவரத்துப் பணியை நல்குவது மாநிலத்தில் உள்ள ஒன்பது போக்குவரத்துக் கழகங்களின் பொறுப்பாகும். இப் போக்குவரத்துக் கழகங்கள் இந்த நிதியாண்டில் (1982–83) 1983, சனவரி இறுதிவரை, மொத்தம் சுமார் 30 கோடி ரூபாய் செலவில் 1,052 புதிய பேருந்துகளை வழித்தடங்களில் விட்டுள்ளன. இவற்றில் 730 பேருந்துகள் பழைய பேருந்துகளுக்குப் பதிலாக விடப்பட்டுள்ளன; ஏற்கனவே உள்ள வழித்தடப் பேருந்துகளுடன், கூடுதலாக 322 பேருந்துகள் புதிய வழித்தடங்களில் விடப் பட்டுள்ளன. சுமார் 4 இலட்சம் மக்கள் வாழும் 255 கிராமங்களில் இதுவரை பேருந்து வசதி இல்லாமலிருந்தது. இப் பேருந்துகள் புதிதாக மேற்படி கிராமங்களுக்கு விடப்பட்டன. கிராமப் பகுதிகளில் தொலைதூர இடங்களுக்கு 307 சிறிய பேருந்துகளையும் குறுஞ்சக்கர அடிப்பகுதி கொண்ட பேருந்துகளையும் (Short wheel base buses) இக் கழகங்கள் இயக்குகின்றன. இப்புதிய வழித்தடங்களில் பேருந்துகள் விடுவதனால் போக்குவரத்துக் கழகங்களுக்கு விரயம் ஏற்பட்டபோதிலும் கிராமப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற பொது நோக்கத்துடன் அவை இவற்றை நடத்தி வருகின்றன. கிராம மக்கள் காய்கறி, உணவு தானியங்கள், பால் போன்ற விற்பனை செய்யத்தக்க பொருட்களை எடுத்துச் செல்ல உதவும் பொருட்டு 12 ''அங்காடிப் பேருந்துகளை'' விட்டுள்ளன.

# குடிசைகள் கோபுரங்களாகின்றன



குடிசைகள் கோபுரங்களாகின்றன. ஆம். எங்கோ ஒரு மூலையில், குடிசையில் ஒண்டிக் கிடந்தவர்கள் இன்று உயர்ந்த மாடிகளில் [illegible]மான நிலைமையை நாம் வாழ்கின்ற உ[illegible] பார்க்கின்றோம்.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், ஏழை எளியவர்களுக்கு—அடித்தளத்திலுள்ள மக்களுக்கு வாழ்வு தரும் வகையிலே, வகை வகையான குடியிருப்புகளைக் கட்டித் தருகின்றது. அந்தப் பணிகளையெல்லாம் விளக்கிச் சொல்கிறார், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத் தலைவர் திருமதி சுலோசனா சம்பத் அவர்கள்.

**வினா:**

குடிசைப் பகுதிகளில் சமூகப் பொருளாதார ஆய்வு நடத்தும் திட்டம் ஏதேனும் உள்ளதா? எப்போது ஆரம்பிக்கப்பட உள்ளது? அதற்கான செலவு எவ்வளவு? பொருளாதார ஆய்வு நடத்துவதற்குக் கையாளப்படும் முறைகள் என்னென்ன?

**பதில்:**

1971ஆம் ஆண்டில் வாரியம் ஆரம்பித்த காலத்தில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் குடிசைப்பகுதிகளின் எண்ணிக்கை, குடிசை வாழ் மக்கள், மதம், வருமானம், தொழில், கல்வி, வீட்டுவசதிகள் போன்ற விவரங்கள் சேகரிக்கப்பட்டன. கடந்த 12 ஆண்டுகளில் இந்தப் பொருளாதார் ஆய்வு பொருளற்றதாகி விட்டது.

குடிசைவாழ் மக்களின் எண்ணிக்கை, வாழ்க்கைத்தரம், வருமானம் போன்றவை வெகுவாக உயர்ந்துள்ளன. இதனைக் கருத்திற்கொண்டு சமூகப் பொருளாதார ஆய்வு ஒன்று இவ்வாண்டு நடத்தத் தீர்மானிக்கப்பட்டு உள்ளது. இதற்காக ரூ. 5.00 இலட்சங்கள் செலவாகும். இந்த ஆய்வுப் பணிகளைத் தேர்ச்சி பெற்ற தனியார் நிறுவனம் மூலம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளன. இந்த ஆய்வில் குடிசைப்பகுதிகளில் ஏற்பட்டுள்ள பெருக்கத்தின் அளவினைத் தெரிந்து கொள்வதோடு குடிசைவாசிகளுக்குச் செய்யக்கூடிய பல்வேறு திட்டங்களை விரிவாக்குவதற்குப் பயன்படும்.

**வினா:**

குடிசைப் பகுதிகளில் உள்ள மக்கள் தொகை தற்போது எவ்வளவு?

**பதில்:**

குடிசைப் பகுதிகளில் சுமார் 2 இலட்சத்து 20 ஆயிரம் குடும்பங்கள் இருக்கின்றன.

**வினா:**

வெளியூர்களிலிருந்து வரும் மக்கட் தொகைக்கு இடவசதி செய்துதர திட்டம் ஏதேனும் உள்ளதா?

**பதில்:**

சென்னை நகரைச்சுற்றிலும் உள்ள காலி இடங்களில் உள்ள நிலங்களைக்கையகப்படுத்தி மனைகள் பிரித்துத் தரவும், வருமானத்திற்குத் தகுந்தாற்போல் கடனுதவி செய்து அவர்கள் தாங்களாகவே வீடு கட்டிக் கொள்ள வசதிகள் செய்து தரவும் திட்டமிடப்பட்டுள்ளது. இவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய தொழிற்சாலைகள் சென்னைப் புறநகர்களில் ஏற்படுத்துவதன் மூலம் இம் மக்கள் சென்னை நகருக்குள் பெருமளவு ஊடுருவுவதை ஓரளவு தடுத்து நிறுத்தலாம். இதற்கு 1,000 ஏக்கர் நிலப்பரப்பளவு தேவைப்படும் எனக் கருதப்படுகிறது.

குடிசைமாற்று வாரியத் தலைவர்

**திருமதி சுலோசனா சம்பத்**

— பேட்டி —

**வினா:**

புதுக்குடிசைகள் போடுவதைத் தடை செய்யும் திட்டம் உள்ளதா?

**பதில்:**

அரசு ஆணைப்படி 30.5.'77க்கு முன் குடிசைப் பகுதிகளில் வசித்து வரும் குடும்பங்கள்தான் குடிசை மாற்று வாரியத்தால் வழங்கப்படும் பல்வேறு பயன்களைப் பெறத் தகுதி பெற்றவர் ஆவர். எனவே, குடிசை மாற்று வாரிய எல்லாத் திட்டங்களிலும் 30.6.'77க்கு முன் வசித்த குடும்பங்களையே கணக்கில் கொண்டு வழிவகை செய்து தரப் படுகிறது.

எங்கெங்கு புதுக்குடிசைகள் உருவாகின்றன என்று தெரிய வருகிறதோ, அவைகளை வாரியம் அமைத்துள்ள தனிப்படை தடுத்து நிறுத்துகிறது.

**வினா:**

அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்திப் போடப்படும் புதுக் குடிசைகள் அப்படியே விட்டு விடப்படுகின்றன என்பது உண்மையா?

**பதில்:**

புதுக் குடிசைகள்போட யார் காரணமாக இருந்தாலும் சரி, யாருடைய செல்வாக்கைப் பயன்படுத்தி இருந்தாலும் சரி, அந்தப் புதுக் குடிசைகளைப் பிரிப்பதில் குடிசை மாற்று வாரியம் தயங்கியது இல்லை. எனவே, புதுக் குடிசைகள் போடப்படுவதில் அரசியல் செல்வாக்கு பயன்படுத்தப்படுகிறதோ என்ற ஐயப்பாடு சரியான கருத்து அல்ல.

**வினா:**

எத்தனை ஆண்டிற்குள் சென்னை மாநகரில் அனைத்துக் குடிசைகளையும் ஒழிக்க முடியும்?

**பதில்:**

குடிசைப்பகுதி மாற்று வாரியத்தைப் பொறுத்தமட்டில் ஒரு கால வரம்பு நிர்ணயித்து எல்லாக் குடிசைகள் அகற்றப்படுவதற்குத் திட்டம் தீட்டி நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்று ஆரம்ப காலத்திலிருந்து கடைப்பிடித்து வரும் கொள்கை ஆகும். அரசு வழங்கும் நிதித் தொகையைக் கணக்கில் கொண்டும் மற்றும் உலக வங்கித் திட்டத்தின் கீழும் குடிசைவாசிகளுக்கு எல்லா விதமான வசதிகளுடன் வாழும் பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டு உள்ளன. இருப்பினும் ஒரு குறிப்பிட்ட கால வரம்பிற்குள் எல்லாக் குடிசைகளும் ஒழிக்கப்படும் என்பதைத் திட்டவட்டமாகத் தற்போது கூறுவதற்கு இல்லை.

**வினா:**

குடிசை மாற்று வாரிய குடியிருப்பிற்கான வாடகை நிலுவை எவ்வாறு உள்ளது?

**பதில்:**

தற்போது குடியிருப்புகளுக்கு வசூலிக்கப்பட வேண்டிய பாக்கி ரூ. 1 கோடி என்ற அளவில் இருந்தாலும் தற்போது வசூலை அதிகம் ஆக்க பல்வேறு முயற்சிகள் எடுக்கப் பட்டு வருகின்றன.

**வினா:**

வாரியம் கொடுத்த வீட்டினை விற்று விட்டுப் போய்விடுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றனவா?

**பதில்:**

30.6.77க்கு முன் குடிசைப் பகுதிகளில் வாழ்ந்ததற்கு அத்தாட்சி வைத்திருப்பவர்கள் தான் குடிசைவாசிகள் என அங்கீகரிக்கப்பட்டவராவர். வாரியத்திற்குச் சொந்தமான சுமார் 40,000க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் இந்த அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளன. இக்குடியிருப்புகள் பல கைமாறியுள்ளதாக வாரியத்திற்குத் தகவல் கிடைத்துள்ளது. முதல் ஒதுக்கீடுதாரர் சென்ற இடம் தெரியாத காரணத்தினாலும், வாடகை நிலுவையினை ஏற்படுத்திச் சென்று விட்டதாலும், தற்பொழுது வசித்து வருபவர்கள் ஒதுக்கீட்டிற்காகப் பலமுறை முறையீடு செய்வதாலும் தகுதியுடைய குடிசைவாசியினைக்குடியமர்த்த முடியாமல் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

## பேட்டி 1 : ஜி. ஆனந்தன்

அதனால் ஏற்படும் காலதாமதத்தினால் வாரியத்திற்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது. குடியிருக்க வசதியற்ற ஏழை மக்கள் வேறு வழியற்ற நிலையிலும், மற்றவர் கொடுத்த தவறான அறிவுரைகளாலும் இருந்த பொருளையும் குடியிருப்பதற்காகக் கொடுத்து விட்டமையாலும் பொருளையும் இழந்து கண் கலங்கிய நிலையில் வேதனைப்படுகின்றனர். எனவே தற்பொழுது வசித்து வருபவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, ஒதுக்கீடு ஒழுங்கு செய்யப்படுகிறது.

வாரியத்தால் கொடுக்கப்படும் வீட்டினுள் ஒதுக்கீடுதாரர்கள்தான் வசிக்கிறார்





களா என்பதனை அவ்வப்போது சரிபார்க்க ஒதுக்கீடுதாரர்களின் குடும்பப் புகைப்படத்தினை ஒட்டிய ''பாஸ்புத்தகங்கள்'' தற்போது வழங்கப்படுகின்றன. வாடகை வசூலிக்கச் செல்லும் பணவசூலாளர்கள் ஒதுக்கீடு செய்தவர்கள் வசிக்கிறார்களா என்பதனைச் சரி பார்த்து செய்வதன் மூலம் குடிசைப்பகுதி மாற்று வாரியக் குடியிருப்பு கை மாறாமல் இருக்கும் என்பதைச் சரிபார்க்க உதவும் என நம்பப்படுகிறது.

**வினா:**

உலக வங்கித்திட்டத்தால் பயன் அடைபவர் எத்தனை பேர்?

**பதில்:**

120 குடிசைப்பகுதிகள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு உள்ளன. 33,696 குடும்பங்களுக்கு நில உரிமை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. இத்திட்டத்தின் கீழ் குடிசைவாழ் குடும்பங்கள் தாங்களாகவே வீடு கட்டிக் கொள்ளும் வகையில் கடன் உதவி வழங்க ரூ. 13 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 20,000 குடும்பங்களுக்கு இவ்வாண்டு ரூ. 170 இலட்சம் கடன் வழங்கப்பட உள்ளது.

**வினா:**

குடிசைமாற்று வாரியத் திட்டங்களை விறுவிறுப்பாய்ச்செய்வதில் தடை ஏதேனும் உள்ளதா?

**பதில்:**

குடிசைப்பகுதி மாற்று வாரியப் பணிகளுக்கு அரசால் வழங்கப்படும் நிதி உதவி போதுமானதாக உள்ளது. கடந்த ஆண்டு 6 கோடி ரூபாய் என்ற நிலையிலிருந்து இவ்வாண்டு 9 கோடிக்கு வாரியப் பணி மேற்கொள்ளுவதற்குத் திட்டம் வகுக்கப்பட்டு உள்ளது. எனவே நிதி பிரச்சினை இல்லை. பணிகளை மேற்கொள்ளும்பொழுது பொறாமைகொண்டவர்களில் மேற்படி திட்டத்தை வீண் அடிக்க முயலும் ஒரு சிலர் நீதிமன்றம் வரை சென்று தடை ஆணைகளைப் பெற்று, திட்டங்களுக்கு முட்டுக் கட்டைகளாக இருப்பது வேதனைக்கு உரிய செயலாகும். இவ்வாறு குடிசைப் பகுதி மாற்று வாரிய குடியிருப்புகள் விறுவிறுப்பாக நடைபெறாமல் ஒரு சிலரின் முயற்சிகள் தாமதிக்கின்றன என்பதை வலியுறுத்த வேண்டியுள்ளது.

## குடிசைமாற்று வாரிய குடியிருப்புப் பகுதிகளில்

குடியிருப்புத் திட்டப் பகுதிகளில் வில்லுப் பாட்டு, தெருக் கூத்து, ஓரங்க நாடகங்கள், கும்மி, கோலாட்டம் போன்ற கலை நிகழ்ச்சிகள் மூலம் குடியிருப்பினைப் பராமரிக்க வேண்டியதன் அவசியத்தையும், குடியிருப்பு பெற்ற ஒதுக்கீடுதாரர்களுக்குத் தேவைப்படும் பல்வேறு திட்டங்களைப் பற்றியும், தமிழக அரசின் சாதனைகளைப் பற்றியும் விளக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன.

வாரத்தில் வில்லுப் பாட்டு இரண்டும், தெருக்கூத்து நிகழ்ச்சி இரண்டும் தற்போது நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது 27 இடங்கள் டி.வி. செட் வைக்கப்பட்டுள்ளது. மேலும் பல இடங்களில் டி.வி. செட்டுகள் வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



# நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் கிடைக்கப்பெறும் உபரி நிலங்களின் உரிமை அளிப்பு (Assignment) கிராமப்புறங்களில் உள்ள ஏராளமான நிலமற்ற ஏழைகள் பயனடையச் செய்யும் சட்டம்

## சட்டத்தின் பெயர்

(1) 1979-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச்சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்டம் (தமிழ் நாடு சட்ட எண். 8/1980)

**பிரிவு 94. அரசு கையகப் படுத்திய நிலத்தை வினியோகம் செய்வது:**


இச்சட்டத்தின் கீழ் அரசு கையகப்படுத்திய நிலத்தை வினியோகம் செய்வதில், இச் சட்டத்தின் வகைமுறைகளின் காரணமாக எவருக்கு நிலம் இல்லாமல் போயிருக்கிறதோ அவருக்கு அல்லது எவர் ஒருவர் ஒரு பகுதி சாகுபடி செய்யும் குத்தகைதாரராகவும் ஒரு பகுதி சொந்தக்காரராகவும் அல்லது முழுவதுமே சாகுபடி செய்யும் குத்தகைதாரராக இருந்து, அவரது நில உடைமையின் அளவானது இச்சட்டத்தின் வகைமுறைகளின் காரணமாக, மூன்று ஏக்கர் புன்செய் நிலமாக அல்லது ஒன்றரை ஏக்கர் நன்செய் நிலமாகக் குறைக்கப்பட்டுள்ளதோ அவருக்கு நிலம் கொடுப்பதில் அரசு, முன்னுரிமை அளித்தல் வேண்டும்.

## சட்டத்தினால் அளிக்கப்பட்ட பயன்கள்

1961-ம் ஆண்டு தமிழ்நாடு நிலச்சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) கீழ் கையகப்படுத்தப்படும் உபரி நிலங்களை 1965-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச்சீர் திருத்தங்கள் (உபரி நிலங்களை வினியோகம் செய்தல்) விதிகளின் கீழ், ஒரு நபருக்கு உயர்ந்த அளவு 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரை உரிமையளிப்பு செய்யலாம். அதிக அளவிலான நிலங்கள், அதாவது 15 சாதாரண ஏக்கருக்கு மேற்பட்டு, ஆனால் அனுமதிக்கத்தக்க உயரளவான 5 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு உட்பட்ட நிலம், மேற்சொன்ன விதிகளின் கீழ் தகுதிவாய்ந்த நபர்களுக்கு உரிமையளிப்பு செய்யப்பட்டுள்ளதாக அரசின் கவனத்திற்கு வந்தது. 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்னும் இந்த உச்சவரம்பானது 1965-ம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டது.

அரசு புறம்போக்கு நிலத்தின் உரிமையளிப்புக்கான உச்சவரம்பு, 1971-ம் ஆண்டிலிருந்து, 3 சாதாரண ஏக்கர் புன்செய் அல்லது 1.5 சாதாரண ஏக்கர் நன்செய் நிலம் என்று குறைக்கப்பட்டது. நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் அரசால் எடுத்துக் கொள்ளப்பட்ட பெரும்பாலான உபரி நிலங்கள் சாகுபடி செய்யத்தக்க நிலங்களாக உள்ளன. மேலும், அவை புறம்போக்கு அல்லது வரி விதிக்கப்பட்ட தரிசு நிலங்களைவிட மதிப்பு வாய்ந்தவையாகவும் உள்ளன. உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் உபரி நிலங்களின் உரிமையளிப்புக்கான உயரளவை புறம்போக்கு நிலங்களுக்கு உள்ளதுபோல் குறைத்தால், நிலச்சீர்திருத்தத் திட்டத்தின் மூலம் ஏராளமான பேர் பயனடைவர் என்று அரசு கருதியது. எனவே அரசு, 1979-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச்சீர்திருத்தங்கள் இரண்டாவது திருத்தச் சட்டத்தின் மூலம், தகுதியுடைய நபருக்கு உரிமையளிப்பு செய்யப்படும் உயரளவை 5 ஸ்டாண்டர்டு ஏக்கரிலிருந்து 3 சாதாரண ஏக்கர் புன்செய் அல்லது 1.5 சாதாரண ஏக்கர் நன்செய் நிலமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

ஒரு நபர், நன்செய், புன்செய், ஆகிய இருவகை நிலங்களையும் உடையவராக இருந்தால் அவரது உடைமை அளவைக் கணக்கிடும் காரியத்திற்காக ஒரு ஏக்கர் நன்செய் நிலம், இரண்டு ஏக்கர் புன்செய் நிலத்திற்குச் சமமானதாகக் கருதப்படும் என்று வகை செய்யப்பட்டது. இச்சட்டம் 10-3-80-லிருந்து நடைமுறைக்கு வந்துள்ளது. மேற்சொன்ன திருத்தச்சட்டத்தின் விளைவாக நிலச்சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்படும் உபரி நிலங்களை அரசு வினியோகம் செய்வதில் நன்செய் நிலமாயிருந்தால் 1.5 சாதாரண ஏக்கருக்கு மேலும் எந்த நபரும் உரிமையளிப்பாகப் பெற்றுக் கொள்ள முடியாது. இதனால் ஏராளமான நபர்கள் பயனடைவதற்குச் சாத்தியமாகி உள்ளது.



# பாவையரின் சபதம்!

கல்விக் கூடங்கள் வெறும் பாடவிளக்கப் புத்தகங்களாக இல்லாமற் சமுதாயச் சிந்தை கொண்டு இயங்க வேண்டுவது மிக மிக இன்றியமையாதது. கல்வியின் பயனும் சமுதாயத்திற்கு அப்போதுதான் கிட்டும் என்பதில் ஐயமில்லை. அந்த வகையில் ஒரு சிறு முயற்சியாக எம்.வி. முத்தையாபிள்ளை அரசினர் மகளிர் கலைக்கல்லூரி, திண்டுக்கல், நாட்டு நலத்தொண்டின் ஒரு அம்சமாக, ஒரு புரட்சியை, ஒரு சமுதாய மாற்றுச் சிந்தையை மக்களிடையே பரப்பும் ஒரு செய்கையை மேற்கொண்டது. 7-2-1983 முதல் 16-2-1983 வரை வரதட்சிணை எதிர்ப்பு வாரம் இக்கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டது. வரதட்சிணை எதிர்ப்பு மட்டுமே இச்சமூதாயப் பிரச்சினையன்று. ஆனால் இதுவும் கொடியதோர் புற்று நோயால் சமுதாயத்தை அரித்து உண்மையை அழித்து வருகிறது. என்ற உணர்வை மக்களுக்கு உணர்த்தும் வகையில் இவ்வார விழா அமைந்தது.

சமுதாயத்தின் பாதியாகிய பெண்ணினத்துக்கு உரிமையும், சமத்துவமும் கோரும் வகையில் திருமணங்கள் வியாபாரச் சந்தைகளாக விளங்குவதைத் தடுக்கும் வகையில் சமுதாயத்தில் விழிப்புணர்வைத் தூண்ட எடுத்துக் கொண்ட இம்முயற்சி, பெண்கள் கல்லூரி வரலாற்றிலேயே மிகப் புதுமையானதும் அத்தியாவசியமானதும் கூட. கல்லூரி முதல்வர் டாக்டர் (செல்வி) சி.பார்வதி, வரலாற்றுப் பேராசிரியர் டாக்டர் வசந்தி தேவி, ஆசிரியர்கள், அலுவலர்கள் ஆகியோரின் முயற்சியாலும் சமூக சேவைசங்கங்கள் திண்டிமாநகர் அனைத்து நல்லியக்கங்களின் ஒத்துழைப்பாலும் இப்பெருமுயற்சி சிறப்பாக அமைந்தது.

## சரித்திரத்தில் பொறிக்கத்தக்க சாதனை

முதல் நாள் தொடக்க விழாவை முதல்வர் அவர்கள் தொடங்கி வைக்க, அகில இந்திய மாதர் சங்கத் தலைவி திருமதி சரோஜினி வரதப்பன் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்கள். வேறு எங்கும் காணாத ஒரு புது எழுச்சியை இந்த நிகழ்ச்சிகளில் காணுவதாகக் கூறிய திருமதி சரோஜினி வரதப்பன் அவர்கள் வெறும் சொல்லாக இல்லாமல் செயல்வேகம் நிரம்பிய ஆசிரிய மாணவர்களைப் பாராட்டினார்கள். "இதைவிடச் சிறந்த விழா இதுவரை நான் எங்கும் கண்டதில்லை. இதனை விழாவாக எடுக்காமல் வேள்வியாக எடுத்திருக்கின்றார்கள். சதி என்ற கொடுமை எங்ஙனம் நமது நாட்டினின்றும் நீக்கப்பட்டதோ அதுபோல வரதட்சணைக் கொடுமையும் கட்டாயம் நீக்கப்படவேண்டும். இத்தகைய நல்ல காரியத்தில் ஈடுபடும் இக்கல்லூரியின் பெயர் சரித்திரத்தில் பொறிக்கப்படும் என்று ஊக்கமளித்துப் பேசினார்கள். முதல்வர் அழைக்க மாணவிகள் பலரும் வரதட்சிணை கொடுத்துத் திருமணம் செய்து கொள்ளமாட்டோம் என்றும் ஆசிரியத் தாய்மார்களும் வரதட்சிணை கொடுத்தோ வாங்கியோ தாங்கள் பெற்றெடுத்த செல்வங்களுக்கு மணமுடிக்க மாட்டோம் என்றும் உறுதிமொழி எடுத்துக்கொண்டார்கள்.

## கையெழுத்து இயக்கம்

8-2-83 அன்று 1961ம் ஆண்டின் வரதட்சிணை ஒழிப்புச்சட்டத்தில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் பற்றி வழக்கறிஞர் திரு.செல்வராஜ் அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். சட்டத்தில் செய்யப்படவேண்டிய மாற்றங்களின் கோரிக்கை மனுவில் கையொப்பமிடும் கையெழுத்து இயக்கம் தொடங்கப்பட்டது. முதல்வர் டாக்டர் (செல்வி) சி. பார்வதி அவர்கள் முதல் கையெழுத்திட இயக்கம் தொடங்கப்பட்டது. அதில் ஆசிரியர்கள், மாணவிகள் அனைவரும் கையொப்பமிட்டனர். பொது



மக்களிடமிருந்தும் கையெழுத்து வாங்கப்பட்டது.

### பல கருத்துக் கோணங்கள்

*9-2-1983* அன்று வகுப்பறைகளில் குழுக் கரத்தரங்குகள் அமைந்து, கல்லூரியில் பயிலும் அனைத்து மாணவியரும் பங்கு கொண்டு வரதட்சிணை ஒழிப்பது எப்படி? என்பதைப் பற்றிய தத்தம் கருத்துக்களை வெளிப்படையாகக் கூறினர். இறுதியில் ஒவ்வொரு வகுப்பும் ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்தது.

வரதட்சணையைத் தனிமைப் படுத்தி, ஒரு குறுகிய் பிரச்சனையைப் பார்க்காமல், பெண்ணடிமையுடனும், சமுதாய அமைப்புடனும் அதனைப் பிணைத்துப் பார்த்து பரந்த கண்ணோட்டம் சில அறிக்கைகளில் வெளிப்பட்டன.

''நமது சமுதாய அமைப்பு, வர்க்க பேதங்கள், பொருளற்ற சமுதாய சடங்குகள் மனிதாபிமானமற்ற ஆளுமை உயர்வுகள் இவையனைத்துமே பெண்ணடிமைத்தனத்திற்குக் காரணங்களாகின்றன.

தயவுசெய்து பெண்களே! பாட்டாளிகளே! தொழிலாளர்களே, விவசாயிகளே, ஆண்களே அனைவரும் ஒன்று சேருங்கள்,'' இவை போன்ற அறிக்கைகள் உணர்வை தூண்டக்கூடிய வகையில் அமைந்தன.

*10-2-83* அன்று மாணவியருக்கான நாடகப் போட்டி நடைபெற்றது. வரதட்சிணையையும், பெண்ணின் நிலைமையையும் மையமாகக் கொண்ட ஏழு நாடகங்கள் இடம் பெற்றன.

### எரிக்கும் நிஜங்கள்

*14-2-83* பெற்றோர் தினமாகக் கொண்டாடப்பட்டது. திருமதி டாக்டர் மீனாட்சி முருகரத்தினம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம், திரு. சங்கர நாராயணன் (எஸ்.-டி.சி.) அவர்களும் நம்பிக்கை அளிக்கும் வகையில் பேசினார்கள். பெற்றோர் சார்பில் திரு முத்துலக்கையன் அவர்களும் இன்னும் சிலரும் தத்தம் கருத்துக்களைக் கூறினார்கள். ''எரிக்கும் நிஜங்கள்'' என்ற நாடகம் கல்லூரி மாணவிகளால் சிறப்புற நடத்தப் பெற்றது.

### ஆணுக்கும் ஒரு சாபக்கேடு!

*15-2-83* அன்று கல்லூரிகளுக்கிடையேயான பேச்சுப்போட்டியொன்று பேராசிரியர் புனித குமாரி அவர்கள் தலைமையில் ''பெண்ணடிமை, பெண்ணுக்கு மட்டுமல்ல ஆணுக்கும் ஒரு சாபக் கேடு'' என்ற தலைப்பில் இடம் பெற்றது. திண்டுக்கல் எம்.வி. முத்தையாபிள்ளை அரசினர் மகளிர் கலைக் கல்லூரி, ஜி.டி.என். கலைக்கல்லூரி, காந்திகிராம கிராமியப் பல்கலைக் கழகம், மதுரை சட்டக்கல்லூரி இவற்றைச் சேர்ந்த மாணவ மாணவியரும் இதில் பங்கேற்றனர்.

வரதட்சிணை எதிர்ப்பு வார விழாவின் இறுதி நாளான *16-2-83* அன்று மாலை 4 மணி அளவில் வரதட்சிணை எதிர்ப்பு ஊர்வலம் தொடங்கியது. கல்லூரி முதல்வர் டாக்டர் (செல்வி) சி.பார்வதி அவர்கள் தொடங்கி வைத்து, வரலாற்றுத்துறை பேராசிரியர் டாக்டர் வே.வசந்தி தேவி, பேராசிரியர் வசந்தா (ஆங்கிலம்) ஆகியோர் உடன் நடந்துவர ஊர்வலம் திண்டுக்கல் முக்கிய வீதிகளின் வழியாக ஏறக்குறைய 2 மணி நேரம் தொடர்ந்தது. கல்லூரி ஆசிரியர்கள், அலுவலர்கள் மாணவிகள் அனைவருமாக ஏறக்குறைய ஆயிரம் பேர் ஊர்வலத்தில் பலத்த முழக்கங்கள் எழுப்பியவாறு சென்றனர். காந்திகிராம கிராமிய பல்கலைக் கழகத் துணைவேந்தரின் துணைவியார் திருமதி மினோதி அறம் அவர்களும், கமலாநேரு மாதர் சங்க மகளிர் சிலரும், மாணவியரும் மிக உற்சாகத்துடன் கலந்து கொண்டனர். டட்லி மேல்நிலைப்பள்ளி நாட்டுத் தொண்டுத்திட்ட மாணவர்களும் எம்.எஸ்.பி. சோலை நாடார் பள்ளி மாணவர்கள் சிலரும் கலந்துகொண்டனர்.

''பெண்ணின் எழுச்சி நாட்டின் எழுச்சி''
''சமூகத்தின் பாதிக்கு நீதி கேட்கிறோம்''
''வாங்காதே வாங்காதே வரதட்சிணை வாங்காதே''
''கொடுக்காதே கொடுக்காதே வரதட்சணைகொடுக்காதே'

போன்ற பல முழக்கங்களை வீராவேசமாக முழங்கிச் சென்றனர்.

### தீயதை அழிப்போம்

டட்லி மேல்நிலைப்பள்ளியிலிருந்து தொடங்கிய ஊர்வலம் அதே இடத்திற்கு திரும்பிய பின் மாலை 6 மணியளவில் பொதுக் கூட்டம் தொடங்கியது. திருநெல்வேலி மண்டல துணைக்கல்லூரிக் கல்வி இயக்குநர், ஏ.சங்கர ராஜுலு அவர்கள் தலைமை ஏற்றுப் பேசினார். இன்றைய சமுதாயத்திற்கு விழிப்புணர்ச்சித் தீமூட்ட எடுத்துக்கொண்ட இப்பெரும் முயற்சியில் ஈடுபட்ட அனைவரையும் பாராட்டினர். கல்லூரி முதல்வர் (டாக்டர் செல்வி) சி.பார்வதி அவர்கள் அவையினர் அனைவரையும் வரவேற்றுப்பேசினார்கள். நம்முடைய நாட்டை தாய்நாடு என்றுதான் அழைக்கிறோம். நம் நாடு ஆன்மீகம், கலாச்சாரம், வரலாற்றுப் பெருமை பெற்றநாடு. அதிலும் தமிழ்நாட்டிற்கு என்று தனிப்பாரம்பரியம் ஒன்று உண்டு. தாய்க்குலத்தைப் பெருமைப் படுத்திய நாடு, இப்போதும்கூட அமைச்சர், மாவட்ட ஆட்சியாளர் முதல் பல துறைகளிலும் பெண்களுக்கு நல்ல வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் திருமணம் என்பதை ஒரு ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் இடையே ஏற்படும் புனிதமான பந்தத்தை சந்தைக் கடைச்சரக்காக ஆக்கக்கூடாது. பெண், அதுவும் தமிழ்ப்பெண் பொறுமைக்கே இலக்கணம், அவளை அந்த எல்லைக் கோட்டிற்குப் பின்னால் தள்ளி விடாதீர்கள். ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே என்ற ஒரு பழமொழி உண்டு. அதற்கு நான் இப்படி ஒரு விளக்கம் தருகிறேன். நல்லதை ஆக்குவோம். தீயதை அழிப்போம் என்று முதல்வர் முழங்க மாணவியர் அனைவரும் சேர்ந்து முழக்கமிட்டனர்.

திருமதிசுஃப்ராபேகம்பாரதியாரின் கும்மிப் பாடலைக் குழுவோடு பாடினார்.

## திண்டுக்கல் ஒரு திருப்பு முனை

சமுதாய மறுமலர்ச்சியிலே திண்டுக்கல் ஏன் திருப்புமுனையாக அமையக்கூடாது! மதுரை மாவட்டம் மாத்திரம் அல்லாமல் தமிழகமோ இந்தியாவோ திருப்புமுனையாக அமையும் எனக்கு வரும்பொழுது இருந்த நம்பிக்கை இன்னும் குறைந்த, புதியதோர் நம்பிக்கை தழைத்து வளர்கின்றன. வெறும் பொழுது போக்கு நிகழ்ச்சியாகவே ஆரவார நிகழ்ச்சியாகவோ அமையாமல், இதயத்திலே ஆழப்பதிந்த நிகழ்ச்சியாக இந்நிகழ்ச்சியைக் கருதவேண்டும் என்றார் திருநெல்வேலி மண்டல கல்வி இணை இயக்குநர் திரு சங்கரராஜுலு.

## மதுரை மாவட்ட ஆட்சியாளர்

இந்நிகழ்ச்சி நம்முடைய மாவட்டத்தில் மிக முக்கிய நிகழ்ச்சி இதன் நோக்கம், பொது மக்களுக்கு வரதட்சிணைக் கொடுமையை எடுத்துக்கூறி, நாடு அதில் எந்த அளவுக்கு ஈடுபட்டிருக்கிறது, இதில் யார் யாருக்குப் பொறுப்பு என்பதை விளக்குவதாகும். பெண்கள் தங்களுக்குக் கொடுமை இழைக்கப்படும்போது நீதிமன்றத்திற்கும் சென்று வழக்காடுவதைவிடக் கொடுமையைச் சகித்துக்கொண்டுவாழ்கிறார்கள். மீறினால் துன்பத்திற்கு ஆளாகிறார்கள். ஆகவே, இந்தச் செய்தி யார் யார் காதில் போய் விழவேண்டுமோ, அவர்கள் காதில் விழுந்ததா, யார் யார் மனம் மாற்றம் அடையவேண்டுமோ அவர்கள் மனம் மாற்றம் அடைந்தனரா எனப் பார்க்கவேண்டும். வரதட்சிணை வாங்குவது ஒருகீழ்த்தரமானது. எந்த ஆண் மகனைப் பெற்றதாய் சபதமேற்கொண்டு அந்த இழிதொழிலைச் செய்ய மாட்டேன் என்கிறாளோ அவளே தூயதமிழ்த்தாய். இம்மாதிரியான யான முயற்சியில் எதுவும் செய்ய முடியும் என்றால் நான் உறுதுணையாக உங்களுக்கு இருப்பேன் என்றார் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆவுடையார் பிள்ளை அவர்கள்.

தஞ்சை மகளிர் கலைக்கல்லூரி தமிழ்த் துணைப் பேராசிரியை சாரதா நம்பியாரூரன் பேசிய போது — 11-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த விக்ரநேசுவரர் என்ற சமூக சீர்திருத்தவாதி. 'ஸ்திரீதனம்' என்ற பெயரில் பெண்ணுடன் பொருள் கொடுக்கும் வழக்கத்தை ஏற்படுத்தினார். ஆணைப்போலப் பெண்ணும் குடும்பச் சொத்தில் உரிய பகுதியைப்பெற்று நிரந்தர வருமானத்தைப் பெறவேண்டும் என்ற நோக்கத்துடன் ஏற்படுத்தினார். நல்ல நோக்கத்துடன்ஆரம்பிக்கப்பட்ட இப்பழக்கம் சமுதாயத்தின் பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது. மணமேடைக்குச் செல்லத்தயாராக இருக்கும் இளங்காளையர்களே! உங்களைப் பார்த்து கூறுகிறேன். காஞ்சிப் பெரியவர்கள் ஒரு விஷயத்தில் பிள்ளைகள் பெற்றோர் கருத்தை மறுக்கலாம் என்கிறார். வரதட்சிணையும் சீரும் கேட்காவிட்டால் தான் திருமணம் செய்து கொள்வேன்'' என்று பிள்ளைகள் சத்தியாகிரகம் செய்யவேண்டும். இப்படி செய்தால் எந்தப் பெற்றோரின் மனமும் மாறாமல் போகாது இதுதான், இப்போது இளைஞர்கள் செய்யவேண்டிய பெரிய சீர்திருத்தம் என்றார்.

பிரபல நாவலாசிரியர் தீபம் நா. பார்த்தசாரதி அவர்கள் பேசியதாவது.—

''பெண்ணைப் பெற்றவர்கள் என்றாலே சில சுயமரியாதைகள் இருக்கக்கூடாது என்ற கருத்துக்குப் பெண்ணைப் பெற்றவர்களும் துணை போவது கேவலம். மாட்டுச் சந்தையில் மாட்டைப் பிடித்து வருவதுபோல் பெண் பார்க்கும் படலம் என்ற பெயரில் ஒருவன் வந்து பாடத் தெரியுமா ஆடத்தெரியுமா என்று கேட்கிறான். பெண்கள் தாழ்வாக நடத்தப்படுகிறார்கள். ஆண்கள் உயர்வாக நடத்தப்படுகிறார்கள். அவர்கள் ஆண்களைப் பார்த்து, உனக்குக் காதுகேட்குமா? ஊமையா? நடக்கத்தெரியுமா? கால் நொண்டியா எனக் கேட்க வேண்டும். பெண்ணைப் பெற்ற தாய்மார்களுக்குத் தன்மானம் வேண்டும். அதுபோல் ஆணைப் பெற்ற தாய்மார்களுக்கும் தன்மானம் வேண்டும்.

**திருமதி அறம் பேசுகையில் :-**

கல்வி என்பது வெறும் பட்டப் படிப்பு மட்டும் அல்ல. வாழ்க்கை தான் கல்வி. எனவே மாணவர்களாகிய நீங்கள் வாழ்க்கையை தொடங்குகிறபோது உங்கள் மாமனாரிடம் ஒரு பைசா வரதட்சிணை வாங்கமாட்டேன் என முடிவு செய்து கொள்ளுங்கள். இது ஒரு பெரிய பிரச்சினை. இப்பிரச்சினை, நாட்டின் மற்றைய முன்னேற்றத்திட்டங்களை நடக்கவிடாமல் செய்யகூடியது என்றார்.

மதுரை சமூகப் பணியியல் கல்லூரி இயக்குநர் கேப்டன் ராஜா அவர்கள், வரதட்சிணை என்பது இருபாலருக்கும் பொதுவான பிரச்சனை. இது விரைவில் நிச்சயமாகத் தீர்க்கக்கூடிய பிரச்சினை. ஒரு பரிசாகத் தொடங்கிய பழக்கம் ஒரு பிரச்சினையாக மாறிக் கொடிய உருவெடுத்துள்ளது என்று பேசினார்.

வரலாற்றுப் பேராசிரியை டாக்டர் வே. வசந்திதேவி வரதட்சணை எதிர்ப்பு வாரத்தின் பின் நிற்கும் குறிக்கோள்களை விளக்கினார். வரதட்சிணைப் பிரச்சினையைத் தனிமைப் படுத்தும் குறுகிய கண்ணோட்டத்திலிருந்து அதைப் பெண்ணடிமையுடனும், சமுதாயத்தின் பொருளாதார அமைப்புடனும் பிணைந்து கிடக்கும் பிரச்சினையாகப் பார்க்க வேண்டும். இது ஆண்களைப் பெண்கள் எதிர்க்கும் இயக்கம் அன்று.

இறுதியாகப் பேசிய பேராசிரியர் சாலமன் பாப்பையா அவர்கள், வரதட்சிணையை எல்லாச் சமயத்தினரும், எல்லா சாதியினரும் திட்டமிட்டு வாங்குகின்றனர். கொடுக்கவும் தயாராக இருக்கின்றனர். மாணவிகள் கூட்டத்தில் இருக்கும்போது மட்டுமின்றிக் கல்லூரியை விட்டுதனித் தனியே சென்ற பின்னும் இதே மனவுறுதியோடு நின்று போராட வேண்டும் என்று பேசினார்.



# கதிர்மணிகள் பெருக்கிட கழனியிலே சந்திப்போம்!

தாரணியில் பரணிபாடும் தங்கத் தமிழ்நாட்டில், தமிழக அரசு பற்பல பயனுள்ள புரட்சித் திட்டங்களைச் சட்டமாக்கி வெற்றிகரமாகச் செயலாற்றி வருகிறது. அவ்வாறு அமலாக்கப்பட்ட பயனுள்ள உற்பத்திப் பெருக்குத் திட்டம் தான் பயிற்சி வழித் தொடர்புத் திட்டம்.

பயனுள்ள வேளாண்மை ஆராய்ச்சி முடிவுகளை உடனுக்குடன் சிறு, குறு உழவர்களுக்குத் தெரிவித்து செயல்முறைகளை விளக்கி மகசூல் திறனை ஓங்கிடச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். புதுக்கோட்டை மாவட்டத்தில் இத்திட்டம் 1981ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.





இத்திட்டம் அன்னாபண்ணையை தலைமையிடமாகக் கொண்டு செயலாற்றி வருகிறது.

எவ்வகை நிலமாக இருந்த போதிலும், எவ்வளவு குறைவான விளைச்சலை தற்சமயம் தந்திட்ட போதிலும், அதே நிலத்தில் குறுகிய காலக்கெடுவில் சிறந்த விளைச்சல் எடுத்திட, பயிரின் வளர்ச்சிக் கூட்டத்திற்கு ஏற்ற தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற விரிவாக்கப் பணியாளர்கள் குறிப்பிட்டநாட்கள்தோறும் சிறு, குறு, பெரு உழவர்களைக் கழனியிலே சந்தித்து ஆற்றல் திறனை வளர்த்து செயலாற்றிட தூண்டுதலே இத்திட்டத்தின் உயரிய நோக்கமாகும்.

### தொழில் நுட்க் கருத்தரங்கு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக ஆராய்ச்சி நிபுணர்கள் வம்பன் பண்ணையிலிருந்தும் புதுக்கோட்டை மாவட்டத்தில் பணிபுரியும் வேளாண்மைத்துறை விரிவாக்க வல்லுநர்களும் குடுமியான்மலை ஆராய்ச்சிக் கூடத்தில் மாதம் ஒரு முறை கூடி வரும் மாதத்தில் பயன்படுத்தக்கூடிய வேளாண்மைத் தொழில் நுட்பங்கள் பற்றி கலந்து பேசி முடிவெடுக்கப்படுகிறது. தொலை தூரக் கிராமங்களில் பிரச்சினைக்கும் இக்கருத்தரங்கில் தீர்வு காணப்படுகிறது. பரந்த தரிசு நிலங்களுக்குகூட பயனுள்ள பரிந்துரை உருவாக்கப்படுகிறது.

இரண்டாம் நாள் கருத்தரங்கில் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தைச் சார்ந்த வேளாண்மை வல்லுநர்களுக்குப் பயிற்சி அளிக்கும் முறைபற்றி ஒத்திகை பார்க்கப்படுகிறது.

புதுக்கோட்டை, கீரனூர், திருமயம், அறந்தாங்கி உட்கோட்டத்தில் ஆங்காங்கே பணிபுரியும் வேளாண்மை அலுவலர்களுக்கும் மற்றும் கிராம விரிவாக்கப் பணியாளர்களுக்கும் மாதம் இரு முறை முதல் மற்றும் மூன்றாம்



வெள்ளிக் கிழமை பயிற்சி அளிக்கப்படுகிறது. மாலைக் கூட்டத்தின் உழவர்களுக்கு, எவ்வாறு தொழில் நுட்பங்களை அறிவிப்பது—பற்றி கிராம விரிவாக்கப் பணியாளர்களுக்கு ஒத்திகை அளிக்கப்படுகிறது.

### திட்டத்தினால் ஏற்படும் நன்மைகள்

குறிப்பிட்ட கிழமைகளில் இரு வாரங்களுக்கு ஒரு முறை கிராம விரிவாக்கப் பணியாளர்கள் விவசாயிகள் கழனிகளில் சந்திக்க வாய்ப்பு ஏற்படுகிறது.

1. உழவர்கள் நவீன விஞ்ஞான முறைப்படி பயிர் செய்ய வழி ஏற்படுகிறது. 2. உழவர்கள் விளைச்சல் திறனை அதிகரிக்க வாய்ப்பு ஏற்படுகிறது. 3. கிராமங்களில் மொத்த உற்பத்தித் திறன் அதிகரிக்கப்படுகிறது. 4. உழவர்கள் தங்கள் நிலங்களில் காணப்படும் குறைகளைத்தீர்க்க வழி ஏற்படுகிறது. 5. உழவர்களின் பொருளாதார நிலை உயருகிறது. 6. நாட்டின் பொருளாதார நிலையில் முன்னேற்றம் அடைகிறது.



### செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் —

1. விதை உற்பத்தி மற்றும் விதை விநியோகம், 2 உயர் விளைச்சல் ரகத்திட்டம். 3. பயிர் பாதுகாப்புத் திட்டம். 4. உர விநியோகம். 5. பயறு வளர்ச்சித் திட்டம்.6. அனுசரணை ஆராய்ச்சிப் பாத்தி விளக்கப் பாத்தி மற்றும் பெருவிளக்கப் பண்ணைகள். 7. மண் பரிசோதனை. 8. மரம் நடும் திட்டம். 9. பயிர் மதிப்பீட்டு ஆய்வுத்திட்டம். 10. பருத்தி வளர்ச்சித் திட்டம். 11. புஞ்சை நில வளர்ச்சி திட்டம். 12. நீலப்பச்சைப் பாசி உற்பத்தித் திட்டம். 13. நிலக்கடலை, எள், சூரியகாந்தி, தென்னை, வளர்ச்சித் திட்டம்.

# விளையும் பயிர்

பள்ளிப் பருவத்திலேயே மாணவ மணிகள், பல்வேறு துறைகளிலே சிறந்து விளங்கிடப் பார்க்கிறோம். அந்த வகையில் சென்னை சர்ச் பார்க் பள்ளியில் ஐந்தாவது வகுப்பு பயிலும் மாணவி மீனா சுப்பையா நடனக் கலையில் சிறந்து விளங்குகிறார்.

பள்ளி விழாக்களில் நடனம் ஆடி, பரிசும் பாராட்டுகளும் பெற்றுள்ள இவருக்கு வயது ஒன்பது.

அண்மையில், இவரது பரத நாட்டிய அரங்கேற்றம் சென்னை மியூசிக் அகாடமியில் நடந்தது. டாக்டர் ராஜா சர் எம்.ஏ.முத்தையா செட்டியார், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு எஸ். வி. சிட்டிபாபு ஆகியோர் இம் மாணவியை வாழ்த்தி வெகுவாகப் பாராட்டினார்கள்.

## மாணவர் பக்கம்



ராக்கெட் கார் மூலம் தரையில் மிக வேகமாகச் சென்றவர் கேரி கேபலிக். இவர் 1970-ஆம் ஆண்டு அக்டோபர் 23-ஆம் நாள் அமெரிக்காவில் 'புளு பிளேம்' என்ற ராக்கெட் காரை மணிக்கு 622 மைல் வேகத்தில் ஓட்டிக் காட்டினார்!

卐

உலகத்திலேயே மிகப் பெரிய உயிரினம் நீலத் திமிங்கிலம். இது சராசரியாக 100 அடி நீளமுடையது. எடை 200 டன்.

卐

உலகத்திலேயே மிகவும் வேகமாகச் செல்லும் மிருகம்சிறுத்தை. இது மணிக்கு 60 மைல் வேகத்தில் செல்லக்கூடியது!

## தெரிந்து கொண்டால் நல்லது...!

உலகத்திலேயே மிகவும் உயரமான தங்கும் விடுதி அமெரிக்காவில் அட்லாண்டா நகரிலுள்ள 70 மாடி பீச் ட்ரீ செண்டர் பிளாசா ஓட்டல் ஆகும். 1100 அறைகளுள்ள இந்த விடுதியின் உயரம் 723 அடி!

卐

உலகத்திலேயே மிக நீளமான சுவர் சீனாவிலுள்ள பெரிய சுவராகும். இதன் நீளம் 2150 மைல். கிறிஸ்துவுக்கு முன் 3-வது நூற்றாண்டில் இது கட்டப்பட்டது. இதைக் கட்டி முடிக்க 3 இலட்சம் தொழிலாளிகள் பத்து ஆண்டுகள் உழைத்திருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

உலகத்திலேயே மிகப் பெரிய நூலான 'நேஷனல் யூனியன் கேட்லாக்' என்ற நூல் இங்கிலாந்தில் வெளியிடப்பட்டது, இந்த நூலின் நீளம் 125 அடி!. எடை 2.5 டன்! தயாரிப்புச் செலவு 3 இலட்சம். ரூபாய்! இந்த நூலில் அச்சுக்கலை கண்டு பிடிக்கப்பட்ட காலத்திலிருந்து இன்று வரை மேல்நாட்டில் வெளியிடப்பட்டுள்ள அனைத்து நூல்களின் பட்டியலும் கொடுக்கப் பட்டுள்ளது.


卐

உலகத்திலேயே இரண்டாவது பெரியதும், ஆசியாவிலேயே மிகப் பெரியதுமான புத்தக விற்பனை நிலையம் பெங்களூரில் உள்ளது.

இதிலுள்ள புத்தக அலமாரிகளின் மொத்த நீளம் ஒரு கிலோ மீட்டர்! மொத்தம் 10 இலட்சம் புத்தகங்களை இதில் அடுக்கி வைக்கலாம்! உலகத்திலேயே மிகப் பெரிய புத்தக நிலையம் இலண்டனிலுள்ள பிளாக் வெல் புத்தக நிலையமாகும்.

### கடிகாரம்

இத்தாலியர்கள்தான் கடி
காரம் செய்யத் திட்டமிட்டனர்.
1504-ல் நூரம்பர்க்கைச் சேர்ந்த
பீட்டர் கென்வின்செய்தகடிகாரம்
மிகப் பழமையானது. 1551-ல்
ஜாக்யூஸ்டிலா கிரேட் என்ற
பிரெஞ்சுக் காரர் செய்த கடி
காரம் பாரிசில்உள்ளது. சட்டைப்
பையில் வைக்கும் கடிகாரம்
1625-ல் செய்யப்பட்டது. 1704-ல்
ஜுவல்ஸ் கடிகாரம்
சுவிட்சர்லாந்தில்செய்யப்பட்டது.


“கோ-ஆப்டெக்ஸ் ஆடைகள்” என
பார்த்தாலே தெரிகிறது
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

மிழரசு
16-5-1983
Licence No. TN/MS(C)/PP-23
பதிவு எண். M. 8676

